
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

16 — 28 பிப்ரவரி '89
1 — 15 மார்ச் '89
4-7-8
விலை ரூ. 1-50

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




படிப்பகம்

www.padippakam.com

# துரோகிகள் ஆக்கிரமிப்பாளர் முகத்திலே கரிபூசினார்கள் ஈழமக்கள்

தமிழக சட்டமன்றத் தேர்தல் முடிவுகளைப் போலவே இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளும் பாசிச ராஜீவ் கும்பலின் எதிர்பார்ப்புகளைப் பகற்கனவுகளாக்கி விட்டன. இருந்த போதும் "ஏறக்குறைய 60 சதவிகித மக்கள் வாக்களித்தனர். ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்று விட்டது; தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் மக்கள் விடுதலை முன்னணி (ஜேவிபி) ஆகிய தீவிரவாதக் குழுக்களின் புறக்கணிப்புக் கோரிக்கையையும் வன்முறைப் பாதையையும் மீண்டும் நிராகரித்து விட்டார்கள், இலங்கை மக்கள் என்கிற சாக்கு, சமாதானப் பொய்ப் பிரச்சாரம் செய்கிறது பாசிச ராஜீவ் கும்பல்.

உண்மையோ வேறு விதமாக உள்ளது. இலங்கையின் இரு பிரதானக் கட்சிகளுமே இந்திய இராணுவம் அங்கே நீடிப்பதை எதிர்ப்பதாகக் கூறித்தான் ஓட்டுப் பொறுக்கின. 59 சதவிகித மக்களே வாக்களித்துள்ளனர். அதுவும் ஆளும் கட்சியின் எடுபிடியான தொண்டமானின் தயவிலே மலையகத் தமிழர்கள் ஏறக்குறைய 85 சதவிகிதத்தினர் வாக்களித்ததால் மொத்த வாக்குப்பதிவு கணிசமான அளவு உயர்ந்துள்ளது. தென்னிலங்கையில் பல வட்டாரங்களில் ஒரு சதவிகிதத்தினரே வாக்களித்தனர். அங்கும் கிராமப் புறங்களிலே 30 சதவிகிதத்துக்கும் குறைவானவர்களே வாக்களித்தனர். மொத்தம் 93 லட்சம் வாக்காளர்களில் 28 லட்சம் பேரே அதாவது 30 சதவிகிதத்தினரே ஆளும் கட்சியை ஆதரித்தனர். இந்தத் தேர்தல்களிலும் எவ்வளவு மோசடிகள் நடந்துள்ளன என்கிற விவரம் இனிமேல் தான் வரும்.

ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தையும், இந்திய ஆக்கிரமிப்பையும் அப்படியே ஏற்று ஆதரித்து வந்த போலி சோசலிஸ்டுகள், போலிக் கம்யூனிஸ்டுகள் அடங்கிய கூட்டணி இந்தத் தேர்தல்களிலே ஏறக்குறைய துடைத்தெறியப்பட்டு விட்டது.அதே போல ஈழத்திலே நடந்த தேர்தல்களிலே பாசிச ராஜீவ் கும்பலின் அடிவருடிகள் மண்ணைக் கவ்வியுள்ளனர்.

அமிர்தலிங்கம் - சிவசிதம்பரம் தலைமையிலான "தமிழர் ஐக்கிய விடுதலை" முன்னணி என்ற கடைந்தெடுத்த துரோகக் கும்பல் படுதோல்வி அடைந்துள்ளது. "சிங்கள மற்றும் இந்திய இராணுவங்கள் நடத்திய மக்கள்திரள் படுகொலையைத் தமிழ் மக்கள் சந்தித்துக் கொண்டிருந்த போது, ஆறு ஆண்டுகள் சென்னை விருந்தினர் மாளிகையில் புகுந்து கொண்டு அரசியல் போராட்டங்களில் இருந்து அந்நியப்பட்டுப் போன இந்தச் சுயநலக்கும்பல் இப்போது இலங்கை நாடாளு மன்றத்துக்குத் தம்மைத் தேர்ந்தெடுக்கும் படி பிச்சையெடுக்கிறார்கள்" என்று புலிகள், அமிர்தலிங்கம் கும்பல் மீது குற்றஞ்சாட்டியது. அதை அங்கீகரிக்கும் வகையிலே அக்கும்பலை ஈழமக்கள் தோற்கடித்து மண்ணைக் கவ்வச் செய்துள்ளனர்.

பாசிச ராஜீவ் கும்பல், ஈழத் துரோகிகள் அடங்கிய தமது கைப்பாவை அரசை ஈழத்தில் நிறுவுவதற்காக கடந்த நவம்பரில் நடத்திய தேர்தல்கள் எவ்வளவு மோசடியானவை என்று இந்தத் தேர்தல் முடிவுகள் நிரூபித்து விட்டன. ஈழத்தின் மாகாண சபைத் தேர்தலிலே பெரும்பான்மையாக, குறிப்பாக வடபகுதியிலே போட்டியின்றி ஈழத் துரோகக் கும்பலைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் ராஜீவ்–ஜெயவர்த்தனே ஒப்பந்தம் உட்பட அதன் அனைத்து நடவடிக்கைகளையும் ஈழமக்கள் ஆதரிப்பதாகப் பீற்றிக் கொண்டனர். அது துப்பாக்கி முனையிலே நடந்த மோசடிதான். ஈழத் துரோகக் கும்பலின் படுதோல்வி இதையே காட்டுகிறது.

சுயேச்சைகளாகப் போட்டியிட்ட ஈரோஸ் என்ற சமரசவாத அமைப்பு ஈழத்தின் பெரும்பான்மையான இடங்களைப் பிடித்துள்ளது. இந்தத் தேர்தலையும் புறக்கணிக்கும்படி கோரியபோதும் புலிகள்,ஈரோஸ் அமைப்பை ஆதரித்ததாக கூறப்படுகிறது. அதை உறுதி செய்யும் ஆதாரபூர்வமான தகவல்கள் இன்னும் கிடைக்கவில்லை. ஈரோசின் தலைமையும் துரோகிகள், சந்தர்ப்பவாதிகள், சமரசவாதிகளைக் கொண்டதுதான், என்றபோதும் "மக்கள் கருத்தறியவே தேர்தலில் போட்டியிட்டோம்; நாடாளுமன்றத்துக்குப் போகமாட்டோம்; புறக்கணிப்போம்" என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் பெரும்பான்மையான ஈழமக்கள் மீண்டும் ஒருமுறை தெளிவுபட , உறுதிபட தமது கருத்தைச் சொல்லியுள்ளார்கள். ராஜீவ்: -ஜெயவர்த்தனே ஒப்பந்தம் இந்திய ராணுவ ஆக்கிரமிப்பு உட்பட இந்திய -இலங்கை பாசிஸ்டுகளின் எந்தத் தீர்வையும் ஈழமக்கள் ஏற்கவில்லை,முற்றாக நிராகரிக்கிறார்கள். விடுதலை—சுதந்திரத்துக்கான சுய நிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு உறுதியான ஆதரவு தருகிறார்கள். புலிகளின் அனைத்து நடவடிக்கைகளையும் அப்படியே ஏற்காவிடினும் ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தில் அவர்களையே ஆதரிக்கின்றனர்.

இராணுவ ரீதியில் புலிகள் முடக்கப்பட்டு விட்டார்கள் என்று தொடர்ந்து இந்திய, இலங்கை பாசிஸ்டுகள் பிரச்சாரம் செய்தபோதும் அங்கிருந்து வரும் செய்திகள் அதை மறுக்கின்றன. சமீபத்தில் கூட புலிகளின் தாக்குதல்களும் இந்திய இராணுவத்தின் இழப்புகளும் அதிகரித்துள்ளன. "யாழ் வளைகுடாப் பகுதியிலிருந்து 300 இளைஞர்கள் புதிதாகப் புலிப் படையில் சேர்ந்துள்ளனர். சிவில் நிர்வாகம், வங்கிகள், அஞ்சலகங்கள் ஆகியவற்றைத் திறப்பதும் மூடுவதும் கூட புலிகள் விருப்பப்படி செய்ய முடியும். அவ்வளவு கட்டுப்பாடு, செல்வாக்கு புலிகளுக்கு இருக்கிறது" என்று இந்தியப் பத்திரிக்கைகள் எழுதுகின்றன. சமீபத்தில் யாழ் பல்கலைக் கழகத்தைத் திறந்தவுடன் இந்திய இராணுவத்துக்கு எதிராக புலிகளுக்கு ஆதரவாக வெற்றிகரமான ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளார்கள், மாணவர்கள்.

பாசிச ராஜீவ் கும்பலைப் பொறுத்தவரை இலங்கையிலே மூன்று தேர்தல்கள் நடத்தி விட்டதையே பெரும் வெற்றி என்று பீற்றிக் கொண்ட போதும், தப்பிக்க வழியின்றி முட்டுச் சந்திலே போய் சிக்கிக் கொண்ட நிலையில் தான் உள்ளது. தனிஈழம் தான் ஒரே தீர்வு என்று இதுவரை சவடால் அடித்துவந்த கருணாநிதி, "இப்போதும் ஈழம் தான் எனது விருப்பம், இருந்தாலும் அது சாத்தியமில்லை" என்று ஆட்சியைப் பிடித்ததும் அடக்கி வாசிக்கிறார். ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ராஜீவுடன் சமரசம் செய்து கொள்வார் என்பது நிச்சயம் என்றாலும் எம்.ஜி.ஆர். அளவு சரணடைந்து, தனது சொந்த அரசியல் ஆதயங்களை விட்டுக் கொடுக்க மாட்டார், கருணாநிதி. எனவே மீண்டும் போர் ஓய்வு, புலிகளுடன் சமரசப் பேச்சு வார்த்தைகள் என்கிற நாடகம் - பேரம் நடக்கும். "கருணாநிதியன் முயற்சியினால் தீர்வு" என்கிற அளவு, அதுவும் நாடாளுமன்றத தேர்தல் வரவிருக்கும் சமயத்தில் ராஜீவும் விட்டுக்கொடுக்க போவதில்லை. (ரொக்கத் தொகை தவிர) வேறு அரசியல் சலுகைகள் வழங்குவதற்காக ராஜீவ் -பிரமதேசாவிடம் எதுவுமே இல்லை. அதாவது ஈழ மாகாண ஆட்சி உரிமையைப் புலிகளுக்குத் தருவதாகப் பேரம் பேசக்கூட முடியாதவாறு தேர்தலும் நடத்தி கைப்பாவை ஆட்சி நிறுவிவிட்டனர். அதைக் கலைக்கும் பேரம் ராஜீவ் கும்பலை இன்னும் மோசமாக அம்பலப்படுத்திவிடும். அதே சமயம் சிங்கள இனவெறியர்களின் நிர்ப்பந்தம் காரணமாக ராஜீவ் -ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை திருத்தி எழுதும் படியும், ஈழத்தின் வடக்கு -கிழக்கு மாகாண இணைப்புப் பற்றி கிழக்குப் பகுதி மக்களிடையே கருத்துக் கணிப்பு நடத்தும்படியும் நிர்பந்திக்கப் படுவார்கள்.

பாசிச ராஜீவ் கும்பலுக்கு ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளைப் பயன்படுத்தி ஈழ மக்கள் தமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் முன்னேறுவார்கள் என்று நம்புகிறோம். சிங்கள சிவிலியன்களைக் கொலை செய்வது, ஈழ ஜனநாயக இயக்கங்களை ஒடுக்குவது ஆகிய பாசிசப் போக்குகளைக் கைவிட்டு பெரும் அளவில் அரசியல் அணி திரட்டலைச் செய்வதன் மூலம் தான் புலிகளின் இராணுவப் போராட்டமும் பலம் பெறவும் வெற்றி பெறவும் முடியும். அதற்கு மாறாக, உள்நாட்டில் பயங்கரவாத, ஜனநாயக மறுப்பு மற்றும் வெளிநாடுகளில் கருணாநிதி போன்ற பிழைப்புவாதிகளைச் சார்ந்து நிற்பது என்கிற போக்கு தொடருமானால் ஈழ விடுதலைப் போர் பலவீனமடையும்.

படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

நான்காமாண்டு

7-8

16 — 28 பிப்ரவரி '89
1 — 15 மார்ச் '89

உள்நாடு

தனி இதழ் : ரூ.1.50
ஆண்டு சந்தா : ரூ.36

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா : U S $ 11

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

### போபால் விஷவாயுப் படுகொலை! இந்திய அரசு - யூனியன் கார்பைடு சமரசம்

# தேசிய அவமானம்! தேச துரோகம்



உலகிலேயே மிகப்பெரிய இரசாயன ஆலை விபத்து என்று சொல்லப்படும் போபால் விஷவாயு படுகொலையில் 5000 பேர் இறந்து போயினர். 6 லட்சம் மக்கள் அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் நோயாளிகளாகிப் போயினர். அதுமட்டுமல்ல. அவர்களுடைய தலைமுறை தலைமுறையான சந்ததியினரையும் தாக்கும் கொடிய நோய்கள் தொற்றிக்கொண்டன.

''1984 டிசம்பர் 2/3 தேதி நள்ளிரவு நடந்த அந்தக் கோர சம்பவத்துக்குப் பிறகு தினமும் ஒருவர் வீதம் இப்போதும் சாவுகள். அப்போது கருவிலிருந்த சிசுக்கள் கூட சிதைந்து வெறும் சதைக்கோளமாக, முடமாகப் பிரசவமான இவ்வளவு பேரழிவுக்கும் நட்டஈடாக 715 கோடி ரூபாய் முழுமையான - இறுதியான நட்டஈடாகப் பெறுவது என்று அந்தக் கொலைகாரப் பன்னாட்டு நிறுவனத்துடன் (யூனியன் கார்பைடு கார்ப்பரேசன், அமெரிக்கா) இந்திய அரசு சமரச ஒப்பந்தம் முடித்துள்ளது.''

''போபால் விஷவாயு வழக்கு சம்பந்தமான எல்லா விவரங்களையும், சூழ்நிலைகளையும், வாத - பிரதிவாதங்களையும், புள்ளிவிவரங்களையும், முந்தைய வழக்கு விவரங்களையும், இருதரப்பு சமரச முயற்சிகளையும், சட்டப்பிரிவுகளையும், மக்களுடைய இழப்புகளையும், அவசரத்தையும் கவனமாகப் பரிசீலித்து இந்த ஆண்டு மார்ச்சு இறுதிக்குள் 715 கோடி ரூபாய் முழுமையாக - இறுதியாக நட்டஈடு தரவேண்டும் என்று முடிவுக்கு வருவதாக'' இந்திய உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. இருதரப்பு வக்கீல்களும் எழுந்து தலையாட்டி ஏற்றுக் கொண்டனர். இந்திய அரசும் யூனியன் கார்பைடு கம்பெனியும் ஏற்கனவே சமரச ஒப்பந்தத்துக்கு வந்துவிட்ட பிறகு இப்படி ஒரு (அ) நீதிமன்றம் சடங்கு நிறைவேறியது. இது கோர்ட் உத்தரவு மீறவோ, மேல் முறையீடு செய்யவோ இந்திய அரசைக் குறை கூறவோ முடியாது என்பதற்காக சமரசப் பேரத்தின் மூலமான ஒப்பந்தம் என்பதை மூடி மறைக்கிறார்கள்.

இதன்மூலம், விஷவாயுப் படுகொலையினால் பாதிக்கப்பட்ட போபால் மக்களுடைய உரிமைகளை மட்டுமல்ல, தேசிய, சர்வதேசிய மக்களின் உரிமைகளையும் கூட விலை பேசி ஒரு பன்னாட்டு நிறுவனத்திடம் - அதன்மூலம் தமது ஏகாதிபத்திய எஜமானர்களிடம் விற்றுவிட்டது, பாசிச ராஜீவ்கும்பல். மாபெரும் தேசிய அவமானம் மிகப்பெரிய தேச துரோகம் செய்துவிட்டது, பாசிச ராஜீவ் கும்பல்!

நட்டஈடு வழக்குகள் நடத்துவதற்காக ஓடிவந்த அமெரிக்க வக்கீல்கள் அதன் பெரும்பகுதியைச் சுருட்டிக்கொள்வார்கள் என்ற காரணத்தைக்காட்டி வழக்காடும் உரிமையை ஏகபோகமாக எடுத்துக் கொண்டது, இந்திய அரசு. 4500 கோடி ரூபாய் நட்டஈடு கேட்டு அமெரிக்க வழக்கு மன்றத்திலே வாதாடியது. அமெரிக்கச் சட்டப்படி அங்கே வழக்கு நடந்தால் ஏராளமாகத் தரவேண்டிவரும் என்பதால் அது தள்ளுபடி செய்யப்பட்டது. அப்புறம் இந்திய வழக்கு மன்றங்களிலே கடந்த இரண்டு ஆண்டுகளாக இழுத்தடித்தனர். 350 கோடி ரூபாய் இடைக்கால நட்டஈடு தரவேண்டும் என்று போபால் மாவட்ட வழக்குமன்றம் உத்திரவுபோட்டது; அதை 250 கோடி ரூபாயாக உயர்நீதிமன்றம் குறைத்தது. ''விபத்துக்குப் பொறுப்பானவர்களைத் தீர்மானிக்காமல் ஒரு சல்லிக்காசு கூட நட்டஈடு தரமுடியாது'' என்று கூறி உச்ச நீதிமன்றத்துக்குப் போனது, யூனியன் கார்பைடு கம்பெனி.

இடைக்கால நட்டஈடு கோரும் வழக்கையும் திடீரென்று கைவிட்டுவிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர அவசிய நிவாரணம் தேவை என்கிற காரணத்தைக் கூறி இப்போது 715 கோடி ரூபாய் நட்டஈட்டை ஏற்றுக் கொண்டுள்ளது, பாசிச ராஜீவ் கும்பல். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே 915 கோடி ரூபாய் நட்டஈட்டிற்கு கம்பெனி ஒப்புக்கொள்வதாக இருந்தது. நாட்டின் 'அறிவுஜீவிகள்' பலரிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியது. பாதிக்கப்பட்டவர்களின் மருத்துவச் செலவுக்கே கூட அது காணாது. இழப்புகளோடு ஒப்பிடும்போது இந்த 915 கோடி ரூபாய் மிகமிகக் குறைவு. அமெரிக்காவில் ''ஆஸ்பெஸ்டாஸ்'' துகள்களால் பாதிக்கப்பட்ட 60,000 பேருக்கு 3800 கோடி ரூபாய் நட்டஈடு கொடுத்தது மேன்வில்லே கார்ப்பரேஷன். அதேபோல ஏ.எச்.ராபின்ஸ் கம்பெனியினால் காயமுற்ற 9450 பேருக்கு 790 கோடி ரூபாய் தரப்பட்டது. இங்கே பாதிக்கப்பட்டவர்கள் இந்தியர்கள், ஏழைகள் என்பதால், நீண்டகாலம் வழக்காட முடியாது என்பதால் தன்னிச்சையான இரகசிய சமரசத்துக்கு வருவது மிகமிகத் தவறாகும்'' என்று பலர் எதிர்த்தனர். எனவே 915 கோடி ரூபாய் சமரசத்துக்கும் மறுத்துவிட்டது, இந்திய அரசு. இப்போது 715 கோடி ரூபாய்க்கே ஒப்புக்கொண்டுவிட்டது. இதிலே எவ்வளவு தொகை பாதிக்கப்பட்டவர்களுக்குப் போய்ச்சேரும் என்று கூறமுடியாது. சுற்றுச் சூழல் பாதிப்பு - அபிவிருத்தி, மருத்துவமனை -ஆராய்ச்சித் தேவைகள், ஏற்கனவே அளிக்கப்பட்ட நிவாரணச் செலவுகள் என்கிற பெயரில்

படிப்பகம்

www.padippakam.com



சகோதரியே, கொலைகாரர்களை நாங்கள் மன்னிக்க மாட்டோம்! விரைவில் பழிதீர்ப்போம்!

*தலையங்கம் தொடர்ச்சி...*

கொள்ளும். தவிரவும் அரசியல் வாதிகள், அதிகாரிகள் ஆகிய இடைத்தரகர்கள் அபகரித்துக் கொண்டது போக அற்பத் தொகையே பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்கும். 5,68,000 பேர் நிவாரண உரிமை கோரியுள்ளனர்.

நட்டஈடு எவ்வளவு என்பது முக்கியமானது. அதைவிட முக்கியமானவை யூனியன் கார்பைடு கம்பெனியும் அதன்மூலம் ஏகாதிபத்தியவாதிகளும் செய்துள்ள கிரிமினல் குற்றங்கள். பூச்சிக்கொல்லி மருந்து தயாரிப்பதற்கான இரசாயன உற்பத்தி என்கிற பெயரில் இரசாயனப் போருக்கான விஷப் பொருட்களை உற்பத்தி செய்தது; அதற்காக ஆராய்ச்சி நடத்தியது. இவ்வளவு அபாயகரமான இரசாயன உற்பத்தி நடத்தியபோதும் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யத் தவறியது; விஷவாயுக் கசிவுக்குப் பிறகு மக்கள் மீதான அதன் பாதிப்புகள் பற்றிய ஆராய்ச்சிக்காக அமெரிக்க இராணுவ, ஆராய்ச்சியாளர்களை அனுப்பி சோதனைகள் நடத்தியது; போபால் மருத்துவமனைப் பதிவேடுகள் சோதனை முடிவுகளைத் திருடிக் கொண்டுபோய் இராசயனப் போர் ஆராய்ச்சிகள் நடத்தியது. இக் கிரிமினல் குற்றங்கள் அனைத்துக்கும் விசாரணை - தண்டனை இன்றித் தப்பித்துக் கொள்கிறது.

இப்போது தரும் நட்டஈடு கூட பாதிக்கப்பட்டவர்களின் நலன்களுக்கான ''தர்மநிதி'' என்ற முறையில்தான் தரப்படுகிறதே ஒழிய யூனியன் கார்பைடு கம்பெனியின் அழிவு வேலைகளுக்கான சேதாரங்களுக்கான தண்டனை, அபராதம் என்கிற முறையில் அல்ல என்று உச்சநீதி மன்றம் தெளிவாகத் தீர்ப்பளித்துள்ளது. யூனியன் கார்பைடு கம்பெனி மற்றும் அதன் துணை நிறுவனங்களுக்கு எதிராக உலகின் எந்தப் பாகத்திலும் இனிமேல் வழக்காடக் கூடாது என்றும் தடை விதித்துள்ளது.

இதைப்போல பல ஏழை நாடுகளிலும் ஏகாதிபத்தியப் பன்னாட்டு நிறுவனங்கள் கிரிமினல் குற்றங்கள் செய்துவருகின்றன. அதற்கான பொறுப்பு ஈடு - தண்டனை கொடுக்காமல் விடுவதன் மூலம், அந்த ஏழை நாடுகள் தமது உரிமையை இழப்பதற்கு இந்தியா இடமளிக்கிறது. ''இந்த 715 கோடி ரூபாய் நட்டஈட்டுத் தீர்ப்பு முழுமையானது இறுதியானது. இதன்பிறகு வேறு எல்லா சிவில், கிரிமினல் வழக்குகள் அனைத்தும் ரத்துசெய்யப்படுகின்றன. யாரும், எங்கும், எதற்கும் இது சம்பந்தமாக வழக்காடமுடியாது'' என்று யூனியன் கார்பைடு கம்பெனியின் கிரிமினல், பொறுப்பீட்டுக் குற்றங்கள் அனைத்திலிருந்தும் உச்ச நீதிமன்றம் விடுவித்துத் தீர்ப்பளித்துள்ளது.

''இந்த விஷவாயு விபத்து சீக்கியப் பயங்கரவாதிகளின் நாசவேலை; இந்தியா தானே உற்பத்திக்கு அனுமதி கொடுத்தது; நாங்கள் இதற்குப் பொறுப்பில்லை; ஆலைக்கு அருகே குடியிருப்புகளை அனுமதித்தது இந்தியாவின் தவறுதான். இந்தியர்கள் பேராசை பிடித்தவர்கள். விஷவாயுவால் பாதிக்கப்பட்டதாக பொய்யான சான்றிதழ்கள் பெற்றுப் பலரும் நட்ட ஈடு பெறுவதற்கு எத்தணிக்கிறார்கள்'' என்றெல்லாம் திமிரோடு வாதிட்டது யூனியன் கார்பைடு கம்பெனி. மருந்துப் பதிவேடுகள், சோதனை முடிவுகளைத் திருடிச் சென்றது. மருத்துவர்களை, சமூக சேவை நிறுவனங்களையும் விலைபேசி வாங்கிக் கூலிப்பிரச்சாரம் செய்தது. ''விபத்துக்கான பொறுப்புகள், விதிமீறல்கள் ஆகிய கொள்கை விவகாரங்கள் மீது வழக்கு நடத்திக் காலத்தை வீணடிக்கக் கூடாது; மக்களுக்கு உடனடி நிவாரணம் - நிதியளிப்பது தான் முக்கியமானது'' என்று நயவஞ்சகமாக வாதிட்டது.

யூனியன் கார்பைடு கம்பெனியின் வசதிக்கும் வாதத்துக்கும் ஏற்ப பாசிச ராஜீவ் கும்பல் இப்போது சமரசம் செய்துகொண்டு மிகப் பெரிய தேசதுரோகத்தைச் செய்துள்ளது. அபாயகரமான விஷவாயு உற்பத்தி, விதிகளை மீறிய உற்பத்தி, விபத்துக்குப்பிறகு ஆலை நிர்வாகிகளுக்குப் பாதுகாப்பு, வந்துபோக தனிச்சிறப்பான வசதி அவர்களை எதிர்த்து நியாயமான நிவாரணம் கோரிப் போராடிய மக்களை ஒடுக்குவது - இப்படிப்பல வகையிலும் பாசிச ராஜீவ் கும்பல் உதவிசெய்து வந்திருக்கிறது. அவற்றுக்கும் இந்த சமரச ஒப்பந்தத்துக்கும் சேர்ந்து அது பல கோடி ரூபாய் லஞ்சம் வாங்கியிருக்கும் என்பது நிச்சயமானது.

இதற்கு வசதியாகத்தான் போபால் விஷவாயு விபத்து நட்டஈடு வழக்குச் சட்டம் கொண்டுவந்து ஏகபோக உரிமையை எடுத்துக் கொண்டது. நாடாளுமன்றத்திலே அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோதும் வழக்கின் -சமரசப் பேச்சுவார்த்தையின் எந்த ஒரு கட்டத்திலும் பகிரங்கமாக வைத்து யாருடைய ஒப்புதலையும் ஆலோசனையையும் பெறவில்லை. முற்றிலும் இரகசியமாகப் பேரத்தை முடித்துக் கொண்டது. போபால் விஷவாயுப் படுகொலைக்குப் பிறகு அந்தக் கம்பெனியின் பல பிரிவு ஆலைகளை ரோனி பௌலங் என்ற பிரெஞ்சு பன்னாட்டுக் கம்பெனி வாங்கியுள்ளது. போபால் பேரழிவுக்குக் காரணமான அதே விஷவாயுவான மிதைல் ஐசோசைனைடு மீண்டும் இந்தியாவில் உற்பத்தி செய்வதற்காக டாடா நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்து தொழில் உரிமம் கோரியுள்ளது. இந்தியாவில் இப்போது துவங்கியுள்ள பிரெஞ்சு கலை விழாவின் ஒரு பகுதியாக இந்தத் தொழில் உரிமை கோரி நிர்பந்திக்கிறது பிரெஞ்சு அரசு. இராணுவ ஆயுதத் தளவாட பேரங்களில் மட்டுமல்ல, மக்களின் உயிரைக்கூட விலை பேசி விற்றுவிடும் அயோக்கியத்தனமானது, பாசிச ராஜீவ் கும்பல். அதன் துரோகத் தனத்துக்கு எதிராக மான உணர்ச்சியுடைய சுயமரியாதையை மதிக்கும் அத்தனை பேரும் கிளர்ந்தெழுந்து போராட வேண்டும். ●

அன்பார்ந்த வாசகத் தோழர்களே,

*தவிர்க்க இயலாத காரணங்களால் 16 — 28 பிப்ரவரி '89 இதழை உரிய நேரத்தில் வெளியிட இயலவில்லை. எனவே 1 — 15 மார்ச் '89 இதழையும் சேர்த்து இவ்விதழை வெளியிட்டுள்ளோம்.*

— ஆசிரியர் குழு

படிப்பகம்


www.padippakam.com

# குருதிச் சேற்றில் ஆப்கான்

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு ஆப்கானை ஆக்கிரமித்து, லட்சக் கணக்கான ரஷியத் துருப்புகளின் துணையுடன் பொம்மை அரசை நிறுவி, ஆதிக்க வெறியாட்டம் போட்ட ரஷிய ஏகாதிபத்தியம், விட்டால் போதும் என்று பின்னங்கால் பிடறியில் பட ஆப்கானை விட்டு ஓடுகிறது.

ஜெனீவா ஒப்பந்தப்படி, கடந்த ஆண்டு மே மாதத்திலிருந்து தனது படைகளைப் படிப்படியாக விலக்கிக் கொள்ளத் தொடங்கிய ரஷியா, தான் அறிவித்தபடி பிப்ரவரி 15க்குள் அனைத்து படைகளையும் திருப்பியழைத்துக் கொண்டு விட்டது. தோல்வியாலும் அவமானத்தாலும் சின்னஞ்சிறு நாட்டிலிருந்து ரஷியா தப்பியோடுகிறது. ரஷிய அடிவருடி நஜிபுல்லாவின் பொம்மை அரசு நொறுங்கி விழுந்து கொண்டிருக்கிறது.

ரஷிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து தொடர்ந்து ஆயுதமேந்திப்



அமெரிக்க - ரஷிய ஆதிக்கவெறி.

போராடி வரும் முஜாஹிதீன் கொரில்லாக்கள் ஆப்கானின் பெரும் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டு தலைநகர் காபூலையும் சுற்றி வளைத்து முற்றுகையிட்டுள்ளனர். ரஷியாவையும் காபூலையும் இணைக்கும் சலாங் நெடுஞ்சாலையையும் இதர போக்குவரத்து வழிகளையும் கொரில்லாக்கள் அடைத்து விட்டதால் உணவு - மருந்துப் பொருட்கள் தட்டுப்பாட்டில் தலைநகர் சிக்கித் தவிக்கிறது. என்றுமில்லாத அளவுக்கு கடுங்குளிரும் சேர்ந்து வாட்டுவதால் 20 லட்சம் காபூல் நகர மக்கள் பட்டினியால் பரிதவிக்கின்றனர்.

எல்லா வெளிநாட்டு தூதரகங்களும் மூடப்பட்டு அதிகாரிகள் தப்பியோடுகின்றனர். ரஷியாவே தனது தூதரக ஊழியர்களில் மூன்றில் இரண்டு பங்கினரைத் திருப்பியழைத்துக் கொண்டு விட்டது. முஜாஹிதீன்களின் முற்றுகைப் போராலும் அதை முறியடிக்க நஜிபுல்லா அரசுப் படைகள் தொடுக்கும் எதிர்தாக்குதலாலும் ஆயிரக்கணக்கான அப்பாவி சிவிலியன்கள் இடையில் சிக்கி தினமும் கொல்லப்பட்டு வருகிறார்கள்.

உள்நாட்டில் தீராத உணவுப் பற்றாக்குறை மற்றும் அரசியல் நெருக்கடிகளில் சிக்கி விழிபிதுங்கி நிற்கும் ரஷியா, உலக மேலாதிக்கப் போட்டியில் அமெரிக்காவை விஞ்ச முடியாமல் போய் விடுமோ என்று அஞ்சுகிறது. இதோடு, 1,50,000 ரஷியப் படைவீரர்களை ஆப்கானில் பலிகொடுத்து விட்டதால் ரஷியத் தாய்மார்கள் இனியும் தங்கள் புதல்வர் படுகொலை செய்யப்பட அனுமதிக்க மாட்டோம் என்று கிளர்ந்தெழுகின்றனர். எனவே தற்காலிகமாகப் பின்வாங்கி உள்நாட்டு நிலைமையைச் சீர்படுத்தி மீண்டும் மூர்க்கமாகப் பாய்வதற்காக படைவிலகல் -உலக சமாதான நாடகமாடுகிறது ரஷியக் கரடி. ஆப்கானை ஆக்கிரமித்ததே தவறு என்று இப்போது ஒப்புக்கொள்கிறது.

அதேசமயம் தான் உருவாக்கிய அடிவருடி அரசு தொடர்ந்து ஆப்கானில் நீடிப்பதற்காக பகீரதப் பிரயத்தனம் செய்கிறது. ஈரானிடமும், பாகிஸ்தானிடமும் தமது அடிவருடிகளும் முஜாஹிதீன் கொரில்லாக்களும் கொண்ட கூட்டணி ஆட்சியை நிறுவ ஒத்துழைக்கும்படி ரஷிய வெளியுறவு அமைச்சர் கெஞ்சுகிறார். ஆனால் அமெரிக்கா மற்றும் பிற மேற்கத்திய ஏகாதிபத்தியங்களாலும், முஸ்லிம் நாடுகளாலும் ஆதரிக்கப்படும் முஜாஹிதீன்கள் இந்தச் சமரசத்துக்கு உடன்பட மறுத்து ரஷிய அடிவருடி அரசுக்குக்கெதிராக தொடர்ந்து போராடுகின்றனர். ரஷியப் படைவிலகலை அடுத்து அதன் பொம்மை அரசும் விழவேண்டும் என்பதற்காக, பட்டினியால் பரிதவிக்கும் காபூல் மக்களுக்கு ஐ.நா. சபையின் மேற்பார்வையில் அனுப்பப்படும் உணவுப் பொருட்களைத் தடுத்தும், போராடும் முஜாஹிதீன்களுககு ஏராளமாக நவீன ஆயுதங்களையும் நிதியையும் கொடுத்து சி.ஐ.ஏ.வும் முஸ்லீம் நாடுகளும் எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றுகின்றன. படை விலகலுக்குப் பின் ஆப்கானின் சுயாதிபத்திய உரிமையைக் காத்து ஜனநாயக மக்கள்குடியரசை கூட்டுச் சேரா நாட்டை உருவாக்குவோம் என்ற ஜெனீவா ஒப்பந்தத்தைக் காற்றில் பறக்கவிட்டு ரஷியாவும் அமெரிக்காவும் ஆதிக்கப் போட்டிக்கான நிழற் சண்டையிலேயே குறியாய் இருக்கின்றன.

ரஷியப் படை விலகலைத் தொடர்ந்து அதன் அடிவருடி நஜிபுல்லாவின் பொம்மை அரசும் வீழ்வது நிச்சயமாகி விட்டது. ஆளும் கட்சிக்குள்ளேயே உள்ள 'பார்ச்சம்', 'கல்க்' எனுமிரு பிரிவுகளுக்கிடையிலான பிளவும் மோதலும் அதை மேலும் தீவிரப் படுத்துகிறது. ஆனால் அதனால் ஏற்படும் வெற்றிடத்தை முஜாஹிதீன் கொரில்லாக்கள் இட்டு நிரப்பி புதிய ஆப்கான் குடியரசையும் அமைதியையும் நிலைநாட்டுவார்கள் என்று யாராவது நம்பினால் அது முட்டாள்தனம். ஏனெனில் ரஷிய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடிய முஜாஹிதீன் கலகக் காரர்களிடையே ஒற்றுமையோ, பொது உணர்வோ இல்லை. ஈரான் ஆதரவு 'ஷியா' பிரிவு முஜாஹிதீன்கள் 8 கோஷ்டிகளாக உள்ளனர். பாகிஸ்தான் ஆதரவு 'சன்னி' பிரிவு 7 கோஷ்டிகளாக உள்ளது. பழங்குடி மற்றும் முஸ்லீம் மத அடிப்படையிலான விசுவாசம் காரணமாக இக்குழுக்களிடையே முரண்பாடுகளும் மோதலும் தொடர்கிறது. ரஷியப் படை விலகலைத் தொடர்ந்து புதிய அரசை நிறுவுவதற்காக பாகிஸ்தானில் கூடிய முஜாஹிதீன்களின் ஷுரா (கவுன்சில்) ஆலோசனைக் கூட்டத்தில் ஒவ்வொரு குழுவும் கூடுதல் பிரதிநிதித்துவம் கோரியதை அடுத்து அக்கூட்டம் காலவரையின்றி தள்ளி வைக்கப்பட்டு விட்டது. அமெரிக்காவும் முஸ்லீம் நாடுகளும் தத்தமது ஆதரவு குழுக்களை முன்னிறுத்துவதில் முண்டியடிக்கின்றன.

இதன் விளைவாக, நஜிபுல்லா அரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து முஜாஹிதீன் குழுக்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற ஒன்றையொன்று தாக்கும்; கூட்டணி உடையும். குழப்பமும் நெருக்கடியும் முற்றி உள்நாட்டுப் போர் தீவிரமடையும். பகைமையும் சந்தேகமும் முற்றி ஆப்கான் மக்கள் ஒருவருக்கொருவர் மோதிக் கொள்வர். இன்னுமொரு லெபனான் உருவாகும். ஆப்கான் நாடே சிதறிப் போகும். வல்லரசுகளால் கொத்திக் குதறப்பட்டு, மத வெறியர்களால் மிதிபட்டு நாடே ரணகளமாகும்.

இனி, ஆப்கான் மக்கள் தங்கள் தலைவிதியைத் தாங்களே தீர்மானித்துக் கொண்டு அமைதியாக வாழ வேண்டுமானால், ரஷிய - அமெரிக்க வல்லரசுகள் - அதன் அடிவருடிகளுக்கு எதிராகவும், அரை நிலப் பிரபுத்துவ உறவுகள் - பிற்போக்கு மதக் கோட்பாடுகளுக்கு எதிராகவும் ஓர் ஆயுதந்தாங்கிய புரட்சியைத் தொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை.

படிப்பகம்

www.padippakam.com



# பகுத்தறிவுத் திராவிடத்துக்குத் திவசம்!
# ஆன்மீக திராவிடத்துக்கு பிறந்தவிழா!

## கருணாநிதி கற்றுக் கொண்ட படிப்பினை:

## "ஆட்சி என்பது பொன்முட்டையிடும் கோழி!"

கருணாநிதியின் ஆரம்ப சூரத்த னங்களைக் கண்டு அகமகிழ்ந்து போயிருக் கிறார்கள் பத்திரிக்கையாளர்களும், பல படிப்பாளிகளும். அவரது பரம எதிரியான துக்ளக் சோ கூட இதுவரை குறை கூறும்ப டியாக நடந்து கொள்ளவில்லை என்று நன்ன டத்தை சான்றிதழ் கொடுத்துள்ளார். 27 லட் சம் ரூபாய் செலவில் வள்ளுவர் கோட்டத் தில் பதவியேற்பு விழா நடத்தியபோதும் எடுத்த சபதம் முடித்தார்; ஆடம்பரம் கிடை யாது என்று ஏற்றுக் கொண்டனர்.

தேர்தலுக்குப் பிறகு கொலை, தீவைப்பு, சூறையாடல், மிரட்டல் என்று வன்முறைகள் ஆங்காங்கே நடந்த போதும் 13 ஆண்டு வனவாசத்துக்குப் பிறகு அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகளை கீழ் மட்ட தி.மு.க.வினர்தான் வெளிப்படுத்தினர் என்று சமாதானம் கூறிக் கொள்கிறார்கள். அடக்கமான வெற்றி விழா; அடுத்து பழி வாங்கும் எண்ணமில்லாது எம்.ஜி.ஆர். சமாதியில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்தார். எம்.ஜி.ஆர். சமாதியை அழகுப டுத்தும் வேலையைத் துவங்கி விட்டார்; சட் டசபையிலே எம்.ஜி.ஆர், ஜானகி படம் வைத்தார் என்று கருணாநிதியின் பெருந்தன் மைகளைப் பத்திரிக்கைகள் பட்டியல் போடு கின்றன.

முதல்வருக்குரிய பாதுகாப்பு, பவனி வரும்போது "பைலட்" வண்டி பரிவாரங்க ளைத் துறந்தார். தன் கட்சியினர் மீதான வழக்குகளை மட்டுமல்ல எம்.ஜி.ஆர். ஆட்சி மீதான விசாரணைகளையும் ரத்து செய்தார். அரசு கழகங்கள் - வாரியங்க ளுக்கு அதிகாரிகளைத்தான் தலைமைப் பத விக்குப் போடுவோம் - கட்சிக்காரர்கள் ஒரு சில முக்கியப் பொறுப்புக்களுக்குத்தான் நிய மிக்கப்படுவர் என்றார். எதார்த்தத்துக்கு ஏற் றபடி திட்டச் செலவுகளைக் குறைத்துக் கொண்டார். வாக்குறுதி கொடுத்தபடி 2 லட் சம் சத்துணவு ஊழியர்களை நிரந்தரமாக்கி னார். எம்.ஜி.ஆர். ஆட்சியில் போராடிய ஆசிரியர் - அரசு ஊழியர் போராட்ட காலச் சம்பளம், ஒழுங்கு நடவடிக்கைகள் விலக்கிக் கொள்வது ஆகியன செய்தார். பெண்களுக்கு 30 சதவிகித இட ஒதுக்கீடு உத்திரவு போட்டார்.

மந்திரிகள் திடீர் சோதனைகள் நடத்தி மக்கள் குறைகளைக் கேட்டு நிர்வாகச் சீர்தி ருத்தம் செய்கின்றனர். சிறந்த நிர்வாகிகள், அறிஞர்களைத் தேடிப் போய் சாதி மற்றும் பிற வேறுபாடுகள் பாராது ஆலோசனைகள் கேட்டுச் சேர்த்துக் கொள்கிறார். குறிப்பாக முன்பு போல பார்ப்பனர்களை ஒதுக்குவ தில்லை. அவர்களுடைய நம்பிக்கையைப் பெற முயலுகிறார். கடவுள் நம்பிக்கை வந்தி ருப்பதோடு, கோவில் நிர்வாகங்களில் கட்சித் தலையீடுகளைத் தடுத்து சீரமைப் புகளை மேற்கொண்டுள்ளார்.

— இப்படிக் கருணாநிதியின் சாத னைகளை - மாற்றங்களை அடுக்கிக் கொண்டே போகிறார்கள். கருணாநிதி முன்பு போல இல்லை; மாறி விட்டார்; தனது கடந்த காலத் தவறுகள் - குறைபாடுகளைத் திருத்திக் கொண்டு விட்டார்; சினிமாக்கா ரர்கள் நடத்திய வரவேற்பு -பாராட்டு விழா வில் கருணாநிதியே இதை ஒப்புக் கொண்டுள்ளார். கடைசியாக ஒரு நல் லாட்சி தமிழ்நாட்டுக்குக் கிடைத்துவிட்டது என்று புகழ்ந்து தள்ளுகிறார்கள்.

கருணாநிதி இப்படிச் சில நடவ டிக்கைகளை மேற்கொண்டு வருகிறார் என் பது உண்மை தான்! ஆனால் இவையெல் லாம் சூரத்தனம்! ஒவ்வொரு ஆட்சி மாறும் போதும் இந்த மாதிரியான நடவ டிக்கைகளை நாம் கண்டோம். அண்ணாத் துரையும் எம்.ஜி.ஆரும் மொரார்ஜியும் ராஜீ வும் ஆட்சிக்கு வந்த போதும்இப்படித் தான் பத்திரிக்கைகளும், பல படிப்பாளிகளும் பாராட்டினார்கள். "இது முந்தைய ஆட்சி போல இல்லை; மாறுபட்டது. பொறுப்பான நல்லாட்சி நடத்தவேண்டும். மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்கிற நல்லெண் ணம் தலைமையிடம் இருக்கிறது" என்று பத் திரிக்கைகள் எழுதின. அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாக "இவர்களும் அப்படித்தான்! எல்லோரும் மோசமானவர்கள் தான்! இருந் தாலும் வேறு வழியில்லை!" என்கிற முடி வுக்கு வந்தன.

நாடாளுமன்ற ஆட்சிமுறையின் மீது முற்றாக வெறுப்பு வந்து மக்கள் நிராகரித்து விடக் கூடாது; புதிதாக ஆட்சிக்கு வருப வர்கள் மொத்த வாக்காளர்களில் சிறு பான்மை ஆதரவைப் பெற்றவர்களாக இருப்பதால் அவர்கள் மீது மற்ற பகுதி மக்களுக்கும் நம்பிக்கை ஏற்பட வேண்டும் என்பதற்காக ஆளும் நாடகம் இது!

கருணாநிதியைப் பொறுத்தவரை வரும் மாநகராட்சி மற்றும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்கள் வரையிலாவது இந்த சூரத்தனங்கள் நடத்த வேண்டும் என்று தான் விரும்புவார். எம்.ஜி.ஆரின் வாரிசுகளும் காங்கிரசும் கூட்டுச் சேர்ந்தால் தோற்றுப் போவோம் என்று அஞ்சுகிறார். தனது வாரிசு மு.க.ஸ்டாலினுக்கு ஆட்சிச் சொத்தைக் காப்பாற்றி ஒப்படைக்க வேண் டும் என்றும் பொறுப்போடு செயல்படுகி றார். கருணாநிதி கடந்த காலத் தவறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொண்டு விட்டார் என்று சொல்கிறார்கள். உண்மை தான்! பாடம் கற்றுக் கொண்டு எச்சரிக்கையுடன் நடந்து கொள்கிறார். என்ன பாடம்? ஆட்சி என்பது "பொன் முட்டையிடும் கோழி! அவசரப்பட்டு, மிக மிக அதிகமாக ஆசைப் பட்டு அறுத்துப் பார்த்து விடக் கூடாது!" என்கிற பாடத்தைக் கற்றுக் கொண்டார். அதைப் பக்குவமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்; அப்போது தான் தலை முறை தலைமுறைக்கும் பயன்படும் என்று தந்திரமாகச் செயல்படத் துவங்கிவிட்டார்.

மற்றபடி ஒரு நூறு கோடி ரூபாய்க்கு மேலே தேர்தல் சூதாட்டத்தில் வாரி இறைத் துவிட்டு "உத்தரவிட்டீர்கள்! இனி உங்க ளுக்கு உழைப்பது தவிர வேறு ஆதாயம் தேட மாட்டேன்" என்று சந்நியாசம் வாங்கிக் கொண்டு முற்றும் துறந்து விடும் முனிவராகி விட மாட்டார். லட்சம் லட்சமாகக் கொட்டி எம்.எல்.ஏ. ஆனவர்களும் லட்சியம் பேசிக் கொண்டிருக்க ஏமாந்த சோனகிரிகள் அல்ல. இப்படித் தான் எம்.எல்.ஏ.க்கள் அரசு நிர்வாகத்தில் தலையிடக் கூடாது என்று ஆரம்பச் சூரத்தனம் காட்டிய எம்.ஜி. ஆர், அப்புறம் ஒவ்வொரு கட்சிக்காரனுக் கும் வசூலுக்கான வகையை உரிமை யாகவே போட்டுக் கொடுத்தார். "அவன்

படிப்பகம்

www.padippakam.com



மருத்துவமனையில் மந்திரியின் திடீர் 'விசிட்' - வழக்கமான 'ஸ்டண்ட்'!

கட்சிக்காகப் பாடுபட்டவன் ஏதாவது ஏற்பாடு செய்துதர வேண்டும்'' என்கிற விதி எங்கும் ஆட்சி செலுத்தியது. ''சாராயக்கடை தருவதாகச் சொல்லி ஏமாத்தி விட்டார் புரட்சித் தலைவர்!'' என்று கூச்சல் போட்டுக் கொண்டே எம்.ஜி.ஆரின் ராமாவரம் தோட்டத்திலேயே ஒரு ''ரத்தத்தின் ரத்தம்'' தீக்குளித்துச் செத்துப் போனது!

''உடன்பிறப்புகள்'' ஒன்றும் பிறப்புக் குணங்கள் இல்லாதவர்களில்லை. எத்தனை நாளைக்குத் தான் புறங்கையை நக்காமல் பார்த்துக் கொண்டே ஏங்க முடியும். உதாரணத்துக்கு ஒரு சிறு விவகாரம்! சென்னையின் ஒரு பகுதியில் லாரிகளில் தண்ணீர் கொண்டு வந்து தொட்டிகளில் நிரப்பி மக்களுக்கு விநியோகித்து வந்தது எம்.ஜி.ஆரின் ரத்தத்தின் ரத்தங்கள். அந்த நீர்த் தொட்டிகளைப் பிடித்துக் கொண்டு குடத்துக்கு 10, 15 காசுகள் வீதம் வசூலித்து வந்தன. தேர்தலில் தி.மு.க வெற்றி பெற்ற பிறகு நீர்த்தொட்டி வசூல் உரிமை தங்களுக்குத் தான் உண்டு என்று ''கலைஞரின் உடன்பிறப்புகள்'' உரிமை பாராட்டித் தகராறு எழுந்தது. ஊர் பஞ்சாயத்துக் கூடி மொத்தம் 26 தொட்டிகளில் 20 தி.மு.க.வுக்கும், 4 ஜெயலலிதா அணிக்கும்! காங்கிரசுக்கு, ஜானகி அணிக்கும் என்றும் முடிவானது. இந்த முடிவை அமுலாக்குவதற்காக இப்போது அங்கு போலீசுப் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. அந்த அளவுக்கு ஊறிப் போனவர்கள் மாறி விட்டார்கள் என்று பிரச்சாரம் செய்வது யாரை ஏமாற்றுவதற்கு?

கருணாநிதிக்குக் கடவுள் நம்பிக்கை வந்து விட்டது என்பதை மெய் சிலிர்க்க எழுகின்றன பார்ப்பனப் பத்திரிக்கைகள். இனி எம்.ஜி.ஆர். கட்சியினரைப் போல மொட்டை போடும் உடன்பிறப்புகள் மேடை ஏறித் திராவிடம் பேசுவார்கள்! உண்மை என்னவென்றால் இரகசியமாகச் செய்து வந்ததை இப்போது பகிரங்கமாகவே செய்கிறார் கருணாநிதி. திராவிடக் கட்சிகளைப் பொறுத்தவரை பகுத்தறிவு திராவிடம் எப்போதோ செத்துப் போய்விட்டது. இப்போது நடப்பது பகுத்தறிவுத் திராவிடத்துக்கு திவசம் -நினைவஞ்சலிதான்! ஆன்மீகத் திராவிடத்துக்குப் பிறந்தவிழா தான்!

''பகுத்தறிவு திராவிடமா? ஆன்மீகத் திராவிடமா? என்பது பற்றி எங்களுக்கு அக்கறையில்லை. ஆட்சியைப் பிடிப்பதைத் தவிர வேறு எந்தக் கொள்கையும் எங்களுக்கு அவசியமில்லை'' என்று பகிரங்கமாகவே நடந்து கொள்ளும் முற்றாகப் பிழைப்புவாதப் பாசிசக் கட்சி ஜெயலலிதா தலைமையில் எதிர்க் கட்சியாகக் கிடைத்திருப்பது கருணாநிதிக்கு இன்னும் வசதியாகப் போய்விட்டது. தேர்தல் கால ஆபாசக் கூத்துகளையெல்லாம் மூட்டை கட்டி வைத்துக் கொண்டு, எம்.ஜி.ஆரின் சொத்துக்களைக் கைப்பற்றுவதற்காக ''சக்களத்திகள்'' கை கோர்த்துக் கொண்டனர். எஞ்சியவர்கள் பசுமையான மேய்ச்சல் நிலத்தை - அதிகாரத்திலுள்ள கட்சியைத் தேடிப் போகிறார்கள்.

''தேர்தல் கால அரசியல் ஆபாச வசவுகள், சவால்கள், சவடால்கள் சூடான அரசியல் சூழ்நிலையில் வந்தவை. எல்லாவற்றையும் மறந்து விடுவதுதான் அறிவுடமை'' என்று உபதேசிக்கிறார்கள், முதலாளித்துவப் பத்திரிக்கைகளும், பல படிப்பாளிகளும், அரசியலின் தரம் தாழ்ந்து விட்டது என்று இவ்வளவு காலமும் குறைபட்டுக் கொண்டவர்கள், இந்தத் தாழ்ந்த தரத்துடனே சகித்துக் கொண்டு வாழுவோம். என்கிற நிலைக்கு மக்களைத் தயாரிக்கிறார்கள். இவ்வளவு காலமும் இவர்கள் இழித்தும் பழித்தும் ஏசியும் வந்த கருணாநிதியும் ஜெயலலிதாவும்தான் ஆளும்கட்சி - எதிர்க்கட்சித் தலைவர்கள் என்பது முடிவான பிறகு அவர்களின் அருமை, பெருமைகளைச் சொல்லிப் புகழ்கிறார்கள்.

பகுத்தறிவு திராவிடமோ, ஆன்மீகத் திராவிடமோ, கருணாநிதியின் ஆரம்ப சூரத்தனங்களோ மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்த்துவிடப் போவதில்லை. ''நிலையான, நேர்மையான, ஜனநாயக ஆட்சிதருவார் கருணாநிதி!'' என்று சொல்லி இப்போது ஓட்டுப் பொறுக்கிய போலிக் கம்யூனிஸ்டுகள் கூட இன்றும் ஓராண்டுக்குள் ''இது மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, ஜனநாயக விரோத அரசு'' என்று சொல்லிப் பிரச்சாரம் செய்வார்கள்! அப்புறம் தேர்தல் வந்தால் எல்லாத்தையும் ஒளித்துக் கொண்டு கூட்டுச் சேர்ந்து விடுவார்கள் அல்லது ஜெயலலிதாவுக்கு நேசக்கரம் நீட்டுவார்கள். இப்படி ஒரு விஷச் சுழற்சி! இதிலிருந்து மீள முடியாதவாறு மக்களை வீழ்த்துவார்கள்! அதற்கான சூழ்ச்சிதான் இப்போது கருணாநிதி மீதான பிரமையை உருவாக்குவது - பரப்புவது. பிரமைகளை உதறி எறியுங்கள்! விஷ சூழ்ற்சியிலிருந்து வெளியேறுங்கள்!

— ஆர்.கே.

## 'மார்சிஸ்டு'களின் இரட்டை நாக்கு!

உண்மையை எடுத்துச் சொன்னால் சிலருக்கு சுர்ரென்று கோபம் பொத்துக்கொண்டு வருகிறது. அண்மையில் (3.2.89) புதுடெல்லியில் அரசியல் தலைமைக்குழுவின் முடிவுகள் பற்றி ஈ.எம்.எஸ். பத்திரிக்கையாளர்களுக்குப் பேட்டி கொடுத்தார். ''முஸ்லிம் லீக்கோடு கூட்டு வைத்துள்ள தி.மு.க.வோடு தமிழகத்தில் தேர்தல் கூட்டு வைத்திருக்கிறீர்களே, இது உங்கள் கொள்கைக்கு முரண்பட்டதில்லையா?'' —இதுகேள்வி. அதற்கு ஈ.எம்.எஸ். பதில்: ''நாங்கள் தி.மு.க.விடம் 'இது உங்கள் பாடு. எங்களைக் கட்டுப்படுத்தாது' என்று ஏற்கெனவே கூறிவிட்டோம்'' தமிழ்நாட்டில் பின்பற்றிய இதே கொள்கை தேசியஅளவில் இருக்காது என்று அவர் கூற, கொள்கையைக் கறாராகச் சொல்லுங்கள் என்று நிருபர்கள் மடக்க, ஈ.எம்.எஸ்.ஸுக்குச் சுர்ரென்று கோபம் வந்துவிட்டது.



ஓட்டுக்காகப்போடும் வேடந்தானே, பேசும் பேச்சுத்தானே — நாக்கு எப்படி வேண்டுமானாலும் வளைகிறது. தி.மு.க. மீது பழியைப் போட்டவர்கள் எப்படி நடந்துகொள்கிறார்கள் தெரியுமா? மதுரை கிழக்குத் தொகுதியில் போட்டியிட்ட மார்க்சிஸ்டு சங்கரைய்யா தி.மு.க. கலைஞர் வேடம் போடுவதைப் போலவே குல்லா போட்டுக்கொண்டு மதுரை பள்ளிவாசலில் ஓட்டு திரட்டினார் தாங்கள் ஏதோ கொள்கை உள்ளவர்கள் போல தி.மு.க.வைக் கைகாட்டி விட்டவர்கள் எதற்காகக் குல்லா வேடம் போடவேண்டும்? ஓட்டுப் பொறுக்கத் தானே?

படிப்பகம்

www.padippakam.com

# எதிர்க்கட்சி கூட்டணிக்குள் ராஜீவின் ஐந்தாம்படை




ஆளும் காங்கிரசுக் கட்சி எப்போதெல்லாம் நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறதோ அப்போதெல்லாம் அதற்கு முட்டுக் கொடுத்து ஆதரிப்பதென்பது போலிக் கம்யூனிஸ்டுகளின் வாடிக்கை. இப்போது பாசிச ராஜீவ் கும்பல் அடுத்தடுத்த தேர்தல் தோல்விகளாலும், உட்கட்சி கோஷ்டி சண்டையாலும் நிலைகுலைந்து கிடக்கும்போது, எதிர்க்கட்சி கூட்டணிக்குள்ளேயே தங்கள் ஐந்தாம் படை வேலையை முடுக்கி விட்டுள்ளார்கள், போலிக்கம்யூனிஸ்டுகள்.

கடந்த ஜனவரி மத்தியில் போலிக் கம்யூனிஸ்டுகளும், போலி சோசலிஸ்டுகளும், ரஷிய அடிவருடிகளும் ஒன்றுசேர்ந்து எதிர்க்கட்சிகளின் தேசிய முன்னணிக்கு மாற்றாக, புதிதாக தேசிய பிரச்சாரக் கமிட்டி (NCC) என்ற அமைப்பை உருவாக்கியுள்ளனர். இடது 'கம்யூனிஸ்ட்' கட்சியின் நம்பூதிரிபாடு, வலது கம்யூனிஸ்ட் கட்சியின் இந்திரதீப் சின்ஹா, காங்கிரஸ் (எஸ்) கட்சியின் உன்னிக்கிருஷ்ணன், இன்னும் புரட்சி சோசலிஸ்டு கட்சி, பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட 7 கட்சிகளின் முக்கிய பிரமுகர்கள் லோக்தளக் கட்சியின் ஒரு பிரிவின் தலைவரான பகுகுணாவின் தலைமையில் டெல்லியிலுள்ள 'மார்க்சிஸ்ட்' கட்சி அலுவலகத்தில் கூடினர். தேசிய அளவிலான பிரச்சாரத்துக்கான இடதுசாரி ஜனநாயகத் திட்டத்தை தயாரிப்பதற்காக தாங்கள் கூடியதாக அறிவித்தனர்.

இதன்படி, தேசிய ஒருமைப்பாடும், வகுப்புவாத பிரிவினை சக்திகளை முறியடிப்பதுமே தங்கள் பிரதானக் கடமை என்றும், இதனடிப்படையில் தேசிய பிரச்சாரக் கமிட்டி பிப்ரவரி மாதத்தில் கான்பூரில் தனது துவக்க கூட்டத்தை நடத்தும் என்றும் அறிவித்தனர்.

உடனே தேசிய முன்னணியின் தலைவர் என்.டி.ஆரும், கன்வீனர் வி.பி.சிங்கும் கூடி "ஜனதா கட்சி, லோக்தளம், ஜன்மோர்ச்சா ஆகிய கட்சிகள் ஒன்றிணைந்து ஜனதா தளமாக உருவாகிவிட்டது. இக்கட்சிகளிலிருந்து பிரிந்துசென்று எஞ்சி நிற்கும் சிறு குழுக்களான இந்துபாய் படேலின் ஜனதா, பகுகுணாவின் லோக்தளம், ராம்தானின் ஜன்மோர்ச்சா ஆகியவை பற்றி எங்களுக்கு கவலையில்லை" என்று அறிக்கை வெளியிட்டனர். ஜனதா தள தலைவர்களில் ஒருவரும், ஹரியானா முதல்வருமான தேவிலால், தேசிய பிரச்சாரக் கமிட்டியை "தேசிய சீர்குலைவு வாதிகளின் கூடாரம்" என்று சாடினார். பகுகுணாவை "காங்கிரசின் ஏஜெண்டு" என்று முத்திரை குத்தினார்.

தேசிய பிரச்சாரக் கமிட்டியில் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் (எஸ்) கட்சித் தலைவர் உன்னிக்கிருஷ்ணனும், ஜன்மோர்ச்சா கட்சித் தலைவர் ராம்தானும் "தேசிய முன்னணியில் உள்ள பெரிய கட்சிகள் சிறிய கட்சிகளை அடிமைகளாக நடத்துகின்றன. தேசிய முன்னணியில் புதிய கட்சியை சேர்ப்பது அல்லது நீக்குவது பற்றி முடிவு செய்ய என்.டி.ஆருக்கு எவ்வித அதிகாரமும் தரப்படவில்லை. யாரையும் கேட்காமல் அவர் இப்படி அறிக்கை வெளியிடுவது உரிமை மீறலாகும்; அதிகார துஷ்பிரயோகமாகும்" என்று எதிர் அறிக்கை வெளியிட்டு குட்டையைக் குழப்பினார்.

இதற்கிடையில் பழி தங்கள் மேல் விழா திருக்க 'மார்க்சிஸ்டு' தலைவர்கள் புதிய நாடகம் ஒன்றை அரங்கேற்றினர். "நாங்கள் உருவாக்கிய தேசிய பிரச்சாரக் கமிட்டி மூன்றாவது அணி அல்ல; எதிர்க்கட்சிகளின் தேசிய முன்னணியை வலுப்படுத்த இடதுசாரிகளால் ஆதரிக்கப்படும் எதிர்க்கட்சிகளின் ஐக்கியத்துக்காக கொள்கைத் திட்டங்களை வகுக்கவே நாங்கள் கூடினோம். பகுகுணா போன்ற தலைவர்களை தேசிய முன்னணியில் இணைக்க வேண்டும். முன்னணிக்கு வெளியிலும் முற்போக்கான சக்திகள் உள்ளன. தற்போது தேசிய முன்னணியில் இச்சக்திகளும் பங்கேற்க வேண்டும் என்று கருதுகிறோம்" என்று தேசிய முன்னணித் தலைவர்களிடம் சமாதானம் கூறினார்.

"தேசிய ஒருமைப்பாட்டுக்கும் தேசிய சுதந்திரத்துக்கும் இன்று வகுப்புவாத, பிரிவினைவாத சக்திகளால் பேரபாயம் ஏற்பட்டுள்ளது. ஆனால் தேசிய முன்னணி இதை முதன்மைப் படுத்தத் தவறுகிறது. குறிப்பாக தேசிய ஒருமைப்பாடு, வகுப்புவாத எதிர்ப்பு, வெளியுறவுக் கொள்கை ஆகியவற்றில் தேசிய முன்னணியினர் குளறுபடியாக உள்ளனர். அவர்களுக்கு இடதுசாரிகளுக்கும் வலது சாரிகளுக்கும் இடையே வேற்றுமை தெரியவில்லை. இரண்டு சக்திகளுடனும் சந்தர்ப்ப வாதமாக கூடுகிறார்கள்; போராடவும் செய்கிறார்கள். ஜனதா தள கட்சி ராஜீவின் சீனப் பயணத்தைச் சாடுகிறது. தேசிய முன்னணித் தலைவர்களில் பலர் பாரதீய ஜனதா ஆர்.எஸ்.எஸ். போன்ற வகுப்புவாத சக்திகளுடன் கள்ள உறவு கொண்டுள்ளனர். எனவே, தேசிய முன்னணியினருடன் இக்கொள்கைகள் பற்றி நாங்கள் விவாதிக்கும் அதேசமயம், மதச் சார்பற்ற இடது சாரி ஜனநாயக சக்திகளை நிறுவியுள்ளோம்" என்று போலிக் கம்யூனிஸ்டுகளும் அவர்களுடைய கூட்டாளிகளும் தன்னிலை விளக்கம் அளித்தனர்.

ஆக, ராஜீவை வீழ்த்துவது பிரதான கடமையல்ல; தேசிய ஒருமைப்பாடுதான் தங்கள் குறிக்கோள் என்று ரஷ்ய அடிவருடிகள் அப்பட்டமாக தங்கள் கருங்காலித்தனத்தைக் காட்டிக் கொண்டனர். எதிர்க்கட்சி என்ற போர்வையில் காங்கிரசின் ஐந்தாம் படையாக செயல்படுவதைக் கண்ட பூரிப்பில் காங்கிரசு ஆதரவு ஆங்கில நாளேடான 'தி டெலிகிராப்' தலையங்கமே தீட்டி வரவேற்றது. காங்கிரசு பொதுச் செயலாளர் கே.என்.சிங், ஆளும் கட்சியின் தேசிய ஒருமைப்பாடு, வகுப்புவாத எதிர்ப்பு முழக்கங்களை அப்படியே வரித்துக்கொண்டு ஐந்தாம் படை வேலையைச் செய்யும் தேசிய பிரச்சாரக் கமிட்டி நிறுவப்பட்டதை வாழ்த்தி வரவேற்றார். இன்னும் ஒருபடி மேலே போய் தேசிய முன்னணி தேச விரோதிகளின், ஊழல் பெருச்சாளிகளின் கூடாரம்; அதனுடன் 'மார்க்சிஸ்டுகள்' உறவு கொள்வது லெனினிசத்துக்கே எதிரானது என்று புத்திமதியும் கூறத் தொடங்கினார்.


ரஷ்ய அடிவருடிகள் இன்று வரித்துக் கொண்டுள்ள தேசிய ஒருமைப்பாடு -வகுப்புவாத எதிர்ப்பு முழக்கம் கூட அவர்களுடைய சொந்தச் சரக்கு அல்ல. போபார்ஸ் முதலான ஊழல் குற்றச்சாட்டுகள் வந்ததிலிருந்து அதிலிருந்து தப்பிக்க பாசிச ராஜீவ் கும்பல் மக்களை நயவஞ்சகமாக ஏய்க்க முன்வைத்த ஜனரஞ்சக முழக்கம்தான் இது! ஊழல் பிரதான பிரச்சினை அல்ல; நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் சுதந்திரத்துக்கும் தேச விரோத - வகுப்புவாத -பிரிவினைவாத சக்திகளால் மிகப் பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று ஓயாமல் பிரச்சாரம் செய்தது ராஜீவ் கும்பல். "ஊழலுக்கு ஆதாரமில்லை. எதிர்க்கட்சிகள் வீணாகப் புரளி கிளப்பி சதி செய்கின்றன. மக்களின் அன்றாடப் பிரச்சினைகளே அதைவிட முக்கியமானது என்று போலி சோசலிச - கவர்ச்சித் திட்டங்களை

படிப்பகம்

www.padippakam.com

அறிவித்துக் கொண்டு நாடு முழுவதும் 'விசிட்' செய்தார் பாசிச ராஜீவ். பாசிச் கும்பலின் இந்த தகிடுதத்தங்களை அம்பலப்படுத்தி முறியடிப்பதற்குப் பதில் போலிக் கம்யூனிஸ்டுகள் போபார்ஸ் விவகாரம் பற்றி அடக்கி வாசித்து, தேசிய ஒருமைப்பாட்டை காப்பதே எங்கள் லட்சியம் என்று 'ஜால்ரா' போட்டனர். இப்போது தேசிய பிரச்சாரக் கமிட்டியை நிறுவி பாசிச ராஜீவ் கும்பலோடு சேர்ந்து ஒத்தூதுகின்றனர்.

ரஷ்ய அடிவருடிகள் ஒருபுறம் ராஜீவுக்குக் கைதாளம் போட்டுக் கொண்டிருக்கும் போதே, மறுபுறம் இவர்களால் நிறுவப்பட்ட தேசிய பிரச்சாரக் கமிட்டியை அங்கீகரிப்பது குறித்து 'மார்க்சிஸ்ட்' கட்சிக்குள்ளேயே பிரிவும் மோதலும் ஏற்பட்டது. ''மார்க்சிஸ்ட'' கட்சியின் மத்தியக் கமிட்டித் தலைவர்கள் ஒருபுறமும், அதன் மே.வங்க மாநிலக் கமிட்டி ஒருபுறமுமாக ஆளுக்கொரு அறிக்கையை வெளியிட்டனர். ''தேசிய பிரச்சாரக் கமிட்டியைப் பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது. கட்சியின் மத்தியக் கமிட்டியிடமிருந்து எவ்வித அதிகாரபூர்வ அறிவிப்பும் எங்களுக்கு வரவில்லை. பேப்பரைப் பார்த்துத்தான் இது பற்றி நாங்கள் அறிந்தோம். அடுத்து நடைபெறவுள்ள கட்சியின் பொலிட்பீரோ கூட்டத்தில் இதை பிரச்சினையாக எழுப்புவோம்'' என்று கட்சித் தலைமைக்கு எதிராக அறிக்கைவிட்டார் மே.வங்க 'மார்க்சிஸ்ட்' கட்சி செயலாளர் சரோஜ் முகர்ஜி. ஆக, கட்சியைக் கலந்தாலோசிக்காமலேயே செயலாளர் நம்பூதிரிபாடும், மத்தியக் கமிட்டி உறுப்பினர் சுர்ஜித்சிங்கும் தன்னிச்சையாக ரஷ்ய அடிவருடிகளைக் கொண்ட ஒரு புதிய அணியை உருவாக்கியுள்ளனர். இதுதான் 'மார்க்சிஸ்ட்' கட்சித் தலைவர்கள் போதிக்கும் ஜனநாயக மத்தியத்துவம்!




இது ஒருபுறமிருக்க, மே.வங்க 'மார்க்சிஸ்ட்' கட்சியினர், தேசிய முன்னணியை ஆதரித்து அறிக்கை வெளியிட்டும், வரப்போகும் ஹௌரா நகராட்சி மன்ற தேர்தலையொட்டி, வி.பி.சிங் கட்சியினருடன் தொகுதி உடன்பாட்டுக்கான பேச்சு வார்த்தையிலும் தன்னிச்சையாக இறங்கினர். ராஜீவ் எதிர்ப்பு சக்திகளை ஓரணியில் திரட்ட - ஓட்டுக்கள் சிதறிவிடாமல் இருக்க பாரதீய ஜனதாவுடன் தேர்தல் கூட்டு அவசியமானது என்று வாதிட்டு வரும் மே.வங்க கோஷ்டியினர், 'அன்றாட போராட்டங்களில் ராஜீவ் எதிர்ப்பு சக்திகளுடன் ஐக்கியப்படுவது' என்ற போர்வையில் பாரதீய ஜனதாவை ஆதரிக்கவும் செய்தனர். பீதியடைந்த நம்பூதிரிபாடு கும்பல் உடனடியாக பொலிட் பீரோ கூட்டத்தைக் கூட்டி மேற்கு வங்க கட்சிப் பிரிவுடன் சமரசம் பேசியது. காரசாரமான விவாதத்துக்குப் பிறகு இருதரப்பினரும் சேர்ந்து தமது கட்சியின் பாரம்பரியத்துக்கேற்ப சந்தர்ப்பவாதமாக ஒருமுடிவை எடுத்தனர்.

''எதிர்க்கட்சிகளின் தேசிய முன்னணி; தேசிய பிரச்சாரக் கமிட்டி - இரண்டுடனும் மார்க்சிஸ்ட் கட்சி இணைந்து பிரச்சாரம் செய்யும். வகுப்புவாத, வெளியுறவுக் கொள்கை ஆகியவற்றில் தெளிவான முடிவு எடுக்க தேசிய முன்னணியுடன் நாங்கள் தொடர்ந்து விவாதிப்போம். அதேசமயம் பாரதீய ஜனதா அல்லாத எதிர்க்கட்சிகள் மற்றும் இடதுசாரி ஜனநாயக சக்திகளின் ஒற்றுமைக்காக தேசிய பிரச்சாரக் கமிட்டியுடன் சேர்ந்து செயல்படுவோம். இரண்டையும் ஆதரிப்பதில் எவ்வித முரண்பாடும் இல்லை'' என்று தமது கருங்காலித்தனத்தை நியாயப்படுத்த விளக்கெண்ணெய் தனமாக சித்தாந்த விளக்கமளித்தனர். இங்கே தமிழகத்தில் இடது - வலது போலிகள் ஓட்டுக்கும் சீட்டுக்கும் ஆளுக்கொரு பக்கம் பிரிந்து கிடக்கும்போது, இடதுசாரி ஒற்றுமையைச் சாதிக்கப் போவதாக 'மார்க்சிஸ்டுகள்' பிதற்றுவது நல்ல வேடிக்கை! அதிலும் முஸ்லீம்லீகுடன் சேர்ந்து ஓட்டுப் பொறுக்கிவிட்டு வகுப்புவாத சக்திகளை முறியடிப்பதே எமது லட்சியம் என்று இந்த பச்சோந்திகள் கூப்பாடு போடுவது அதைவிட நல்ல வேடிக்கை!

ரஷ்ய அடிவருடிகள் ஒருபுறம் தங்கள் கருங்காலித் தனத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கும் போதே, மறுபுறம் ஜனதாவின் சுப்பிரமணியசுவாமி -தேவகௌடா கும்பல் ராஜீவின் கைக்கூலிகளாக இருந்து சீர்குலைவு வேலைகளில் இறங்கி வருகிறது. வி.பி.சிங் முன்பு ராஜீவ் அரசின் நிதியமைச்சராக இருந்தபோது பேர்ஃபாக்ஸ் நிறுவனத்தில் மூலம் 16 எதிர்க்கட்சித் தலைவர்களின் சுவிஸ் வங்கிக் கணக்குகளைப் பற்றியும் கண்டறியும்படி உத்திரவிட்டுள்ளார் என்று புதிய பூதத்தைக் கிளப்பிவிட்டுள்ளார் சுப்பிரமணியசுவாமி. ராஜீவ் அரசின் தயவில் இதற்கான உதவிகளைப் பெற்று, புதிய ஆதாரங்களைத் தேடி வெளிநாடுகளுக்குப் பறக்கிறார். இதுவும் போதாதென்று கர்நாடக முன்னாள் முதல்வரும் இந்நாள் ஜனதாதள உபதலைவருமான ஹெக்டேவும் அவரது மகனும் சம்பந்தப்பட்ட நிலச் சலுகை ஊழல் மோசடியை புதிதாக அவிழ்த்துவிட்டு எதிர்கட்சிகளின் யோக்கியதையை நாறடிக்கிறார். இன்னொருபக்கம் தேவகௌடாவின் தூய ஜனதா கும்பல் பொம்மை அரசின் கழுத்தைச் சுற்றிய பாம்பாக அச்சுறுத்துகிறது.

இத்தனையும் போதாதென்று எதிர்க்கட்சிகளின் தேசிய முன்னணிக்குள்ளும், ஜனதாதளக் கட்சிக்குள்ளும் நாற்காலியைப் பிடிக்குமுன்னே நாய்ச் சண்டை உக்கிரமாக நடக்கிறது. பீகார், உ.பி., ராஜஸ்தான் மாநிலங்களுக்கு தலைவர்களை நியமிப்பதையொட்டி தேவிலால் -அஜீத்சிங் கோஷ்டிகள் ஜனதாதள பாராளுமன்றக் கமிட்டி கூட்டத்திலேயே அடிதடியில் இறங்கின. ம.பி.யில் வி.பி.சிங் தனது ஆதரவாளரை நியமிக்க முயற்சிக்கும் போது, சந்திரசேகர் கும்பல் காலை வாறுகிறது. பீகாரில் சந்திரசேகர் தனது ஆதரவாளரை நியமிக்க முயற்சிக்கும் போது, அஜீத்சிங் கும்பல் கழுத்தறுக்கிறது.

சுருக்கமாகச் சொன்னால் ஆளும் காங்கிரசுக்கு சற்றும் குறையாத வகையில் கோஷ்டி சண்டைகள் முற்றி புழுத்து நாறுகிறது எதிர்க்கட்சிகளின் கூட்டணி. தனிநபர் அகங்காரம், வாரிசு ஆட்சி, கட்சியிலும் ஆட்சியிலும் எதேச்சதிகாரம், அரசு சலுகைகளைப் பரவலாக்கிச் சூறையாடுவது, கருப்புச் சட்டங்களைப் போட்டு மக்களை ஒடுக்குவது மற்றும் பதவி வெறியர்கள், ஊழல் பெருச்சாளிகள், ஒருவரது அயோக்கியத் தனங்களை மற்றவர்கள் அங்கீகரித்துக் கொள்ளும் கழிசடைகளின் கூடாரம்தான் இக்கட்சிகளின் கூட்டணி. காங்கிரசுக்கு தேசிய மாற்றாகப் பீற்றிக் கொள்ளும் இவர்கள் பாசிச ராஜீவுக்கு எதிராக வெறுமனே தேர்தல் பிரச்சாரம்தான் செய்து வருகின்றனர். ராஜீவின் ஊழல், வகுப்புவாத அபாயம், மக்களது அன்றாடப் பிரச்சினைகளையே தேர்தல் பிரச்சாரமாக்கி, பதவியைப் பிடிக்கும் நாய்ச் சண்டையில் இறங்கியுள்ளனரே தவிர, பாசிச கும்பலுக்கு எதிரான மாற்று சக்தியாக அல்ல. ஆனால் காங்கிரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் தேசிய அளவில் குறைந்தபட்சம் ஒரு நெல்லிக்காய் மூட்டையாக கூட்டணி சேர்ந்து உருவாவதைக் கூட சகித்துக்கொள்ள முடியாமல், கூட இருந்தே குழிபறிக்கும் காங்கிரசின் ஐந்தாம் படையினர் -துரோகிகள்தான் ரஷ்ய அடிவருடிகள் என்பதை அரசியல் நிகழ்ச்சிப் போக்குகள் தெளிவாக நிரூபித்துக் காட்டுகின்றன.

■ — குமார்.

படிப்பகம்

www.padippakam.com

# போலீசு அதிகாரிகளின் ஒழுக்கக்கேடு!

## ஐ.ஜி. தேவாரம் ஒரு உதாரணம்!

கொலை வெறியர்கள், காமவெறியர்களாக இருப்பது ஒன்றும் வியப்புக்குரிய சங்கதி இல்லை. அதுவும் கைநிறையச் சம்பளமும், ஏராளமாக லஞ்சமும், கட்டுப்பாடற்ற அதிகாரமும், காக்கிச் சீருடைகளும் கிடைக்குமானால் கேட்கவே வேண்டாம்! படுகொலைகள் செய்தால் பாராட்டுதல்களும், பதவி உயர்வுகளும், பரிசுகளும், விருதுகளும் கிடைக்கும். காமக்களி வெறியாட்டங்களும், லஞ்ச ஊழலும் அதிகார முறைகேடுகளும் செய்தால் கண்டு கொள்வதில்லை என்கிற அரசாங்கக் கொள்கையினால் கொட்டமடிக்கும் மிகப் பெரிய சமூக விரோத கிரிமினல் கும்பலாக வளர்ந்துள்ளது போலீசு. அதற்குத் தலைமை யேற்கும் நாயகர்களாக வடக்கே பஞ்சாபில் ஒரு டி.ஜி.பி: கே.பி.எஸ்.கில். தெற்கே தமிழகத்தில் ஒரு ஐ.ஜி. தேவாரம்.

பஞ்சாப் - அரசு பயங்கரவாதப் படுகொலைகளுக்குத் தலைமை யேற்றதற்காக பத்ம விபூசன் விருது பெறுகிறார் கே.பி.எஸ்.கில். இங்கே அரவங்காடு தொழிலாளர், வடஆற்காடு, தர்மபுரி கம்யூனிசப் புரட்சியாளர்கள் கொலை முதல் சென்னை மீனவர் கொலைகள் வரை பல வற்றுக்காக அரசுத் தலைவர் மற்றும் 'அண்ணா' விருதுகள் பெற்றவர் தேவாரம். கே.பி.எஸ்.கில் இடத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டிருக்கும் தேவாரம், அதற்குத் தேவையான இன்னும் ஒரு தகுதி தனக்கிருக்கிறது என்பதை நிரூபித்து வருகிறார். அதாவது காமவெறியிலே கில்லுக்குத் தான் ஒன்றும் சளைத்தவர் அல்ல என்று செய்து காட்டுகிறார்.

கீழ்மட்டப் போலீசுக்காரர்களுடைய அன்றாட அக்கிரமங்கள், அட்டூழியங்களை சாதாரண மக்கள் நேரடியாகவே பார்க்க முடியும். ஆனால் மேல்மட்ட அதிகாரிகள் சாதாரண மக்கள் அண்டவே முடியாதவாறு அவர்கள் எதிரே வரவோ, ஏதாவது பேசவோ முடியாதவாறு அதிகாரத் திமிரோடு நடந்துகொண்டு 'மாமூலில்' தனக்குரிய பங்கைக் 'கப்பமாக' வசூலித்துக் கொள்கிறார்கள். சமூக விரோத கிரிமினல் குற்றவாளிகளின் தலைவர்களோடு -பெரிய மனிதர்களோடு நேரடித் தொடர்பு வைத்துக் கொண்டு இரகசிய வாழ்க்கை வாழ்கிறார்கள். இதனால், கீழ் மட்டத்திலிருப்பவர்கள் மட்டும் தான் ஏதோ அக்கிரமக்காரர்கள், ஒழுக்கக் கேடானவர்கள்; உயர் அதிகாரிகள் நேர்மையானவர்கள், திறமையானவர்கள், ஒழுக்கமானவர்கள் என்கிற தோற்றத்தை அவர்களால் ஏற்படுத்த முடிகிறது. முதலாளித்துவ பத்திரிக்கைகள், குறிப்பாகக் கிரிமினல் குற்றச் செய்திகளை முக்கிய வியாபாரச் சரக்காகக் கொண்டு பிழைக்கும் பத்திரிக்கைகள் உயர்மட்ட போலீசு அதிகாரிகளுக்குக் கால்பிடிக்கும் பணியைச் செய்து வருகின்றன.

இந்தப் பத்திரிக்கை தர்ம ' மரபுக்கு மாறாக சமீப காலங்களில், ஏதோ துணிச்சல் வந்தவர்களைப் போல உயர் போலீசு அதிகாரிகள் சம்பந்தப்பட்ட இரண்டு விவகாரங்களைப் பற்றிய செய்திகள் வெளியிட்டுள்ளனர். ஒன்று, சென்னை -திருவான்மியூரில் விபச்சாரம், கள்ளச்சாராயம், கொலைகள் மற்றும் பிற சமூக விரோதத் தொழில்கள் செய்துவந்த 'ஆட்டோ' சங்கருடன் உயர் போலீசு அதிகாரிகள் கொண்டிருந்த கூட்டு; இன்னொன்று, ஐ.பி.எஸ். அதிகாரிநாஞ்சில் குமரனின் மனைவியும், பெண் ஐ.பி.எஸ். அதிகாரியுமான திலகவதியுடன் ஐ.ஜி. தேவாரம் கொண்டுள்ள கள்ள உறவு -ஆகியவை பற்றிய செய்திகள்.

பத்திரிக்கைகளுக்கு துணிச்சல் வந்துவிட்டதால் இந்தச் செய்திகளை அவை வெளியிடவில்லை. போலீசு உயர் அதிகாரிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள பதவிச் சண்டை, கோஷ்டிச் சண்டை இப்படி வெளியே வந்து நாற்றமடிக்கிறது என்பது தான் உண்மை.

அடுத்தடுத்து ஆட்சிக்கு வரும் அரசியல்வாதிகளின் ஏவல்நாயாக இருந்து யார் ஆதாயம் பெறுவது என்பதற்கான போட்டி இப்போது வலுத்து விட்டதையும் காட்டுகிறது. முந்தைய ஆட்சியிலே எம்.ஜி.ஆரின் விசுவாச 'ஊழியர்களான' மோகன்தாஸ் - தேவாரம் கும்பலுக்குப் பதவி உயர்வு கொடுப்பதற்காக பல மூத்த அதிகாரிகள் பின்னுக்குத் தள்ளப்பட்டனர்; ஓரிருவர் 'நீதிமன்ற'த்துக்குப் போய், வழக்காடிப் பதவி பெற்றனர். 3 டி.ஜி.பி., 8 ஐ.ஜி., 32 டி.ஐ.ஜி. என்று மோகன்தாஸ் - தேவாரம் கும்பலுக்குப் பதவி உயர்வு தருவதற்காகவே பல பதவிகளை உருவாக்கியது எம்.ஜி.ஆர். ஆட்சி. அப்போதே உயர் போலீசு அதிகாரிகள் கோஷ்டிகளாகப் பிரிந்து, பத்திரிக்கைகளுக்கு 'கிசுகிசு' செய்திகளைக் கொடுத்தனர். பனிப்போர் நடத்திக் கொண்டிருந்தனர். கவர்னர் ஆட்சியில் எம்.ஜி.ஆரின் விசுவாசிகளை அதிகாரம் குறைந்த பதவிகளில் தள்ளிவிட்டு காங்கிரசு அடிவருடிகளை முக்கிய பொறுப்பில் வைத்தனர்.

அதேசமயம், சென்னை -திருவான்மியூர் 'ஆட்டோ' சங்கர் கும்பலின் கிரிமினல் குற்றங்கள், அட்டகாசங்கள் பெருகி வெடித்து வெளியே வந்துவிட்டது. சென்னை கமிஷனர் துரை, டி.ஐ.ஜி. ஜபார் அலி, ஐ.ஜி. ஸ்ரீபால், ஐ.ஜி. ராஜசேகரன் நாயர் ஆகியோர் அடங்கிய புதிதாகச் செல்வாக்குப் பெற்ற கும்பல் இதைப் பயன்படுத்திக் கொண்டது. 'ஆட்டோ' சங்கர் கும்பலின் விவகாரத்தைத் தோண்டத் தோண்ட பிணங்கள் மட்டுமல்ல, உயர் போலீசு அதிகாரிகளுடன் அது வைத்திருந்த கள்ளக் கூட்டு பற்றிய பல இரகசியங்களும் வெளி வந்தன. அவற்றையெல்லாம் திட்டமிட்டுப் பத்திரிக்கைகளுக்கு கிசுகிசுத்த ('லீக்' செய்த) போலீசு அதிகாரிகள், போட்டிக் கும்பலை மிரட்டி ஆதாயம் அடைய மட்டுமே பயன்படுத்திக் கொண்டார்கள். போலீசு உயர் அதிகாரிகளின் இரண்டு கும்பல்களையும் சேர்ந்தவர்களும் 'ஆட்டோ' சங்கருடன்

*தேவாரம், திலகவதி, நாஞ்சில் குமரன் ஆகியோரது அருமை, பெருமை திறமைகளைக் கட்டம்கட்டி எழுதியுள்ளது ஜூனியர் விகடன். அதிலே, "நக்சலைட்டுகளை அடக்கிய பெருமை இவருக்குண்டு" என்று புகழ்ந்துள்ளது. 'நக்சலைட்டு'களை மட்டுமல்ல, அரவங்காடு தொழிலாளர்கள், சென்னை மீனவர்கள் ஆகியோரைத் தானே சுட்டுக் கொன்ற கொலை வெறியன் தேவாரம்.*

*நிராயுதபாணிகளான புரட்சியாளர்களைப் பிடித்து சித்திரவதை செய்து, எழுந்து நிற்கவும் இயலாத நிலையில் காடுகளுக்கு இழுத்துப்போய் கைகால்களைக் கட்டிச் சுட்டுத் தள்ளுவது தான் மாவீரமா?*

*"தேவாரம் மலைப்பகுதகளில் இருந்த போது தினமும் இருபத்தைந்து முப்பது கிலோமீட்டர் பாதயாத்திரை செய்து மலை ஜாதி மக்களோடு பழகி, அவர்களின் வாழ்க்கைமுறைகளை ஆராய ஆர்வம் கொண்டவர்" என்றும் எழுதியுள்ளது.*

*தேவாரம் அங்கே போனதற்கு வேறு காரணங்கள் உண்டு. ஆள்காட்டிகளையும் எடுபிடிகளையும் உள்ளூரிலே வைத்துக் கொள்ளாமல் எந்தப் போலீசுக்காரனும் வேலை செய்வதில்லை. சென்னை நட்சத்திர ஓட்டலிலே நிரந்தரமாக அறைபோட்டு மிதக்கும் தேவாரத்துக்கு ஜூனியர் விகடன் தரும் பாராட்டுதல்கள் எதற்கு? இந்தக் கிசு கிசு கட்டுரை மீதான ஆத்திரத்தை சரிகட்டுவதற்குத் தானே!*

*திலகவதியுடன் தேவாரம் தங்குவதற்கு விடுதி கொடுத்து ஏற்பாடு செய்த காவல திகாரி விவகாரம் வெளியான பிறகு ராணிப்பேட்டை 'பெல்' நிறுவனத்துக்கு மாற்றப்பட்டுள்ளார். "தேவாரத்தை எனக்குத் தெரியும், நக்சலைட்டுகளை ஒடுக்குவேன்" என்று அங்குள்ள தொழிலாளர்களைப் பார்த்துக் கொக்கரிக்கிறார். தொழிலாளர்களுக்கு எதிராக எப்படிப்பட்ட (அ)யோக்கியவான்கள் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள் பாருங்கள்!*

படிப்பகம்

www.padippakam.com



திலகவதியின் சட்டபூர்வ கணவன் நாஞ்சில் குமரன்



பெண் போலீசு அதிகாரி திலகவதி



கொலைகாரன் - காமவெறியன் தேவாரம்

கூட்டுச் சேர்ந்து குற்றங்கள் செய்ததற்கான ஆதாரங்கள் இருப்பதைக் காட்டி ஒருவருக்கொருவர் மிரட்டிக்கொண்டனர்.

'''ஆட்டோ' சங்கர் விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் எவ்வளவு உயர்மட்டத்தினர் ஆனாலும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று சவடால் அடித்தார் கவர்னர் அலெக்சாண்டர். ஆனால் கீழ்நிலை மற்றும் இடைத்தட்டு அதிகாரிகள் ஒருசிலர் தற்காலிக நீக்கம் செய்யப்பட்டதோடு சரி. இலாகாபூர்வ விசாரணை என்கிற பெயரில் போலீசு கிரிமினல் குற்றவாளிகள் தப்புவிக்கப் பட்டனர். அவர்கள் சம்பந்தப்பட்ட ஆதாரங்கள் அமுக்கப்பட்டன; அழிக்கப்பட்டன. கடைசியாக, 'ஆட்டோ' சங்கர் கும்பல் மீதான குற்றப் பத்திரிகையில் சம்பந்தப்பட்ட போலீசுக்காரர்கள் எவர் பற்றியும் குறிப்பிடவில்லை; அவர்கள் மீது வழக்கோ, தண்டனையோ கிடையாது. தற்காலிக நீக்கம் செய்யப்பட்டவர்கள் கூட காலக்கிரமத்தில் மீண்டும் சம்பளப்பாக்கியுடன் பதவி பெறுவார்கள்.

புது ஆட்சியாளர்களான கருணாநிதி கட்சியிடம் யார் கூடுதலான விசுவாசிகளாக இருந்து பதவிகளைப் பெறுவது என்கிற போட்டி, போலீசு அதிகாரிகளிடையே வலுத்துள்ளது. அதன் காரணமாக இவ்வளவு காலமாக போலீசுத் துறைக்குள்ளே உலவி வந்த திலகவதி -தேவாரம் கள்ள உறவு பற்றிய பல இரகசியங்களைப் போட்டிக் கும்பல் வெளியிட்டுள்ளது. ஏற்கெனவே திருமணமாகி இரண்டு குழந்தைகளுக்குத் தாயான பெண் ஐ.பி.எஸ். அதிகாரி திலகவதி, தன்னோடு பயிற்சி பெற்ற நாஞ்சில் குமரன் என்கிற இன்னொரு அதிகாரியைக் காதலித்தார். முதல் கணவனை விவாகரத்து செய்துவிட்டு நாஞ்சில் குமரனை மணந்து ஒரு குழந்தையும் பெற்றார். இப்போது இருவருக்கும் தகராறு ஏற்பட்டு பிரிந்து வாழ்கின்றனர்; விவாகரத்து வழக்கு நடக்கிறது.

இதற்குக் காரணம்:

● தேவாரத்துக்கும் திலகவதிக்கும் கள்ள உறவு உண்டு. அதைக் கையும்களவுமாக நானே பார்த்தேன்.

● 1987 ஜூன் மாதம் சென்னை 'பெல்' நிறுவன விருந்தினர் விடுதியை ஆந்திர போலீசு ஐ.ஜி. ஜெகதீஷ் என்கிற பெயரில் (அப்படி ஒரு அதிகாரியே கிடையாது) எடுத்துக் கொண்டு தங்கியிருந்தனர். இதற்குச் சாட்சியாக ஒரு பெண் வக்கீலும் உள்ளார்.

● 1987 ஜூலை 14ந் தேதி தேவாரம் -திலகவதி கள்ளத் தொடர்பு பற்றி டி.ஜி.பி. ரவீந்தரனுக்குப் புகார் கொடுத்தார் நாஞ்சில் குமரன். அடுத்தநாள் இரண்டு லாரிகளில் சென்னை போலீசை ஏவி குமரன் வீட்டிலிருந்த பொருட்களை அள்ளிவரச் செய்தார் தேவாரம்.

● புகாரை விசாரித்த ஐ.ஜி. ராஜசேகரன் நாயர், திலகவதி - குமரன் இருவரையும் இடமாற்றம் செய்ய உத்தரவிட்டார். அதன்பிறகு விடுமுறை போட்டு சென்னை வந்து தங்கிய திலகவதிக்கு அரசு புலன்விசாரணை என்கிற பெயரில் வாடகைக்கார் அமர்த்திக் கொண்டு தேவாரமும் சுற்றினார். அந்த வகையில் 47,000 ரூபாய் அரசுக்குச் செலுத்தும்படி இப்போதைய கமிஷனர் துரை தாக்கீது அனுப்பியுள்ளார்.

● குமரன் - திலகவதி விவாகரத்து வழக்கு பற்றி தேவாரத்துக்கு அனுப்பப்படும் 'கோர்ட் சம்மன்களை' ஆள் இல்லை என்று தேவாரம் திருப்பி அனுப்புகிறார்.

— இவையெல்லாம் நாஞ்சில் குமரனின் குற்றச்சாட்டுகள்.

''திலகவதி கணவரால் சித்திரவதை செய்யப்பட்டதால், சக அதிகாரி என்பதால் 'பெல்' நிறுவன விருந்தினர் விடுதியில் தங்க நானே ஏற்பாடு செய்தேன். திலகவதியைக் குமரன் 'கொலை' செய்யும் நோக்கத்துடன் அங்குபோய்க் கொண்டிருப்பதாக செய்தி அறிந்து, பாதுகாப்புக் கொடுக்கும் நோக்கத்துடன் அங்கு போனேன்'' என்று விசாரணையின் போது எழுதிக் கொடுத்திருக்கிறார் தேவாரம்.

''அங்கு தற்செயலாகப் போனேன்'' என்றும், 'அங்கு தண்ணீர்த் தட்டுப்பாடு என்

*போலீசு அதிகாரிகளிடையே கோஷ்டிகள்! கோஷ்டிகளிடையே மோதல்கள்! ஒழுக்கக்கேடுகளால் ஒழுக்கக் கேடுகள்! -''இதையெல்லாம் அறிந்துதான் தனது நேரடிப் பார்வையில் போலீசு இலாகாவை வைத்துக் கொண்டிருக்கிறார் முதல்வர்'' என்று ஒரு உயர் போலீசு அதிகாரி சொன்னாராம். அதை ஒப்புக்கொண்டு பீடிகை போட்டு, தொடங்கி தேவாரம் - திலகவதி விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும்படி முடிக்கிறது ஜூனியர் விகடன்.*

''மைலாப்பூரிலே ஒரு மாளிகை வீட்டில், போலீசு காவலுடன் தர்மாம்பாள் என்ற பெண்ணை வைத்துக் கொண்டிருக்கிறார், கருணாநிதி'' என்று இந்திராவிடம் 1972-இலே புகார் கொடுத்தார் எம்.ஜி.ஆர். அவர் தன் மனைவி என்று சொல்லிக்கொள்ள கருணாநிதி கூட தயாராய் இல்லை. ''என் மகள் கனிமொழியின் தாய்'' என்று தான் சட்டசபையில் கூறினார்.

*15 ஆண்டுகளுக்குப் பிறகு அவர் கருணாநிதியின் இரண்டாம் மனைவி ராஜாத்தி என்று சமூகத் தகுதி கொடுத்து அறிமுகப்படுத்தியது ஜூனியர் விகடன். இப்போது, போலீசு இலாகாவில் ஒழுக்கத்தை நிலைநாட்டுவதற்காக நேரடியாக அதன் பொறுப் பேற்றுள்ளதாக எழுதுகிறது! இப்போது மட்டுமல்ல!! இதற்கு முன்பும் கருணாநிதியும் எம்.ஜி.ஆரும் போலீசுத்துறையின் பொறுப்பை எப்போதும் தம்மிடமே வைத்திருந்தனர். கட்சிக்காரர்களிடம் உள்ள அவநம்பிக்கை! அமைச்சரவையிலேயே அதிக அதிகாரமுள்ள துறையைத் தாமே வைத்துக்கொள்ள வேண்டும்!! முறைகேடுகள் செய்யவும், மற்றவர்களை அடக்கவும் மிரட்டவும் அதுதான் வசதி! -இவைதான் காரணமே தவிர வேறில்லை!*

படிப்பகம்

www.padippakam.com

நார்கள், தண்ணீர் இருக்கிறதா என்று பார்க்கப் போனேன்' என்றும் 'திலகவதி தங்கி மூன்று நாட்களாகிறது; இடத்தைக் காலிசெய்யவேண்டி வந்தேன்' என்றும் 'இந்த வழியே போனபோது எட்டிப் பார்த்தேன்' என்றும் அப்போது முன்னுக்குப்பின் முரணாக தேவாரம் சொன்னார்'' என்று இந்த விவகாரத்துக்கு சாட்சியான ஒரு பெண் வக்கீல் எழுதிக் கொடுத்துள்ளார். ஒரு போலீசுக் கமிஷனர் என்னவெல்லாம் வேலை பார்க்கிறார் பாருங்கள்! சூரப்புலி தேவாரம் அல்லவா?

''கணவனின் சித்திரவதை தாங்காமல் வெளியேறி 'பெல்' நிறுவன விருந்தினர் விடுதியில் தங்கினேன். என்னைக் கொல்ல குமரன் வருவதாக செய்தி அறிந்து பாதுகாப்புக் கொடுக்க வந்தார் தேவாரம்'' என்று விளக்க மளித்துள்ளார் திலகவதி. அதிவீர சூரப்புலி தேவாரம் ஒரு கொலை நடக்கக் கூடாது என்பதற்காக போலீசு படையுடன் போகவில்லை. தானே எதிர்கொள்ளத் துணிவுடன் போனார்! நம்ப முடிகிறதா? இத்தனையும் விசாரித்த் குற்றப்பிரிவு ஐ.ஜி. ராஜசேகரன் நாயர், குமரனையும், திலகவதியையும் வெவ்வேறு ஊர்களுக்கு இடமாற்றம் செய்யும்படி சிபாரிசு செய்தார். போலீசுத் துறையும் அதை ஏற்றது.

ஆனால் தேவாரம் —

● 'பெல்' நிறுவன விடுதியில் திலகவதியைத் தங்க வைப்பதற்காக பொய்யான பெயரில் பதிவு செய்து ஆள்மாறாட்டம் செய்தார்.

● 25 போலீசுக்காரர்களை தனது அதிகார எல்லைக்கு வெளியே உள்ள இடத்துக்கு ஏவி குறையாடச் செய்தார்.

● புலன் விசாரணை என்கிற பெயரில் சுற்றுலா வாடகைக்காரைத் திலகவதிக்கு அமர்த்திக் கொடுத்தார்.

● 'ஆள் இல்லை' என்று கோர்ட் சம்மனைத் திருப்பி அனுப்பி தொடர்ந்து நீதி மன்ற உத்தரவை மதிக்கத் தவறுகிறார்.

இவையெல்லாம் கிரிமினல் குற்றங்கள், அதிகார முறைகேடுகள் என்பதற்காக தேவாரத்தின் மீது ஒரு நடவடிக்கையும் கிடையாது. காரணம், போலீசு சார்பாகப் பல் கொலைகளைச் செய்தவர்! பல குண்டுவெடிப்புகளை அரங்கேற்றியவர்! இதற்காக அரசுத் தலைவர் விருதும், அண்ணா விருதும் வாங்கியவர்! தேவாரம் - திலகவதி விவகாரத்தைப் பத்திரிக்கைகளுக்குக் கிசுகிசுத்த போலீசு உயர் அதிகாரிகளின் நோக்கம் தேவாரம் கும்பலை அம்பலப்படுத்தி மட்டம் தட்டி ஆதாயம் அடைவதுதானே ஒழிய தவறுகளைத் தடுப்பதோ, தண்டிப்பதோ அல்ல!

இந்த விவகாரத்தை இரண்டு மாதங்களுக்கு முன்பு முதலில் வெளியிட்ட தராசு 'கிசுகிசு' வார ஏடு ''ஒரு பெண் போலீசு அதிகாரியின் சோகம்!'' என்கிற தலைப்பில் திலகவதி - தேவாரத்துக்காக ஒப்பாரி வைத்திருந்தது. அதிலும் நேரடியாக தேவாரத்தின் பெயர் குறிப்பிடவில்லை. இப்போது மிகவும் விரிவாக இந்த விவகாரத்தை அலசியிருக்கிறது ஜூனியர் விகடன். இரண்டு பத்திரிக்கைகளுமே உயர்போலீசு அதிகாரியின் குடும்பம் நாசமாவது குறித்த ஆதங்கமும் குறிப்பாக திலகவதி -குமரனின் ஐந்துவயது குழந்தையின் மீது அனுதாபமும் கலந்து செய்திச் சரக்கு வியாபாரம் நடத்தியுள்ளன.

''ஆட்டோ சங்கர் விவகாரம் போலீசு துறையில் மலிந்து கிடக்கும் அழுக்கை வெளியே காட்டிவிட்டது. அதுமட்டுமல்ல -தமிழக உயர்மட்ட போலீசு அதிகாரிகள் பலரிடையே இதுவரை இல்லாத அளவுக்குக் 'கட்டுப்பாடற்ற ஒழுக்கக் குறைவு' தலைதூக்கி விட்டதையும் ஆட்டோ சங்கர் கேசு வெளிப்படுத்தி யிருக்கிறது. கடந்த சில காலமாக போலீசு அதிகாரிகளிடையே ஒழுக்கக்குறைவு பல மட்டங்களில் படிந்து போயிருப்பது அதிர்ச்சி தரும் விஷயம்'' என்றும், தேவாரம் - திலகவதி விவகாரம் தொடர்பான தகவல்கள் தமக்குத் தெரிய நேர்ந்தபோது 'அந்தோ! தமிழக போலீசு' என்று திடுக்கிட நேர்ந்தது என்றும் ஜூனியர் விகடன் எழுதுகிறது.

போலீசுத் துறையின் மீதான சமூக அக்கறை - கரிசனை காரணமாகத்தான் இந்தச் செய்தியை வெளியிட்டதாகவும் போலீசு அதிகாரிகளின் தனிப்பட்ட வாழ்க்கையைக் 'குழாயடிப் பாஷையில்' அலசுவதோ, குமரன் - திலகவதி விவாகரத்து விவகாரத்தில் தலையிடுவதோ நோக்கமல்ல என்றும் வியாபாரத்துக்குக் கூட நல்ல நோக்கம் கற்பிக்கிறது. 'பலான' என்ற சொல்லை ஆண் - பெண் (கள்ள) உறவுக்கான குறிச் சொல்லாகப் பயன்படுத்தி தற்போது ஆபாச வியாபாரம் செய்து வருகின்றன பத்திரிக்கைகள். அந்த 'பலான' என்ற சொல்லோடு அட்டைப்பட்த் தலைப்பிட்டு உள்ளே '' 'X' ஸ்காண்டல் ''(உடலுறவு சம்பந்தப்பட்ட குறிப்புகள்) என்றெல்லாம் எழுதி பரபரப்பாக வியாப்பாரம் செய்வதற்கு இப்படி ஒரு நியாயப்படுத்துதல்!

போலீசுத் துறையில் ஒழுக்கம் பற்றி அக்கறைப் பட்டிருந்தால் 'ஆட்டோ' சங்கர் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட எல்லா உயர் போலீசு அதிகாரிகளைப் பற்றிய இரகசியங்களும் தனக்குத் தெரியும் என்று எழுதிய ஜூனியர் விகடன் ஏன் வெளியிடவில்லை? குற்றவாளிகளை அம்பலப்படுத்தித் தண்டிப்பதுதானே ஒழுங்கை நிலைநாட்டும்? 'ஆட்டோ' சங்கர் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒருவரை ஒருவர் மிரட்டி பேரம்பேசி யாரையும் காட்டிக் கொடுப்பதில்லை என்கிற சமரசத்துக்கு ஒரு பகிரங்க மேடையாக இருந்தது; அதேசமயம் பரபரப்பான செய்திகளை வெளியிட்டு வியாபாரம் செய்து கொள்வது மட்டுமே ஜூனியர் விகடனின் நோக்கம் என்று செயல்பட்டது. இதனால் 'ஆட்டோ' சங்கர் விவகாரம் வெளியே வந்து நாடே நாற்றமடித்த போதும் சென்னையிலேயே போலீசு அதிகாரிகளும் பல சமூகவிரோத கும்பல்களும் தமது இரகசிய உலகத் தொழில்களைத் தங்கு தடையின்றி நடத்துகின்றனர்.

□ மணி

சமீபத்தில் மேற்குவங்க மாநிலத்தில் இரண்டுபெரும் தொழிற்தகராறுகள் முடிவுக்கு வந்திருக்கின்றன. இதில் அத்தொழிற்சாலைகளின் உடமையாளர்களான மிகப் பெரும் இரண்டு தரகு முதலாளிகள் 'பெற்ற வெற்றிகள், இந்தியாவிலுள்ள தரகு முதலாளிகள் அனைவருக்கும் 'புது தெம்பினை கொடுத்திருக்கிறது.

தொழில் தகராறு முடிவுக்கு வந்து கதவடைப்பை விலக்கிக்கொண்ட இருபெரும் ஏகபோக நிறுவனங்களில் ஒன்று, பாட்டா. காலணிகள் உற்பத்தி -விற்பனையில் இந்தியாவில் ஏகபோக ஆதிக்கம் செலுத்தும் பன்னாட்டு பகாசுர நிறுவனம். ஆண்டொன்றுக்கு இதன் மொத்த இலாபம் ரூபாய் 70 கோடி. மே.வங்க மாநிலத்தில் கல்கத்தா நகரில் நிறுவியிருக்கும் மிகப்பெரும் உற்பத்தி மையமான பாட்டாநகர் தொழிற்சாலையை தலைமையகமாகக் கொண்டு இந்தியாவில் இயங்குகிறது.

பாட்டாநகர் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களின் தொழில் தரத்தைப்பற்றி அடிக்கடி புகார் எழுப்பிவந்த இந் நிறுவனத்தின் நிர்வாகம், சென்ற ஆண்டு ஜூலை மாதம் 9ம் தேதியன்று எந்த முன்னறிவிப்பும் இன்றி பாட்டாநகர் உற்பத்தி மையத்தை இழுத்து மூடியது. 6000 தொழிலாளர்களை நடுத்தெருவில் வீசியது. தொழிலாளர்கள் வீறு கொண்டெழுந்தனர்.

தற்போதைய போராட்டத்தின்போது சங்கத்தலைமை 'சி.பி.எம்.' மற்றும் இ.காங்கிரசு கட்சி ஆகியவற்றின் கலவையாக இருந்தது. சங்கத்தின் நிர்வாக குழுவை 'சி.பி.எம்.' கட்சியைச் சேர்ந்த சி.ஐ.டி.யு. தொழிற்சங்கமும், சங்க செயலர், தலைவர் பதவிகளை இ.காங்கிரசுக் கட்சியின் தொழிற்சங்கமும் கட்டுப்பாட்டில் வைத்திருந்தன.

கதவடைப்பைப் பயன்படுத்தி, இவ்விரு தலைமைகளும் தனியாக நிர்வாகத்துடன் சமரசம் செய்துக்கொண்டு கதவடைப்பை விலக்குவதில் வெற்றிபெற்று எதிரணியை சங்கத்தலைமையிலிருந்து விரட்டுவதில் குறியாய் இருந்தன.

போதிய காரணங்களும் முன்னறிவிப்பும் இன்றி நிர்வாகம் கதவடைப்பு செய்வது சட்டப்படி குற்றம். ஆனாலும் மே.வங்க அரசு பாட்டா நிர்வாகத்தின் மீது அதிகாரபூர்வமாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. பாதிக்கப்பட்ட தொழிலாளர்களை ஏய்ப்பதற்காக, தனிப்பட்ட முறையில் மே.வங்க தொழிலாளர் நல அமைச்சர், ''கதவடைப்பு சட்ட விரோதம்'' என்று திருவாய் மலர்ந்தார். அதையும் நிர்வாகத்துக்கு எழுத்துபூர்வமாக தெரிவிக்கவில்லை. எதிரணி இ.காங்கிரசு தொழிற்சங்க தலைமையோ நிர்வாகத்துக்கு எதிராக வாயே திறக்கவில்லை. இ.காங்கிரசின் மௌனம் இடதுகளின் வயிற்றில் புளியைக் கரைத்தது. அவசரமாக, ஜோதிபாசு வெளிநாட்டில் வாழும் பாட்டா நிறுவன தலைவர் தாமஸ் பாட்டாவுக்கு வெட்கமில்லாமல் நட்பு முறையில் கடிதம் எழுதி கதவடைப்பை விலக்கிக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார். ''உள்ளூர் நிர்வாகத்


படிப்பகம்

www.padippakam.com



# தொழிற்சங்க சுல்தான்களின் துரோகம்!

தின் நடவடிக்கையில் நான் தலையிட விரும்பவில்லை'' என்று பதில் எழுதி, தம் சீடர்களின் காலில் நேரடியாக விழுமாறு ஜோதிபாசுவுக்கு குறிப்பால் உணர்த்தினார், தாமஸ் பாட்டா.

உண்மையில், பாட்டா நிர்வாகத்தின் குடுமி அதன் விற்பனைப்பிரிவு தொழிலாளர்களின் கையிலிருக்கிறது. கதவடைப்பை விலக்க அத்தொழிலாளர்களை போராட்டத்திற்கு ஆதரவாக திரட்டினாலே போதும் நிர்வாகம் எப்போதோ தொழிலாளர்களின் காலடியில் மண்டியிட்டிருக்கும். ஆனால், போலிகளின் நோக்கம் உரிமையைப் போராடி பெறுவது இல்லை. பாதிக்கப்பட்ட தொழிலாளர்களை திருப்திப்படுத்த, தன் தலைமையின் கீழிருந்த பாட்டாவிற்பனைப் பிரிவு தொழிலாளர்களை ஒருநாள் மட்டும் அடையாள வேலைநிறுத்தத்துக்கு அறைகூவி அழைத்தது. அதோடு அவர்களை தனியாகப் பிரித்துவைத்தது. போலிகளின் எச்சரிக்கையை உணர்ந்த பாட்டா நிர்வாகம், கல்கத்தா நீதிமன்றத்தில் விற்பனைப்பிரிவு தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்துக்கெதிராக வழக்கு தொடுத்து, மிரட்டியது.

நான்கு மாதங்கள் இவ்வாறு பேச்சுவார்த்தையிலும், நீதிமன்ற வழக்குகளிலும் காலத்தை வீணடித்து தொழிலாளர்களின் போர்க் குணத்தை மழுங்கடித்தது போலிகள் சங்கத் தலைமை. கடைசியில், வேறுவழியில்லை, எப்படியாவது கதவடைப்பை முதலில் விலக்கிக்கொள்ள ஒப்பந்தம் போட்டுக்கொள்வதுதான் தற்போதுள்ள ஒரே வழி என சமாதானம் கூறி நிர்வாகத்தின் காலில் எண்சாண் கிடையாக விழுந்தது.

காத்திருந்த பாட்டா நிர்வாகம், தொழிலாளர்களை கொத்தடிமைகளாய் நடத்துவதற்கான முழு உரிமைகேட்டு, 34 எதிர் கோரிக்கைகளை முன் வைத்தது. பாட்டா நகர் உற்பத்தி மையம் ஏற்கனவே நட்டத்தில் இயங்குவதாகவும், ஏதோ தொழிலாளர்களுக்காக திரும்பவும் திறக்க சம்மதிப்பதாகவும் நாடகமாடி கொத்தடிமை ஒப்பந்தத்தை திணித்தது.

✱ பாட்டாநகர் ஆலையின் உற்பத்திச் செலவு அதிகமாக இருப்பதால் அம்மையம் லாபகரமாக இயங்கவில்லை. எனவே தேவையானபோது அவசியமான உதிரிப் பாகங்கள் வெளியில் செய்துக் கொள்ளப்படும்.

✱ தொழிலாளர்கள் நிலையான உற்பத்தி இலக்குக்கு உத்திரவாதம் தரவேண்டும். அவசியப்படும்போது தடையற்ற கூடுதல் உற்பத்தியும் செய்ய வேண்டும். நிர்வாகத்தின் கட்டுப்பாட்டை தொழிலாளர்கள் மீறுவது, போராட்டம், தர்ணா, வேலையை மந்தப்படுத்துவது, நிறுத்துவது முதலான எந்தப் போராட்டத்திலும் தொழிலாளர்கள் ஈடுபட கூடாது.

✱ எக்காரணம் கொண்டும் பதவி உயர்வு, தொழிலாளர்கள் பதவியை மாற்றி அமைக்கக் கோருவது ஆகியன எந்த தொழிலாளிக்கும் ஏற்கப்பட மாட்டாது.

✱ நிர்வாகம் தனக்கு தேவைப்பட்ட போது, ஒரே தன்மைகொண்ட வேலைகள் அல்லது வெவ்வேறு பணிமணிகளில் அல்லது வெவ்வேறு ஷிப்டுகளில் செய்யப்படும் ஒரேமாதிரியான வேலைகள் செய்யும் தொழிலாளர்களை பிரிக்கும்; ஒருங்கிணைக்கும்.

✱ தற்போது தேவைக்கு அதிகமாக உள்ள தொழிலாளர்களையும், ஆலையை மறு ஒழுங்கமைப்பு செய்யும்போது அதனால் உபரியாகும் தொழிலாளர்களையும் நிர்வாகம் தற்போது தீர்மானிக்கப்பட்ட குறைந்த கூலியில் (மணிக்கு இவ்வளவு கூலி என்ற அடிப்படையில்) வைத்துக் கொள்ளும். இத்தொழிலாளர்கள், தாமதமாக வேலை செய்தாலோ, நிர்வாகம் கோரும்போது வேறு வேலைக்களைச் செய்யமறுத்தாலோ, பணி இடமாற்றத்தை ஏற்க மறுத்தாலோ, அவர் தொடர்ந்து நிறுவனத்தில் பணிபுரிய விரும்பவில்லை என்று நிர்வாகம் எடுத்துக் கொள்ளும். அந்நாட்களில் அவருக்கு கூலியோ, உதவித் தொகையோ நிர்வாகம் வழங்காது.

✱ நிரந்தர மாதச் சம்பள ஊழியர்கள் இப்போது எந்த தகுதியில் உள்ளார்களோ அதிலேயே வைக்கப்படுவார்கள். மறு ஒழுங்கமைப்பு காரணமாக அவ்வாறு வாய்ப்பில்லையென்றால் அவர்கள் அதற்கு அடுத்த கீழ்நிலைத் தகுதிகளில் வைக்கப்படுவார்கள்.

✱ இந்த ஒப்பந்தம் 1991 ஏப்ரல் 30 வரை நீடிக்கும். இந்த இடைப்பட்ட காலத்தில் தொழிலாளர்கள், ஊதிய உயர்வு, சலுகை, அலவன்சுகள் முதலான பொருளாதார சலுகைகளையோ அல்லது பொருளாதாரமற்ற வேறெந்த சலுகைகளையும் தனியாகவோ, கூட்டாகவோ கோர முடியாது. தொழிற்சங்கத்தின் ஒப்பந்தப் பிரிவு 28 (c) இதற்கு உத்தரவாதமளிக்கும்!

போலிகளின் துரோக ஒப்பந்தத்தின் மூலம், தொழிலாளர் வர்க்கத்துக்கு மாட்டப்பட்டுள்ள கடிவாளமும் கைவிலங்கும் எவ்வளவு கொடூரமானது என்பது சொல்லாமலே விளங்கும்.

மே.வங்க போலிகளின் கடந்த 10 ஆண்டுகால ஆட்சியில் இம்மாதிரி பல நூறு கதவடைப்புகள் நிகழ்ந்துள்ளன. எண்ணிலடங்காத துரோக ஒப்பந்தங்கள் மூலம், தொழிலாளர் உரிமைகள் சட்டபூர்வமாகவே பறிக்கப்படுகின்றன. தொழிலாளி வர்க்கம் முன் கையெடுத்து வேலைநிறுத்தம் செய்து கோரிக்கைகளை அடைவது என்பது போலிகளின் ஆட்சியில் கானல் நீராகிவிட்டது. மாறாக, முதலாளிவர்க்கம் தொழிலாளர்களின் மீது நினைத்த நேரத்தில் மூர்க்கமாகப் பாய்ந்து உரிமைகளை பறிப்பது என்பது புதுநியதியாகிவிட்டது. மே.வங்க அரசின் அதிகாரபூர்வமான அறிக்கைகளே இதற்கு சாட்சி பகர்கின்றன.

உதாரணத்திற்கு, '85 ஆம் ஆண்டில் மே.வங்க அரசிடம் வந்த தொழிற் தகராறு வழக்குகளில் வெறும் 19.9% வழக்குகள் மட்டுமே தொழிலாளர்கள், வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிற்தகராறுகள் சம்பந்தப் பட்டவை. அவ்வேலை நிறுத்தங்களில் தொழிலாளர்களின் எண்ணிக்கையோ 9.1% மட்டுமே! இதனால் ஏற்பட்ட மனித உழைப்பு நாட்களின் இழப்பு வெறும் 1.3%. இவை '86 ஆண்டில் முறையே 14%, 15.1%, 2% ஆக இருந்தது. ஆனால் முதலாளிகளின் அநியாய கதவடைப்பால் ஏற்பட்ட வழக்குகள், பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள், இழப்பான மனித உழைப்பு நாட்கள் முறையே '85 ஆம் ஆண்டில் 80.9%, 90.9%, 98.7% ஆகவும் '86 ஆம் ஆண்டில் 86%, 84.9%, 98% ஆகவும் உச்சத்தை எட்டியது.

தனது தலைமையின் கீழ் இருக்கும் பிழைப்புவாத தொழிற்சங்கங்களின் வளையத்துக்குள் அனைத்து தொழிலாளர்களையும் இழுத்துப்போட்டு ஆட்சியதிகாரத்தின் மூலம் அவர்களின் உரிமைகள் அனைத்தையும் உருவி முதலாளிகளின் கரங்களில் ஒப்படைக்கிறது, மே.வங்க போலிகளின் ஆட்சி.

பாட்டா நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு மே.வங்க அரசு தொழிலாளர்கள் மீது திணித்த துரோக ஒப்பந்தத்திற்கு சற்றும் குறைவில்லாத இன்னொரு துரோகம் தான் டன்லப் ஒப்பந்தம்!

டன்லப்: இந்திய சந்தையின் டயர் உற்பத்தி - விற்பனையில் 22 சதவிகிதத்தை கைப்பற்றிக் கொண்டு மேலும் பல்கிப்பெருகி மிகப்பெரும் கூட்டுப் பங்கு நிறுவனம். '87-'88 ஆம் ஆண்டில் மட்டும் இதன் லாபம் ரூபாய் 20.20 கோடி. '87 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முடிவடைந்த 5 ஆண்டுகால கூலி உயர்வு ஒப்பந்தத்தை அடுத்து நிர்வாகத்தின் முன், புதிய கூலி உயர்வு ஒப்பந்தத்திற்கான கோரிக்கையை தொழிலாளர்கள் முன்வைத்தனர். அக்கோரிக்கைகளை ஏற்க மறுத்த நிர்வாகம், சுமார் ஒன்றரை ஆண்டுகாலம் பேச்சுவார்த்தை மூலம் இழுத்தடித்தது. கடைசியில், சென்ற ஆண்டு ஜூலை 31ந்தேதி, மாதம் 225 ரூபாய் கூடுதல் சம்பளத்தில், வாரம் 6 நாட்கள் இருந்த வேலைநாட்களை

படிப்பகம்

www.padippakam.com

7 நாட்களாக உயர்த்தி, நிபந்தனையின்றி ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்தித்தது.

காங்கிரசின் ஐ.என்.டி.யு.சி. தொழிற் சங்கமும், போலிகளின் உள்ளூர் சி.ஐ.டி.யு. தொழிற்சங்கமும் கூட்டாக இணைந்து ஒப்பந்தத்தை ஏற்க மறுத்தன. தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுக்க, இரண்டு சங்கமும் சேர்ந்து தங்களுக்குள் ஒரு கூட்டு நடவடிக்கை கமிட்டியைத் தேர்ந்தெடுத்தன. சி.ஐ.டி.யு.வின் டன்லப் தொழிற்சங்க தலைவரே கூட்டு கமிட்டிக்கும் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். சமயம் பார்த்து வாலை நுழைத்தது மே.வங்க தொழிலாளர் நலத் துறை அமைச்சகம். நிர்வாகம் முன்மொழிந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு, டன்லப் கூட்டுக்கமிட்டித் தலைமையை நிர்பந்தித்தது. அரசு, கட்சி, சங்கத்தலைமை என்று பலமுனைகளிலிருந்தும் வந்த நிர்பந்தத்தை டன்லப் சி.ஐ.டி.யு. தலைமை நிராகரித்து போராட்டத்தை முன்னெடுத்தது. 10,000 தொழிலாளர்களின் ஒட்டுமொத்த ஆதரவுடன் சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1ந்தேதி வேலை நிறுத்தத்தை துவங்கியது உள்ளூர் சங்கத் தலைமை.

போர்க்குணத்தோடு போராட்டங்களை பல வடிவங்களில் எடுத்துச் சென்ற கூட்டுக்கமிட்டி, தங்களின் நியாயமான வேலைநிறுத்தத்தை தொழிலாளர்களிடம் விரிவாகப் பிரச்சாரம் செய்தது.

ஜெ.கே.டயர், சியட் டயர் போன்ற பல்வேறு டயர் கம்பெனிகளில் ஆண்டு உற்பத்தி செலவில் 9 சதவிகிதம் வரை தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்கும்போது டன்லப் நிர்வாகம் வெறும் 3.73 சதவிகிதம் மட்டுமே சம்பளத்திற்காக செலவு செய்வதை அம்பலப்படுத்தியது. மேலும் மற்ற டயர் நிறுவனங்களில் புதிதாக 515 ரூபாய் சம்பள உயர்வு கொடுத்திருப்பதையும், ஆனால் டன்லப் நிர்வாகம் ரூபாய் 215 மட்டுமே கொடுத்து கூடுதலாக வாரத்திற்கு ஒருநாள் வேலைப் பளுவைத் திணிப்பதையும் முறியடிக்காமல் ஓயமாட்டோம் என்று உறுதியாக நின்றது.

அதுவரை இப்போராட்டத்தைப் பற்றி மௌனம் சாதித்த சி.ஐ.டி.யு.வின் மாநில பொதுச்செயலாளர் மனோரஞ்சன் ராய் ''டன்லப் சி.ஐ.டி.யு. சங்கத்தில் நக்சலைட்டுகள் ஊடுருவிவிட்டார்கள்'' என்று பத்திரிக்கைகளுக்குப் பேட்டி அளித்தார். ஹூக்ளி மாவட்ட பிராந்திய சி.ஐ.டி.யு. கமிட்டி என்ற பெயரில் மாநில சி.ஐ.டி.யு. தலைமை, போராட்டக் கமிட்டியின் மீது அவதூறுகளை அள்ளி வீசியது. ''தொழிலாளர் நல அமைச்சரின் ஆலோசனையை தொழிலாளர்களின் முடிவுக்கு விடாமல், அவர்களிடம் விவாதிக்காமல், ஜனநாயக விரோதமாக, கூட்டுக்கமிட்டி தன்னிச்சையாக வேலை நிறுத்தத்தை தொடர்கின்றனர் என்று குற்றம் சுமத்தியது.

கூட்டுக்கமிட்டி, இக்குற்றச்சாட்டுகளை அதிகாரபூர்வமாக மறுத்தது. மாநில சி.ஐ.டி.யு. தலைமை வேலை நிறுத்தத்தை கீழிலிருந்து உடைக்கும் கருங்காலி வேலையில் பகிரங்கமாக இறங்கியது. வேலை நிறுத்தத்திற்கு எதிராக தனித்தனியாக 2000 தொழிலாளர்களிடம் கையெழுத்து வேட்டை நடத்தியது. இதற்காக இ.காங்கிரசின் ஐ.என்.டி.யு.சி. மாநிலத் தலைவரும், காங்கிரசுக் கட்சி எம்.எல்.ஏ.யுமான சுபத்ரா முகர்ஜியுடன் கூட்டுச்சேர்ந்து டன்லப் ஐ.என்.டி.யு.சி. சங்கத்திலும் கருங்காலி வேலையைச் செய்து தொழிலாளர்களின் முதுகில் குத்தியது.

போலிகளின், கட்சி, ஆட்சி அதன் தொழிற்சங்க தலைமையின் தொடர்ச்சியான அதிகார மிரட்டலுக்கும், துரோகத்தனத்திற்கும் முகங்கொடுக்க முடியாத டன்லப் சி.ஐ.டி.யு. தொழிற்சங்க தலைமை நேரடியாக ஜோதிபாசுவின் காலில் போய்விழுந்தது.

அதற்காகவே காத்திருந்த ஜோதிபாசு, மந்திரிகளை அனுப்பி முத்தரப்பு பேச்சு வார்த்தை நாடகமாடினார். கடைசியில் நிர்வாகத்தின் துரோக ஒப்பந்தத்தில் எந்த ஒரு மாற்றமும் இல்லாமல் அப்படியே தொழிலாளர்களின் மீது திணித்தது, போலிக் கம்யூனிஸ்டுகளின் தொழிற்சங்க தலைமை.

மறுபுறம், மாநில சி.ஐ.டி.யு. தலைமை தன்னுடைய துரோகத்தனத்தை மூடி மறைக்க அயோக்கியத்தனமான காரியத்தில் இறங்கியது. கட்சியின் ஜனசக்தி நாளிதழில் ''தொழிலாளர்களை கடுமையான போராட்டத்தில் இழுத்துச் சென்று கடைசியில் தொழிலாளர்களுக்கு எந்தவொரு பலனும் இல்லாத ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுவிட்டது, கூட்டு கமிட்டி'' என்று எழுதி தனது பிழைப்புவாத தொழிற்சங்க வேசித்தனத்தை நிரூபித்தது.

தங்களுடைய அரசாட்சியின் கீழ், தொழிலாளர்களின் சாதாரண கூலி உயர்வு போராட்டத்தைக்கூட சகித்துக் கொள்ளமுடியாத துரோகிகள் தான் போலிக் கம்யூனிஸ்டுகள்.

**பச்சையப்பன்**

---

## புதிய வரலாறு படைக்கும் போர்க்குணமிக்க தொழிலாளர்கள்




அந்த சோப்புப் பவுடரின் பெயர் லாக்அவுட்' (கதவடைப்பு). இது தொழிலாளர்களாலேயே தயாரிக்கப்பட்டு அவர்களாலேயே விற்பனை செய்யப்படுகிறது. பம்பாய் புறநகர் ரயில் நிலையங்களில் தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும், 'மக்கள் சக்தியை உள்ளடக்கியது; அழுக்கை எங்கிருந்தாலும் எதிர்த்துப் போராடக் கூடியது' என்ற வாசகங்கள் உறையில் பொறிக்கப்பட்ட இந்த சோப்புப் பவுடரை கூவி விற்கின்றனர்.

கூலி உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளுக்காகத் தொழிலாளர்கள் போராடியதையடுத்து பம்பாயிலுள்ள 'இந்துஸ்தான் லீவர்' என்னும் ஏகபோக சோப்புக் கம்பெனி கடந்த ஜூன் மாதம் முதலாகக் கதவடைப்பு செய்தது. 3200 தொழிலாளர்களும் அவர்களின் குடும்பங்களும் வீதியில் வீசியெறியப்பட்டனர். நிர்வாகத்தின் அச்சுறுத்தலுக்கு அடிபணியாத தொழிலாளர்கள் தங்கள் வயிற்றுப் பாட்டுக்காக ஒருபுறம் சோப்பு தயாரித்து விற்பனை செய்துகொண்டே மறுபுறம் தங்கள் கோரிக்கைகளுக்காகத் தொடர்ந்து போராடி வருகிறார்கள்.

கதவடைப்பு என்றாலே வழக்கமாக ஆலைக்கு முன் கொட்டகை போட்டு உண்ணாவிரதம் இருப்பது, வழக்குமன்றத்துக்குக் காவடி தூக்குவது, கடைசியில் தமது கோரிக்கைகளைக் கைவிட்டு நிர்வாகத்துக்குப் பணிந்துபோய் துரோக ஒப்பந்தங்களைத் தொழிலாளர்கள் மீது திணிப்பது என்ற போலிக் கம்யூனிஸ்டுகளின் நீர்த்துப் போன போராட்ட முறைகளுக்கு மாறாக புதிய வரலாற்றை எழுதி வருகிறார்கள் இந்துஸ்தான் லீவர் தொழிலாளர்கள்.

சில மாதங்களுக்கு முன்பு 'லாக் அவுட்' என்ற பெயர் பொறித்த 'டி' சர்ட்டுகளை ரூ.25க்கு தென் பம்பாய் புறநகர் ரயில் நிலையங்களில் கூவி விற்றார்கள். இப்போது 'சர்ப்' பவுடரைப் போல் தோற்றம் கொண்ட, 'நிர்மா' சோப்பு பவுடரைவிட விலை குறைவான - அதாவது ஒரு கிலோ பாக்கெட் ரூ.8.75க்கு 'லாக்அவுட்' சோப்பு பவுடரை தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் விற்பனை செய்து வருகின்றனர். இந்துஸ்தான் லீவரின் இதர கிளைகளைச் சேர்ந்த தொழிலாளர்களும், முன்னாளில் இந்நிறுவனத்தில் தொழிலாளியாக இருந்த இந்தி திரைப்பட சிரிப்பு நடிகர் ஜானி முதலானோரும் போராடும் தொழிலாளர்களுக்கு ஆதரவாக நின்று சோப்பு விற்பனை செய்கின்றனர்.

''கூலி உயர்வுகூட முக்கிய பிரச்சினை அல்ல; நக்சலைட்டுகளுடன் தொடர்புடைய தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தை இயக்குகிறார்கள்; முதலில் அவர்களை நீக்க வேண்டும்'' என்று வாதிடுகிறது நிர்வாகம். ஆனால் கம்யூனிசப் புரட்சியாளர்களின் வழிகாட்டுதலை விருப்பமுடன் ஏற்று செயல்படுத்திவரும் தொழிலாளர்கள், நிர்வாகத்தின் இச்சமரச பேரத்துக்கு இம்மியளவும் செவிசாய்க்காமல் தொடர்ந்து உறுதியாகப் போராடி வருகிறார்கள்.

ஓங்குக, இந்துஸ்தான் லீவர் தொழிலாளர்களின் வீரஞ்செறிந்த போராட்டம்!

படிப்பகம்

www.padippakam.com




# குற்றவாளிகளுக்கு ஆதரவாக ஓட்டுக்கட்சிகள் - போலீசு!

புதிய ஜனநாயகம் இதழ் 3-24ல் வந்த பிஞ்சுபெண் குழந்தைகளின் நெஞ்சை நெறித்து என்ற கட்டுரை படித்தோம். வரதட்சணைக் கொடுமைக்கு பயந்து தங்கள் பெண் குழந்தைகளை சிசுவிலேயே கொல்லும் கொடுமை நெஞ்சை உலுக்கியது. பல பத்தாயிரம் ரூபாய்களை வரதட்சணையாக பிடுங்கிய பிறகும், மருமகளை படுகொலை செய்த மிருகத்தனம் ஒன்று, எங்கள் பகுதியில் சமீபத்தில் நடந்தது. அக்கொலை வரதட்சணை படுகொலை தான் என அப்பட்டமாக அம்பலப்பட்ட பிறகும் போலீசு கும்பலின் துணையோடும் உள்ளூர் ஓட்டுப்பொறுக்கிக் கட்சித் தலைவர்களின் துணையோடும் தற்கொலையாக திரித்துப் புரட்டப்பட்டு மூடிமறைக்கப் பட்டது. பெண் இனத்தின் மீது கட்டவிழ்த்து விடப்படும் ஆண் ஆதிக்கத்திற்கு ஆட்சியதிகார கும்பல் எப்படி துணை நிற்கிறது என்பதை இச்சம்பவம் எங்கள் கண் முன்னே நிருபித்தது.

திருச்சி பொன்மலை 'சதர்ன் ரயில்வே' யில் வேலை செய்யும் திருச்சி செந்தனீர் புரத்தைச் சேர்ந்த மணிவண்ணன் என்பவருக்கும், சேலம் மாவட்டம் காளப்ப நாயக்கன் பட்டியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் முத்து என்பவரின் மகள் பானுமதிக்கும் இரண்டரை வருடத்திற்கு முன் திருமணம் நடந்தது. திருமணம் நடந்த நாளிலிருந்தே பானுமதி வரதட்சணைக் கொடுமைக்கு ஆளாகியுள்ளார். கடைசியில் 2.2.89 அன்று தீயிட்டு தற்கொலை செய்துக் கொண்டதாக கதை கட்டி அவரை உயிரோடு கொன்று விட்டார்கள் மணமகன் குடும்பத்தார். 44 பவுன்நகையும் 15 ஆயிரம் பணமும் வரதட்சணையாக தாய்வீட்டிலிருந்து கொண்டுவந்து கொடுத்தும் பானுமதியை மருமகளாக ஏற்றுக் கொள்ளவில்லை. சிறுகச் சிறுக சித்திரவதை செய்து கடைசியில் கொன்றே விட்டார்கள் பாவிகள்.


தன் வீட்டிலிருந்து 2.2.89 அன்று கணவன் வீட்டிற்கு, ஏற்கனவே கூறப்பட்ட நாட்களுக்கும் 2 நாட்கள் தாமதமாக மருமகள் வந்ததாகவும், 'ஏன் தாமதம்?' என்று கேட்டதற்கு மனமுடைந்து பானுமதி தற்கொலை செய்து கொண்டதாகவும் கதைகட்டி, போலீசு, உள்ளூர் ஓட்டுப் பொறுக்கிக் கட்சி தலைவர்கள், பத்திரிக்கைகள் துணையோடு தப்பித்துக் கொண்டார்கள், மணமகன் குடும்பத்தார்.

பானுமதி இறந்தது திட்டமிட்ட படுகொலையால்தான் என்பதற்கு ஓராயிரம் சாட்சியங்கள் நிருபணமாகியிருக்கின்றன. இருந்தும் அவை எந்த பயனும் இல்லாமல் குப்பையில் வீசப்பட்டன.

தூங்கும்போது பானுமதியின் வாயில் துணியை அடைத்து கழுத்தை நெறித்துக் கொன்றுவிட்டு, உடலை சுவற்றில் உட்கார்ந்த நிலையில் கிடத்தி பெட்ரோல் ஊற்றி உடலைத் தீய்த்துயிருக்கிறது கொலைகார கூட்டம்.

இதற்கு அத்தாட்சியாக, பிணத்தின் வாயருகே உருண்டையாக துணியும், சுவற்றில் அடுப்புக்கரி மாதிரி ஒரு இடத்தில் மட்டும் மூன்றரை அடி உயரத்துக்கு கரிப்புகையும், மணமகன் வீட்டு 'ஸ்கூட்டர்' பெட்ரோல் டேங் மூடி திறந்தும் கிடந்திருக்கிறது. போலீசுக்கு செய்தி கொடுப்பதற்கு முன்னரே பிணத்தை இடம்மாற்றி வைத்திருந்தது, எரித்த இடத்தை மறைக்க கழுவியிருப்பது இவை அனைத்தும் பானுமதி படுகொலை செய்யப்பட்டார் என்பதை தெட்டதெளிவாக நிருபித்தும், தற்கொலை தான் என போலீசு சான்றிதழ் வழங்கிவிட்டு சென்றது.

மணமகன் வீட்டார் போட்ட எலும்புத் துண்டை கவ்விய போலீசு உண்மை அறிய முற்பட்டவர்களை எல்லாம், தானே முன்னின்று பகிரங்கமாக மிரட்டியது. பெண்ணடிமைத் தனத்தைப் பற்றி வாய்கிழிய கத்தும், 'சி.பி.எம்' கட்சி உட்பட ஓட்டுக் கட்சிகளின் உள்ளூர் தலைவர்கள் அனைவரும் ''என்ன பண்றது... ஏதோ நடந்துபோச்சு.. ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்'' என்று வெட்கமில்லாமல் நழுவிச் சென்றார்கள். மாதர்களின் உரிமையை நிலைநாட்டவே தான் அவதாரம் எடுத்துள்ளதாக ஓட்டுபொறுக்கிய பாப்பா உமாநாத் தலைமை வகிக்கும் 'மார்க்சிஸ்ட்' கட்சியைச் சேர்ந்த மாதர் சங்கத்தினர் பகட்டாக ஆட்டோவில் வந்து இறங்கினார்கள். வந்தவர்கள், முதலில் டி.எஸ்.பி.யிடமும், ஆர்.டி.ஓ.விடமும் பவ்யமாக பேசிவிட்டு போகும்போது பெண்வீட்டாருக்கு அனுதாபம் தெரிவித்தனர். ''நீங்கள் ஏதாவது முயற்சி எடுத்தால் மட்டுமே, அதன்பிறகு எங்களால் உதவி செய்ய இயலும்(?!)'' என்று திருவாய் மலர்ந்தனர். அனைத்திற்கும் மேலாக, சம்பவம் நடந்த இடத்திற்கு வராமலேயே, போலீசு கொடுத்த அண்டப்புளுகை ''மண்ணெண்ணெய் ஊற்றி, தற்கொலை செய்துக்கொண்ட பானுமதி மருத்துவமனையில்(!) பரிதாபமாக இறந்தார்'' என்று செய்தி வெளியிட்டது தினகரன் பத்திரிக்கை.



பெண்சிசு படுகொலை, உடன்கட்டை ஏறுதல், வரதட்சணை படுகொலை என்று காட்டுமிராண்டித் தனமாக பெண் இனத்தின் மீது இழைக்கப்படும் கொடுமைகள், ஏதோ தனிப்பட்ட குடும்பங்களின் சொந்த விவகாரமல்ல, இது ஒரு சமூக கொடுமை, தேசீய அவமானம், இன்னும் பல பானுமதிகள் நம் கண்ணெதிரே படுகொலை செய்யப்படும் முன் உழைக்கும் மக்கள் ஒன்றுதிரண்டு போராடுவதே இக்கொடுமைகளை தடுப்பதற்கான ஒரே வழி!

☆ — மான், திருச்சி.

படிப்பகம்

www.padippakam.com

## கவர்ச்சித் திட்டங்கள்! ஊதாரிச் செலவுகள்!

# தேசம் திவாலாகிறது!

நிர்வாக எந்திரத்தை முடுக்கிவிடப் போவதாக அறிவித்து அரியணை ஏறிய முதல்வர் கருணாநிதி "காலியான கஜானாவும், காலியான களஞ்சியங்களுமே என்னை வரவேற்கின்றன. முந்தைய ஆட்சியாளர்கள் வருவாய்க்கான மூலாதாரங்களைச் சேகரிக்கத் தவறி விட்டனர்" என்று ஒப்பாரி வைத்தார்.

இது, பதவியைப் பிடித்தும் பழியை முந்தைய ஆட்சி மீது போடும் கருணாநிதியின் சாணக்கியம் மட்டுமல்ல; உண்மை நிலையும் அதுதான்! ரொக்க இருப்பே இல்லாமல் கஜானா காலியாகி இருப்பதோடு ரூ 70 கோடி கடன்தான் எஞ்சியிருக்கிறது. இது தவிர ரூ 400 கோடிக்குப் பற்றாக்குறையும் நிலவுகிறது. அரசு விழாக்களை நடத்தவோ அறிவித்த திட்டங்களை நிறைவேற்றவோ முடியாதபடி தரித்திர நிலை குடிகொண்டுள்ளது. அரசு ஊழியர்களுக்கே கூட முறையாக ஊதியத்தைப் பட்டுவாடா செய்ய பணமில்லை. ரூ 50,000க்கு மேலான எந்த முடிவையும் அரசுச் செயலரின் ஆலோசனையின்றி அறிவிக்கக்கூட முடியாது என்கிற அபாயத்தில் தமிழகம் தத்தளிக்கிறது.


தேர்தல் வெற்றியையடுத்து கருணாநிதிக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில், தமிழக மக்களின் முன்னேற்றம், நல்வாழ்வுக்காக தொடர்ந்து உதவுவோம் என்று ராஜீவ் குறிப்பிட்டதை நினைவூட்டி, சிறப்பு உதவியாக ரூ 200 கோடியை உடனடியாக அளிக்கும்படி மத்திய அரசிடம் கோரியுள்ளார் கருணாநிதி, அவரது ராஜதந்திரத்தைப் பாராட்டும் எடுபிடி பத்திரிக்கைகள், நிர்வாகத் திறமை வாய்ந்த கருணாநிதி எப்படியும் இந்த நெருக்கடியைச் சமாளித்து விடுவார் என்று நம்பிக்கை யூட்டுகின்றன.

ஆனால் மத்திய அரசு உடனடியாக உதவும் வாய்ப்பில்லை. ஏனெனில் அங்கேயும் கஜானா காலி. தமிழகத்தில் புதிய வருவாய்க்கான வழியுமில்லை. இந்நிலையில் வெறுமனே மத்திய அரசு மீதும் முந்தைய எம்.ஜி.ஆர். ஆட்சி மீதும் பழி தூற்றிக் கொண்டு குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவதைத் தவிர கருணாநிதியால் வேறொன்றும் செய்ய முடியாது.

இது தமிழகத்திற்கு மட்டுமேயான தனிச் சிறப்பான நிலைமை அல்ல; கருணாநிதிக்கு மட்டுமேயான நெருக்கடியும் அல்ல. எல்லா மாநிலங்களிலும் ஏறத்தாழ இதே நிலைமைதான். எல்லாவற்றுக்கும் மேலாக மத்திய அரசின் கஜானாவே காலியாகி ராஜீவ் அரசு விழி பிதுங்கி நிற்கிறது. 1989-90 க்கான மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீடு முடிவான போதிலும் அதை நிறைவேற்ற வழி தெரியாமல் கையைப் பிசைகிறது ராஜீவ் அரசு. மத்திய அரசு ஊழியர்களுக்கும் ராணுவச் சிப்பாய்களுக்கும் ஊதியத்தை வழங்கவே நிதியில்லை. கடந்த நவம்பர் மாதத்தில் ராணுவ உயர் அதிகாரிகளுக்கான ஊதியத்தை கையில் நிதியில்லாமல் காலம் தாழ்த்தி கொடுக்கும் படியாயிற்று. மறுபுறம் களஞ்சியமும் காலியாகி விட்டதால் முன்னணிப் பகுதியில் உள்ள ராணுவத்துக்குக் கூட குளிர்கால ரேஷனைக் கொடுக்க முடியவில்லை.

இந்த நெருக்கடிகள் முற்றிக்கொண்டிருக்கும் அதேசமயம், பட்ஜெட் பற்றாக்குறை பூதாகரமாகப் பெருகி அச்சுறுத்துகிறது. 1988-89 ம் ஆண்டின் பட்ஜெட் பற்றாக்குறை ரூ.7484 கோடியாக இருக்குமென்று எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் அது 10,000 கோடி ரூபாயாக உயரும் என்று மதிப்பிடப் படுகிறது. இது தவிர 1989-90 ம் ஆண்டுக்கான பட்ஜெட் பற்றாக்குறை ரூ 2,000 கோடியும் சேர்ந்து கொள்ளும். இதோடு அன்னிய நாடுகளுடனான வர்த்தகப் பற்றாக்குறை ரூ.8,000 கோடியும் சேர்ந்து மொத்தத்தில் ராஜீவ் அரசு மஞ்சள் கடுதாசி கொடுக்கும் நிலையிலுள்ளது. இதை உறுதிப் படுத்தும் வகையில் 9வது நிதிக்கமிஷன் தலைவர் என்.கே.பி. சால்வே "நிதிப்பற்றாக்குறையை உடனடியாக கவனித்து உரிய நடவடிக்கை எடுக்காவிடில், மத்திய அரசே திவாலாகிப் போகும்" என்று எச்சரித்துள்ளார். "நிதி மூலாதாரங்களைத் தேடி வேட்டை இயக்கத்தை நடத்தாவிடில் பொருளாதாரமே நிலைகுலைந்து போகும்" என்று அச்சுறுத்துகிறார் ரிசர்வ் வங்கியின் கவர்னர்.

கஜானா காலி என்று ஒப்பாரி வைக்கும் கருணாநிதி, வள்ளுவர் கோட்டத்தை அலங்கரித்து 27 லட்ச ரூபாய் செலவில் 'எளிமையாக' முடிசூட்டிக் கொண்டார்.



அது சரி! நிதி மூலாதாரங்களைத் தேடி எங்கே போவது என்பதுதான் பிரச்சினை. ஏற்கனவே இந்திய தொழிற்துறை மிக மோசமான நிலையில் உள்ளது. ஏறத்தாழ ஒரு லட்சம் சிறிய - பெரிய ஆலைகள் மூடப்பட்டு 10 முதல் 15 லட்சம் தொழிலாளர்கள் வேலையின்றித் தவிக்கின்றனர். விவசாயத் துறையைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை. இயற்கையோடு சூதாட்டம் நடத்தி வரும் விவசாயிகள் அடுத்தடுத்து தாக்கிய வறட்சியாலும் வெள்ளத்தாலும் பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அடுத்த பருவத்திலாவது நல்ல விளைச்சல் கிடைக்குமா என்று ஆருடம் பார்க்கிறது ராஜீவ் அரசு.

சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்? உள்நாட்டில் நிதி மூலாதாரங்களுக்குப் பற்றாக்குறை; புதிய வருவாய்க்கான வழியேதுமில்லை; எனவே வெளிநாடுகளில் கடன் வாங்கலாம் என்றாலும் அதற்கும் வாய்ப்பில்லை. ஏற்கனவே கணக்கு வழக்கின்றி கடன் வாங்கி புதை சேற்றில் சிக்கி மீள வழி தெரியாமல் தவிக்கிறது இந்திய அரசு. இந்திய அரசின் மொத்த வருவாயைவிட 4 மடங்குக்கும் அதிகமாக ஏற்கனவே கடன் வாங்கி அசலையோ வட்டியையோ திருப்பிச் செலுத்த முடியாதபடி திவாலாகும் நிலையில் இருப்பதாக இந்திய அரசின் தணிக்கை கட்டுப்பாடுத் துறையே கூறுகிறது.

வருவாய்க்கான வழிகள் அனைத்தும் அடைப்பட்ட நிலையில், 'பட்ஜெட்டுக்கு முன்னரே அயோக்கியத் தனமாக விலையேற்றம் செய்து வருவாயைத் தேடிக் கொண்டுள்ளது, பாசிச ராஜீவ் கும்பல். கடந்த ஆண்டைப் போலவே இப்போதும் நிலக்கரியின் விலையை ஒரு டன்னுக்கு ரூ 30 வீதம் உயர்த்தி அதன் மூலம் ரூ 350 கோடி வருவாயைத் தேடிக் கொண்டுள்ளது.


படிப்பகம்

நிலக்கரி விலையேற்றத்தின் விளைவாக இரும்பு, எஃகு, மின் கட்டணங்களும் உயரத் தொடங்கிவிட்டன. இதுவும் போதாதென்று ஜனவரி 25 முதலாக மத்திய அரசு அரிசி விலையையும் அநியாயமாக உயர்த்தியுள்ளது. சராசரியாக ஒரு கிலோ அரிசி ரூ 2.75 லிருந்து ரூ 3.25 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.


எதிர்க்கட்சிகள் ஆளும் தென் மாநில முதல்வர்களும், மே.வங்க முதல்வரும் கூட்டாக இந்த அநியாய விலையேற்றத்தைக் கண்டித்தனர். இம்மாநில மக்களின் முக்கிய உணவு அரிசிதான் என்பதால் இம் மாநிலங்களை ஆளும் எதிர்கட்சி அரசுகளுக்கு தலைவலியை உண்டாக்க மத்திய அரசு திட்டமிட்டே இப்படி செய்கிறது என்று குற்றம் சாட்டினார் ஆந்திர நுகர் பொருள் துணைமந்திரி. ஏனெனில், ஆந்திராவில் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்களுக்கு ஒரு கிலோ அரிசி ரூ 2 என்ற விலைக்கு சலுகை விலையில் ஆந்திர அரசு தனது கவர்ச்சித் திட்டத்தை நடைமுறைப் படுத்தி வருகிறது. இதனால் கூடுதலாக ஆந்திர அரசுக்கு ரூ.100 கோடி சுமை ஏற்படும் என்று ஒப்பாரி வைக்கிறார் ஆந்திர முதல்வர் என்.டி.ஆர்.

''மாநில அரசுகளுக்கு முறையாக நிதி ஒதுக்கீடு செய்யாமல், மத்திய அரசு எங்களை கடன் பொறியில் சிக்க வைத்து விட்டது'' என்று சமீபத்தில் கல்கத்தாவில் கூடிய 6 எதிர்கட்சி முதல்வர்கள் சாடினர். தொடர்ச்சியான வறட்சியால் மாநில அரசுகளுக்கு போதிய வருவாய் இல்லை; கடன் சுமை பெருகிவிட்டது; கஜானா காலியாகக் கிடக்கிறது; எனவே நிதித்துறையில் தன்னாட்சியுரிமை மாநில அரசுகளுக்குத் தரப்பட வேண்டும்; நாடு முழுவதும் நிதித்துறையில் சமஷ்டி முறை கொண்டு வரப்பட வேண்டும் என்று தீர்மானமே போட்டனர்.

தமது மாநில மக்கள் மீது ஏற்பட்ட கரிசனையாலும் அக்கறையாலும் எதிர்க்கட்சி முதல்வர்கள் மத்திய அரசைச் சாடவில்லை. மாறாக, தமது மாநிலங்களில் கவர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றி மக்கள் ஆதரவைப் பெற முடியாமல் போகிறதே என்ற ஆதங்கத்தினால்தான். தமது மாநிலத்திற்கு நிதி ஒதுக்காத அதேசமயம், ராஜீவ் அரசு தன் விச்சையாக கவர்ச்சித் திட்டங்களை அறிவித்து அதை அமுலாக்க நிதியும் ஒதுக்கி ஓட்டுக்களைப் பறித்துச் செல்கிறதே என்ற எரிச்சலினால்தான். அந்த ஆத்திரத்தில் ''அன்னிய நாடுகளிடமிருந்து கடன் வாங்கி தேர்தலில் வாக்காளர்களைக் கவர்ந்திழுக்க அப்பணத்தைப் பிரதமர் வாரியிறைக்கிறார்; நாட்டையே விற்றால் கூட அக்கடன்களை நாம் திருப்பியடைக்க முடியாது; இது சட்டத்துக்கே எதிரானது'' என்று எகிறிப் பாய்கிறார் ஆந்திர முதல்வர் என்.டி.ஆர்.




பிரச்சினையே அதுதான்! ஏற்கனவே நிதி நிலை மோசமாகிவிட்ட நிலையில், நடைமுறைக்குப் பொருந்தாத கவர்ச்சித் திட்டங்களை அறிவித்து அமுலாக்கியதன் விளைவாக நெருக்கடி முற்றி இன்று கஜானாவே காலியாகி விட்டது. எம்.ஜி.ஆரின் சத்துணவுத் திட்டம், இலவச வேட்டி - சேலை, குடம், பல்பொடி திட்டங்கள், என்.டி.ஆரின் ரிக்ஷா தொழிலாளர்களுக்கு டெரிகாட்டன் சீருடைத் திட்டம், கிலோ அரிசி 2 ரூபாய்க்கான திட்டம், ராஜீவின் லோன் மேளாக்கள், இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் என்று ஆளும் காங்கிரசு அரசும் எதிர்க்கட்சிகளும் போட்டி போட்டுக் கொண்டு அறிவித்து அமுலாக்கிய பலவண்ணக் கவர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் கஜானாவை விரைவிலேயே காலியாக்கிவிட்டது.




கஜானா காலியாகி நிதிநிலையில் திவாலடைந்ததற்கு ஓட்டுக்கட்சிகளின் கவர்ச்சித் திட்டங்கள் ஒரு காரணம்தான்! இன்னும் பல்வேறு வழிகளில் விரயமும் வீண் செலவுகளும் பெருகி தேசத்தையே திவாலாக்கி விட்டன.

- அமெரிக்க, ரஷிய வல்லரசுகளே பெருகிவரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள முடியாமல் ராணுவச் செலவுகளை வேகமாக குறைத்து வருகின்றன. ஆப்கானிலிருந்து ரஷ்யா தனது படைகளை விலக்கிக் கொண்டு ஓடுகிறது. அமெரிக்க குடியரசுத் தலைவர் புதியவர் புஷ் ஓராண்டுக்கு ராணுவச் செலவுகளை நிறுத்தி வைத்துள்ளார். ஆனால் ஏழை இந்தியாவின் பாசிசப் பிரதமர் ஆட்சியில் வரைமுறையின்றி ராணுவச் செலவை அதிகரித்துக் கொண்டே போவதோடு ஈழத்தை ஆக்கிரமித்து, மாலத் தீவில் அதிரடி நடவடிக்கை எடுத்ததன் மூலம் அது பூதாகரமாகப் பெருகிக் கொண்டே போகிறது. ஏனெனில், மற்றெல்லாவற்றையும் விட ஆயுத பேரத்தில்தான் ராஜீவ் கும்பலுக்கு அதிகமாக கமிஷன் கிடைக்கிறது.
- இந்தியாவை 21ம் நூற்றாண்டுக்கு இழுத்துச் செல்லும் வேகத்துடன் பாசிச ராஜீவ் அறிவித்த புதிய கொள்கைகள் அனைத்தும் கோடிக்கணக்கான ரூபாய்களை விழுங்கிவிட்டு புதை குழிக்குப் போய் விட்டன. இக் கேடு கெட்ட கொள்கைகளால் பல ஆயிரம் கோடி ரூபாய்கள் பாழானதுதான் மிச்சம்.
- பல நூறு கோடி ரூபாய்களை விழுங்கி விட்டு புறப்பட்ட வேகத்திலேயே புஸ்வாணமாகிவிட்ட ஏவுகணைத் திட்டம், அணுமின் திட்டம், நேரு - இந்திரா பெயரில் நடத்தப்படும் கோலாகலமான அரசு விழாக்கள், நினைவுப்பரிசுகள், விளையாட்டுப் போட்டிகள், இதுதவிர 300 கோடி ரூபாய் செலவில் நடத்தப்பட்ட அப்னா உத்சவ் - கலைவிழா, ராஜீவின் உள் நாட்டு - வெளிநாட்டு உல்லாச ஊதாரிப் பயணங்கள் முதலான வீண் செலவுகளும் ஆடம்பர கேளிக்கைகளும் கஜானாவைச் சூறையாடிவிட்டன.
- போலிக் கம்யூனிஸ்டுகளால் சோசலிசத்திற்கான பாதையாகச் சித்தரிக்கப்படும் அரசுத்துறை நிறுவனங்களில் அதிகார வர்க்கத்தின் ஊழலும் கொள்ளையும் பெருகி தொடர்ந்து நட்டக் கணக்கையே காட்டுகின்றன. ராஜீவ் அரசு அரசுத்துறை நிறுவனங்களை புறக்கணித்ததன் விளைவாக மேலும் நட்டம் பெருகி நிர்வகிக்கவே முடியாமல் போயுள்ளது. அதே சமயம் தனியார் துறைக்கும், பன்னாட்டு ஏக போக கம்பெனிகளுக்கும் ஏராளமாக சலுகைகள் மானியங்களை ராஜீவ் கும்பல் அள்ளிக் கொட்டியதன் விளைவாக நிதிநிலையும் பொருளாதாரமும் நிலைகுலைந்து போய் விட்டது. இது தவிர ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகள், அதிகாரிகள், இடைத்தரகர்கள், காண்டிராக்டர்களின் கொள்ளைக்காகவே உருவாக்கப்படும் பல்வேறு திட்டங்களால் பல கோடி ரூபாய் பாழாக்கப் படுகிறது.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

● ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி அரசுகளின் முதல்வர்களும் மந்திரிகளும் வீண் ஜம்பத்திற்கும் தற்பெருமைக்காகவும் நடத்தும் ஆடம்பர அரசு விழாக்கள், கண்காட்சிகள், முதலான கூத்துக்கள் வருவாயில் கணிசமான பகுதியை விழுங்கி ஏப்பம் விடுகின்றன.

கஜானா காலியாக இருந்த போதும் திராவிடப் பாரம்பரியத்துக்கேற்ப ஏறத்தாழ 27 லட்ச ரூபாய் செலவு செய்து தனது முடிசூட்டு விழாவை 'எளிமையாக'க் கொண்டாடினார் கருணாநிதி. ராஜீவ் அரசின் ஊதாரித்தனத்தைச் சாடும் என்.டி.ஆர், வறட்சியின் கொடுமையால் உழைப்பாளிகள் குடும்பம் குடும்பமாக தற்கொலை செய்து கொள்ளும் போது, ரூ.4 கோடிக்கும் மேல் அரசுப் பணத்தை வாரியிறைத்து உலகிலேயே மிகப் பெரிய புத்தர் சிலையை கோலாகலமாகத் திறந்து வைத்தார்.



உல்லாசப் பிரதமரின் ஊதாரித்தனமான அப்னா உத்சவ் - கலைவிழா. இதுவரை 300 கோடி ரூபாய் பாழ்!

உல்லாச, ஆடம்பர, ஊதாரிச் செலவுகளில் பாசிசப் பிரதமர் எட்டடி பாய்ந்தால் அவரது மந்திரிப் பிரதானிகள் 16 அடி பாய்ந்து அடுத்த ஆண்டுக்கான இருப்பையே சூறையாடி விட்டார்கள். இப்போது தும்பை விட்டு வாலைப் பிடித்த கதையாக, ''மத்திய மந்திரிகள் அனைவரும் வரையறுக்கப்பட்ட வரம்புக்குள் தங்கள் செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டும். வரும் நிதியாண்டில் எந்த மந்திரிக்கும் கூடுதல் செலவுக்காக நிதி ஒதுக்க முடியாது'' என்று நிதி மந்திரியே எச்சரிக்கிறார்.

● அனைத்து தரப்பு மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக வரியில்லா பட்ஜெட் தயாரிப்பதை இப்போது எல்லா மாநில அரசுகளும் ஃபேஷனாகக் கொண்டுள்ளன. கடந்த ஆண்டு காங்கிரசு கவர்னர் அலெக்சாண்டரும் இதே பாணியில் தமிழக பட்ஜெட்டைத் தயாரித்தார். வருவாய்கான மூலாதாரங்களைத் தேடாமல், புதிதாக வரியும் விதிக்காமல் போடப்படும் இத்தகைய வரவு - செலவுத் திட்டங்களால் பற்றாக்குறை மேலும் பெருகி கருவூலங்கள் காலியாக்கப் படுகின்றன.

''இவர்கள் எல்லாம் பூர்ஷ்வா கட்சியினர். மேற்கு வங்கம், கேரளாவைப் பார்'' என்று மார்தட்டிக் கொள்ளும் போலிக் கம்யூனிஸ்டுகளின் ஆட்சியிலாவது நிலைமை மாறியுள்ளதா என்றால், இல்லை; கேரளத்தில் காங்கிரசு கருணாகரன் ஆட்சியைத் தொடர்ந்து நிதித் துறையில் ஏற்பட்ட திவால் நிலையை 'மார்க்சிஸ்டு' ஆட்சியால் மாற்றவே முடியவில்லை. ''அரசு ஊழியர்களுக்கு சம்பளப் பட்டுவாடா செய்வதற்கு மேல் பற்றாக்குறை பட்ஜெட்டை வைத்துக் கொண்டு வேறெதுவும் செய்ய முடியவில்லை'' என்று வெளிப்படையாக அங்கலாய்க்கிறார் மே.வங்க முதல்வர் ஜோதிபாசு. கேரளத்தில் ஆட்சிக்கு வருமுன் 10 லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தருவோம் என்று கவர்ச்சி வாக்குறுதிகளை அள்ளி வீசிய போலிகள், ஆட்சிக்கு வந்து ஆண்டுகள் பலவாகியும் இன்று வரை அதை நிறைவேற்றவில்லை. மத்திய அரசு உரிய நிதி ஒதுக்காததாலேயே இந்த நிலை என்று பழியை ராஜீவ் அரசு மீது போட்டு விட்டு தந்திரமாகத் தப்பித்துக் கொண்டதைத் தவிர உருப்படியாக வேறொன்றும் செய்யவில்லை.

போலிக் கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட எல்லா ஓட்டுக் கட்சி அரசுகளின் கேடுகெட்ட ஆட்சிகளின் விளைவுதான் இந்த திவால் நிலை. குறிப்பாக சொந்த நாட்டைச் சூறையாடும் பாசிச ராஜீவ் கும்பலின் தேச விரோத மக்கள் விரோத கொள்கைகளும், அதன் பற்றாக்குறை பட்ஜெட்டுகளுமே தேசத்தை திவால் நிலைக்குத் தள்ளி விட்டுள்ளது. பற்றாக்குறையை ஈடுகட்ட வரைமுறையின்றி நோட்டு அச்சடித்ததன் விளைவாக பணவீக்கம் யானைக் காலாகப் பெருத்துவிட்டது. உலகச் சந்தையில் ரூபாயின் மதிப்பு 12 பைசாவாக குறைந்து செல்லாக் காசாகிவிட்டது. இந்த நெருக்கடிகளிலிருந்து மீள கடன் பத்திரங்களை வெளியிட்டு மக்களிடம் நிதி திரட்டுவது, வரி வசூல் வேட்டையைத் தீவிரப்படுத்துவது, புதிய வரிகளை விதிப்பது, விலையேற்றம் செய்வது, மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களையும் மானியங்களையும் வெட்டுவது, தேசத்தையே அடகு வைத்து அன்னிய நாடுகளிடம் கடன் வாங்குவது என்கிற அயோக்கியத் தனமான நடவடிக்கைகளைத் தவிர வேறு வழியேயில்லை என்று கையை விரித்து விட்டனர், முதலாளித்துவ பொருளாதார நிபுணர்கள். அதன்படி தேசத்தையே திவாலாக்கி மக்களை ஓட்டாண்டியாக்கியதோடு எஞ்சியிருக்கும் அவர்களின் ஒட்டுக் கோவணத்தையும் உருவிக் கொள்ள தயாராகி விட்டது பாசிச ராஜீவ் கும்பல்.

இதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு அடுத்து வரப்போகும் பொதுத் தேர்தலைக் குறிவைத்து இன்னும் பல கவர்ச்சித் திட்டங்களை அறிவித்து அற்ப வருவாயையும் ஏப்பம் விடுவதிலேயே குறியாய் இருக்கிறது ராஜீவ் கும்பல். இதற்கென தனியாக ஒரு நிபுணர் குழுவையே நியமித்து என்னென்ன கவர்ச்சித் திட்டங்களை அறிவிக்கலாம் என்று ஆலோசித்து வருகிறது.

''தொலை நோக்குப் பார்வையில்லாத தாறுமாறான திட்டங்களாலும், அவ்வப்போது தீர்மானிக்கும் முடிவுகளாலும் திட்டச் செலவுகள் தாறுமாறாக உயர்ந்து பொருளாதாரத்தையே நிலைகுலைய வைக்கின்றன. எனவே மாநில அரசுகள் அவ்வப்போது அறிவிக்கும் சிறப்பு நல்வாழ்வுத் திட்டச் (கவர்ச்சித் திட்டச்) செலவுகளை இனி அந்தந்த மாநில அரசுகளே ஏற்கவேண்டும்'' என்று 9வது நிதிக் கமிஷன் பரிந்துரைத்துள்ளது. கவர்ச்சித் திட்டங்களை அறிவித்து கஜானாவைச் சூறையாடும் தங்களது நோக்கங்களுக்கு எதிராக இருப்பதால், காங்கிரசல்லாத முதல்வர்கள் இதற்கு கடுமையாக எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

ஆக, 20 ஆண்டுகாலம் இருண்ட ஆட்சி நடத்தியதாக திராவிடக் கட்சிகளைச் சாடும் காங்கிரசாகட்டும், காங்கிரசின் காட்டாட்சியால் வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது என்று குற்றம் சாட்டும் தி.மு.க. உள்ளிட்ட எதிர்க் கட்சிகளாகட்டும்; அனைத்துமே மக்களின் நல்வாழ்வுக்கான தொலைநோக்குத் திட்டங்கள் எதுவுமின்றி கவர்ச்சித் திட்டங்களை அறிவித்து கஜானாவைச் சூறையாடுவதிலேயே குறியாய் இருக்கின்றன. இன்னும் பத்தாண்டுகளில் இந்த ஓட்டுக் கட்சிகளும், பாசிச ராஜீவ் கும்பலும் தங்கள் ஆட்சியைத் தொடருவார்களோ இல்லையோ; ஆனால் கஜானாவைக் காலியாக்கி தேசத்தையே திவாலாக்கிய அவர்களது 'சாதனை' மட்டும் வரலாற்றில் நிச்சயம் இடம் பெறும்!

★ மனோகரன்



படிப்பகம்

www.padippakam.com

பாசிச ராஜீவ் கும்பலுக்கு சொந்த நாட்டு மக்களைவிட தமது கூட்டாளிகளிடம் அலாதியான அக்கறை! அதனால் தான் அவர்கள் ராஜீவ் கனவு காணும் 21-ம் நூற்றாண்டை நோக்கி முன்னேறுகிறார்கள். கோடானுகோடி உழைக்கும் மக்களோ 12-ம் நூற்றாண்டின் காட்டுமிராண்டி நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

◆ ◇ ◆

நீலிமா குப்தா - நாகபுரி பல்கலைக் கழக அரசியல் விஞ்ஞானத் துறை விரிவுரையாளர். இளைஞர் காங்கிரசு ஊழியருடைய மனைவி. ஆனால் அவள் தனது பெயர் நீலிமா தேஷ் முக், தான் ஒரு மாகராஷ்டிரா மந்திரியின் இரண்டாவது மனைவி என்று சொல்லிக்கொண்டு அப்பல்கலைக் கழக ஆட்சிமன்றக்குழு உறுப்பினராகிவிட்டாள். அவள் மந்திரியின் வைப்பாட்டியாகிவிட்டாளா? அல்லது பதவிக்காக அந்த அளவு இழிந்து போனாளா? விசாரணை நடக்கிறது.

பதவிவெறியும், காந்திய காங்கிரசு கலாச்சாரமும் இணையும்போது என்ன நடக்கும் என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு.

◆ ◇ ◆

இந்திய பலூன் சங்கம், ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச பலூன் விடும் விழாவைக் கொண்டாடுகிறது. பூதாகரமான பலவண்ண பலூன்களில் சூடான காற்றை நிரப்பி அதிலே தொங்கிக்கொண்டு வானிலே விளையாடுவார்கள். கோல்ஃப் போன்று பணக்காரர்களின் விளையாட்டு. இந்த ஆண்டு 11 நாடுகளைச் சேர்ந்த 27 அணிகள் பங்குகொண்டன. வெளிவிவகாரத் துணைமந்திரி நட்வர்சிங் துவக்கிவைக்க "இந்திரா தனுசு" என்ற முதல் பலூனில் காங்கிரசு எம்.பி. விஸ்வபந்து குப்தா பறந்தார்.

சாதாரண பலூன்விட்டு விளையாடுவதற்கும் வக்கற்ற நமது குழந்தைகள் அம்மணமாக மண்ணில் விளையாடும்போது இந்த "இளசுகளின்" ஆட்டங்களைப் பாருங்கள்!

◆ ◇ ◆

ஆசியாவிலேயே மிகப் பெரிய சிகப்பு விளக்குப் பகுதி மத்திய பம்பாயிலுள்ள காமத்திபுரா. அங்கேயுள்ள ஆயிரக்கணக்கான விபச்சாரிகள் அரசு செயலகத்தின் முன் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தி முதன்மந்திரியிடம் ஒரு கோரிக்கை மனுவைக் கொடுத்தனர். வட்டிக்கடைக்காரர்கள் அக்கிரமம் செய்கிறார்கள், எனவே வாங்கிய கடனை ரத்துசெய்வது, இலவசக் கல்வி, மருத்துவ வசதி போன்றவை அவர்களுடைய கோரிக்கைகள். அவற்றைக் கவனிப்பதாகச் சொல்லி முதல்வர் சரத்பவர் மனுவைப் பெற்றுக்கொண்டார்.

விபச்சாரிகளின் மோசமான வாழ்க்கையை மட்டும் இது காட்டவில்லை. அரசே அறிந்து, அனுமதி-அங்கீகாரத்தோடு தொழில் நடத்துவதை ஏற்கிறது என்பதையும் காட்டுகிறது.

# ஒரு போர்ப்பயணம்!

நடந்த முடிந்த தேர்தலில் ஓட்டுச்சீட்டு அரசியல் கட்சிகள் செலவு செய்திருக்கும் தொகை 300கோடி ரூபாய் என்று முதலாளித்துவ பத்திரிக்கைகளே எழுதுகின்றன. அலங்கார வளைவுகள், வீடியோ சினிமாக்கள், அதிர்வேட்டுகள், ஆளுயர கட்-அவுட்டுகள், ஆரத்தி, சாராயம் - இப்படிக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்ட தேர்தல் திருவிழாவின் இரைச்சலில் எங்களது போலி ஜனநாயகத் தேர்தல் புறக்கணிப்பு மாநாட்டிற்கான பிரச்சாரம் எப்படி நடந்திருக்கும் என்று நினைக்கிறீர்கள்? இதோ, அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக உசிலம்பட்டி விவசாயிகள் விடுதலை முன்னணித் தோழர்கள் தங்கள் அனுபவத்தைக் கூறுகிறார்கள்.

போலி ஜனநாயகத் தேர்தல் புறக்கணிப்பு மாநாட்டிற்கு பிரச்சாரம் செய்யவும், நிதி வசூலிக்கவும் இரண்டு பெண்கள் உள்பட ஆறு பேர் அடங்கிய குழுவாகப் புறப்பட்டோம். திருமங்கலம், விருதுநகர், சாத்தூர், கோவில்பட்டி, அம்பாசமுத்திரம், விக்கிரமசிங்கபுரம், வசந்திபுரம், வள்ளியூர், நாகர்கோவில், கன்னியாகுமரி ஆகிய ஊர்களில் 9 நாட்களில் பிரச்சாரம் செய்துமுடிப்பது என்று திட்டமிட்டோம். செலவைக் குறைப்பதற்காக ரேஷன் அரிசி, மண்ணெண்ணெய், அடுப்பு, பானை சகிதம் புறப்பட்டுவிட்டோம்.

"தேர்தல் வேண்டாம் என்கிறீர்களே, இதை முதலிலேயே செய்திருக்கக்கூடாதா? எப்படியும் தேர்தல் நடக்கப் போகிறதே" என்று திருமங்கலத்தில் ஒருவர் அங்கலாய்த்துக் கொண்டார். மக்களை நமது கருத்துக்கு அணிதிரட்டத்தான் பிரச்சாரம் செய்கிறோமே தவிர தேர்தலைத் தடுப்பதற்கல்ல என்று அவருக்கு விளக்கினோம். சாத்தூரில் நமது பிரசுரத்தைப் படித்த சிலர் "இவுங்க மார்க்சிஸ்டு கட்சியிலேர்ந்து வந்தவங்க, இப்ப புரட்சிகர அமைப்பில் இருக்கிறாங்க" என்று தமக்குள் பேசிக் கொண்டனர்.

தோற்றத்தில் பகட்டாக இல்லாததால் ஏதோ பிழைப்புக்காகச் செய்கிறார்கள் போலும் என்று திருநெல்வேலி வியாபாரி ஒருவர் ஏளனமாகப் பார்த்தார். பிரசுரத்தைக் கையில் கொடுக்க, நாங்கள் பேசத் தொடங்கியவுடனே சத்தம் போடாமல் பின்வாங்கிவிட்டார். பிழைப்புக்காகவே அரசியல் நடத்தும் ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளின் தலைவர்களையும், உள்ளூர் ரவுடிகளையும் பார்த்து நடுங்கும் இந்த வியாபாரிகள் எங்களை பிழைப்புக்கு வந்தவர்களாக நினைத்தது வேடிக்கைதான்!

திருநெல்வேலியில் மருத்துவமனை ஊழியர் ஒருவர் பிரசுரத்தைப் படித்துவிட்டு ஆதரவு தெரிவித்ததுடன் இரவு மருத்துவமனையருகில் தங்குவதற்கும் உதவி செய்தார். ஆனால் பிரசுரத்தை எங்கேயோ மோப்பம் பிடித்த போலீஸ்காரர்கள் தேடி வந்துவிட்டனர். என்ன, ஏது விசாரித்துக் கொண்டு 'ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால்' தெரிவிக்குமாறு கூறிச்சென்றனர். போலீஸ்காரனைவிட பெரிய பிரச்சினை வேறு என்ன வேண்டும். தங்குமிடம் தெரிந்திருப்பதால் தொல்லை தரக்கூடும் என்று இரவே அந்த இடத்தைக் காலி செய்தோம்.

அந்த இரவில், அறிமுகமில்லாத ஊரில், நமது கொள்கை, நோக்கம் பற்றிய விளக்கத்தை மட்டும் கேட்டு ஒரு ரைஸ்மில் தொழிலாளி தனது முதலாளியிடம் பேசி நாங்கள் தங்குவதற்கும் சமைப்பதற்கும் ஏற்பாடு செய்தார். தேர்தலைப் புறக்கணிப்பது ஏன் என்பதை அவருக்கும் விளக்கினோம். நமது அரசியலை விளங்கிக் கொண்டவுடனே 'புதிய ஜனநாயகம்' பத்திரிக்கை வாசகரான ஒரு மருத்துவரை அவரே அறிமுகம் செய்துவைத்தார்.

பிறகு அம்பாசமுத்திரம், விக்கிரமசிங்கபுரம், வசந்திபுரம், வள்ளியூர் ஆகிய ஊர்களில் பிரச்சாரம் செய்துவிட்டு கன்னியாகுமரி சென்றடைந்தோம். சாலையோரம் பொங்கித் தின்றுவிட்டு பகவதிகோயில் வாசலில் படுத்தோம்.

நாகர்கோவிலில் எங்கள் பிரச்சாரத்திற்கு நல்ல வரவேற்பிருந்தது. நமது கருத்தை ஆதரித்த டெய்லர் ஒருவர் உழைப்பாளி மக்கள் மத்தியில் பரப்பப்பட்டிருக்கும் சாராயம் போன்ற சீரழிவுகளை வருத்தத்துடன் குறிப்பிட்டார். "இது பெரிய வேகமான அமைப்பு. துப்பாக்கி ஏந்தணும்னு சொல்ற அமைப்பு", "இதுதான் சரியானது; ஆனா இதுக்கு போலீஸ் நெருக்கடி இருக்கு" என்று பலவாறாக பிரச்சாரம் செய்த இடங்களில் மக்கள் பேசிக்கொண்டனர்.

இந்த 9 நாட்கள் பிரச்சாரத்தில் நாங்கள் கற்றுக்கொண்டது ஏராளம். ரயில் நிலையங்களிலும், கோயில்களிலும் தங்கினோம். சாலையோரங்களில் சமைத்துச் சாப்பிட்டோம். எளிமையான வாழ்க்கையின் அவசியத்தை உணர்ந்தோம். முகமறியாத ஊர்களில் பல்வேறு வர்க்கங்களைச் சேர்ந்தவர்களுடன் பேசிப்பழகியதன் மூலம் அவர்கள் அரசியலைப் பற்றியும், தங்கள் வாழ்க்கையைப் பற்றியும் என்ன கருத்து வைத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டோம், சென்ற இடங்களிலெல்லாம் எளிய உழைக்கும் மக்கள் எமது அரசியலை ஆதரித்தனர். நிதியையும் அள்ளிக் கொடுத்தனர்.

படிப்பகம்

www.padippakam.com

## இந்திய - சீன எல்லை தகராறு: மறைக்கப்பட்ட வரலாற்று உண்மைகள்:

# திபேத்தில் நேரு - சி.ஐ.ஏ. சதிகள்!

# இந்தியாவின் முதல் இராணுவ மோதல்கள்!

சீனாவின் உள் விவகாரமான திபேத்தியப் பிரச்சினையில் தலையிட்டு அங்கு ஓர் எதிர்ப்புரட்சிக் கலகத்தை மூட்டுவதன் மூலம் நேரு அரசு தனது ஆக்கிரமிப்பு நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முனைந்தது; திபேத்தை மீண்டும் மத்திய அரசுடன் இணைத்து அதன் அதிகாரத்தின் கீழ் கொண்டுவர சீனா முயன்றபோது, வடகிழக்கிந்திய எல்லையில் பிரச்சினைக்குள்ளான பகுதிகளைக் கைப்பற்றும் நடவடிக்கையில் இந்தியா இறங்கியதை முன்பே பார்த்தோம். அதேபோல வடக்கே லடாக் - அக்சாய் சின் பிராந்தியத்தில் இந்திய அரசு ஆக்கிரமிக்க முயன்ற போது கோங்கா கணவாய் மோதல் நடந்தது. அந்தச் சமயத்தில் இரண்டாவது முறையாகப் பெரிய அளவில் திபேத்தியக் கலகத்தை இந்திய அரசு தூண்டிவிட்டிருந்தது.

இந்தியாவின், மேற்கு வங்கம், டார்ஜிலிங் மாவட்டத்தில் உள்ள சிறு நகரம் காலிம்பாங். இது திபேத்துடன் சும்பி பள்ளத்தாக்கு வழியேயான வர்த்தகப் பாதையில் உள்ளது. இந்தக் காலிம்பாங் தான் திபேத்தில் கலகத்தைத் தூண்டுவதற்கான தளமாக உள்ளது என்று சீனா பல ஆண்டுகளாக குற்றஞ்சாட்டி வருகிறது. திபேத்தில் சீன அதிகாரத்தை வீழ்த்துவதற்கு அமெரிக்க மற்றும் பிற உளவு அமைப்புகள் காலிம்பாங்கைப் பயன்படுத்தி வருகிறார்கள் என்று 1956இல் நேருவிடம் நேரடியாகவே சீனப் பிரதமர் சௌ-என்-லாய் புகார் கூறினார். அமெரிக்கர்களும், கோமிங்டான் உளவாளிகளும் காலிம்பாங்கில் தமது சதி -நாச வேலைகளை அதிகப்படுத்தி வருவதாக மீண்டும் 1959இல் இந்திய தூதரிடம் நேரிலேயும், தூதரகக் குறிப்பு மூலமாகவும் சௌ புகார் கூறினார். சீனாவிலிருந்து திபேத்தைப் பிரிப்பதற்கு ஓர் ஆயுதந்தாங்கிய கலகத்தைத் துவங்க அவர்கள் முயலுவதாக சீனா கூறியது.

''சீனாவிடம் யாரோ தவறான செய்தி கூறியுள்ளார்கள்; காலிம்பாங்கில் அந்நிய நடவடிக்கைகள் இருப்பதற்கான ஆதாரமே கிடையாது'' என்று இந்திய அரசு மறுத்தது. ஆனால் 1953 ஆம் ஆண்டிலேயே, ''காலிம்பாங்கில் உளவாளிகளின் ஒரு கூடு இருக்கிறது; ஒவ்வொரு நாட்டின் உளவாளிகளும் இருக்கிறார்கள். காலிம்பாங் மக்கள் தொகையில் பெரும்பகுதி அந்நிய உளவாளிகளை அடக்கியதோ என்று சில வேலைகளில் நான் நினைத்ததுண்டு'' என்று நேருவே ஒப்புக் கொண்டுள்ளார். (17.9.53 நேருவின் நாடாளுமன்ற உரை). அதுமட்டுமல்ல 1959 ஆகஸ்டில், ''தலாய்லாமாவின் சகோதரர் உட்பட இந்தியாவிலுள்ள குறிப்பிடத்தக்க ஒவ்வொரு திபேத்திய அதிகாரியும் அவருடைய அமைச்சர்களும் திபேத்தியக் கலகப் படைத் தலைவர்களும் காலிம்பாங்கில் சந்தித்து இந்தியா மற்றும் ஐ.நாசபையின் உதவி கோரித் திட்டமிட்டனர்'' (ஜார்ஜ் பேட்டர்சன், திபேத்தில் கலகம், பக்.152-3).

''திபேத்தியக் கலகக்காரர்களுக்கு காலிம்பாங் மூலமாக ஆதரவும் வழிகாட்டுதலும் வந்தது; அதற்கு இந்திய அரசாங்கமும் உடந்தையாக, கூட்டாக இருந்தது என்பதற்கு ஆதாரம் இருக்கிறது. இந்தியாவின் பாத்திரம் கூடுதலான செயலூக்கம் உள்ளது என்பதற்கும் சில ஆதாரங்கள் உள்ளன. காலிம்பாங்கில் வாழ்ந்த ஆங்கிலேயர் ஜார்ஜ் பேட்டர்சன், திபேத்தியர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர். திபேத்திய சுதந்திரத்துக்குப் பணிபுரிவதற்காக ஒரு கலகத்தலைவரை அழைத்துவரும்படி ஜார்ஜ் பேட்டர்சனை 1954இல் ஒரு இந்திய அதிகாரி அணுகினார் என்று அவரே பிறகு எழுதியுள்ளார்'' (நிவில் மேக்ஸ்வெல்: இந்தியாவின் சீனப்போர், பக்:104).

சீனா மீண்டும் புகார் கூறியது. 1959 மார்ச்சில் திபேத்தியத் தலைநகர் லாசாவில் வெடித்துள்ள கலகம் காலிம்பாங்கில் உள்ள மைய ஆணையகத்திலிருந்து தூண்டிவிடப்பட்டது என்று சீனா பிரகடனப்படுத்தியது. அதுவரை கலகச் சதியில் இரகசியமாக ஈடுபட்டு வந்த தலாய்லாமா கும்பல் பகிரங்கமாகவே திபேத்திய சுதந்திரத்தைப் பிரகடனப் படுத்தியது. ஆனால் பெரும்பான்மையான திபேத்திய மக்கள், தலாய்லாமா தலைமையிலான பிற்போக்கு நிலப்பிரபுத்துவ, மதவெறி கும்பலுக்கு எதிராக சீன மக்கள் படையுடன் சேர்ந்து போராடினர். தப்பி ஓடிய தலாய்லாமா கும்பல் பழைய வர்த்தகப் பாதை வழியே மக்மகோன் கோட்டைக் கடந்து இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருந்த தவாங்கில் தஞ்சமடைந்தது.

இந்திய அரசு அந்தக் கும்பலை வரவேற்று, அமெரிக்க சி.ஐ.ஏ.வுடன் சேர்ந்து, திபேத்தில் மேலும் கலகத்தைத் தொடர்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டது. ''தலாய்லாமா அரசியல் தஞ்சம் கோரியதைத் தொடர்ந்து அது மட்டுமே தரப்பட்டுள்ளதாகவும் ஆனால் இந்தியாவில் அவர் அரசியல் நடவடிக்கை எதிலும் ஈடுபட அனுமதிக்கப் படமாட்டார் என்றும் பீகிங்குக்கு இந்தியா கடிதம் எழுதியது.'' ''தஞ்சமளிப்பது சர்வதேச மரபுதான்'' என்பதால் தமக்கு ஆட்சேபனை இல்லையென சௌ எழுதினார். இருந்தபோதும் இந்தியா வந்ததும் சீன அரசைத் தாக்கியும், தமது கலக முயற்சியை நியாயப்படுத்தியும் தலாய்லாமா அறிக்கைகள் விட ஆரம்பித்தார். அவை இந்திய அரசின் பிரச்சார சாதனங்கள் மூலமாக உள்நாட்டிலும், இந்தியத் தூதரகங்கள் மூலமாக வெளிநாடுகளிலும் பரப்பப்பட்டன. இதைச் சீன அரசு வன்மையாகக் கண்டித்தது.

''இந்தியாவுக்குள் வந்ததும் தலாய்லாமா வெளியிட்ட முதல் அறிக்கை உண்மையில் இந்தியர்களால் எழுதப்பட்டது என்று சீனா சந்தேகித்தது. அந்த சந்தேகத்தை ருசுப்படுத்துவதற்கான ஆதாரமும் இருந்தது. அதாவது இது நாள் வரை தலாய்லாமாவே ஏற்காதிருந்த இந்திய எல்லைச் சாவடியின் மூலமாக அவர் நுழைந்ததாக அந்த அறிக்கையில் இருந்தது'' (மேற்படி நூல்: பக்.105). இந்தியாவின் சதிவேலைகளால் ஆத்திரமுற்றது சீன அரசு. ''திபேத்தில் கலகம் செய்யும் நிலப்பிரபுத்துவ சக்திகளுக்கு இந்தியப் பிற்போக்குவாதிகள் உதவியும் ஆதரவும் தருகிறார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளின், அடியொற்றிப் போகிறார்கள். திபேத்தின் மீது விரிவாக்கப் பேராசை கொண்டுள்ளார்கள்'' என்று சீன மக்கள் காங்கிரசில் கடுமையாகச் சாடினர்.

'இந்தியச் சிறையிலுள்ள காஷ்மீரத் தலைவர் சீனாவுக்குத் தப்பி ஓடி அங்கே அவர் தலாய்லாமாவைப் போல நடத்தப்பட்டால் இந்தியாவும் இப்படித்தான் கடுமையாகச் சாடும்'' என்று அப்போதைய காங்கிரசு எம்.பியான ஜோசிம் ஆல்வா என்பவரே 1959 செப். 12ந் தேதி தனது நாடாளுமன்ற உரையில் கூறினார். இருந்த போதும் சீனாவின் சந்தேகத்தை மறுத்து, தனது புளுகு அறிக்கையை இந்தியா சீனாவுக்கு அனுப்பியது. இந்திய அரசின் பதிலை ஏற்க மறுத்த சீனா, ''சீனா இப்போது கிழக்கிலே ஒரு எதிரியை - ஒரு போர்முனையைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. தென்மேற்கேயும் ஒரு எதிரியை ஒரு போர்முனையை உருவாக்க விரும்பவில்லை. அதே போல இந்தியாவும் இரு எதிரிகளை இரு போர் முனையை சம்பாதித்துக் கொள்ள விரும்பாது என்று நம்புகிறோம்'' என்று சீனா எழுதியது. உடனே சீன தூதரைக் கூப்பிட்டு நேசத்தன்மையற்ற பண்பற்ற முறையில் சீனாவின் வார்த்தைகள் உள்ளன என்று இந்திய அரசு சாடியது.

அதேசமயம் தலாய்லாமா கும்பலை ஆதரித்தும், திபேத்தின் சுதந்திரத்தைப் பாதுகாக்கத் தவறியதாக நேருவைச் சாடியும் எதிர்க்கட்சிகள், குறிப்பாக அசோக் மேத்தா, கிருபளானி போன்றவர்களது அமெரிக்க ஆதரவு சோசலிசக் கட்சித் தலைமையில், இந்தியாவின் பல நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. சீனத் தூதரகச்


படிப்பகம்

www.padippakam.com

சுவற்றிலே மாசேதுங் படத்தை ஒட்டி அழுகிய முட்டை, தக்காளியை வீசி அவமானப்படுத்தினர். ஒரு நாட்டின் அரசுத் தலைவரை இப்படி அவமானப்படுத்துவதையும், அதன் உள்விவகாரங்களில் தலையிடுவதையும் சீனா கடுமையாக எதிர்த்தது. பல்வேறு ஒப்பந்தங்கள் மூலமாகவும், பிரகடனங்கள், அரசு தந்திர நடவடிக்கைகள் மூலமாகவும், "திபேத் - சீனாவின் ஒரு அங்கமே" என்று இந்திய அரசு அங்கீகரித்திருந்த போதும், அதற்கு எதிரான நடவடிக்கைகளை ஆதரித்தது.

திபேத்தை சீனாவிலிருந்து துண்டாடுவதற்காக, தலாய்லாமா கும்பலுக்கு விசுவாசமான கலகக்காரர்களைப் பிடித்து "விசேச எல்லைப்புற படை" என்கிற அமைப்பை சி.ஐ.ஏ.வுடன் கூட்டுச் சேர்ந்து நிறுவியது இந்திய அரசு. ஆண்டுக்கு 20 கோடி ரூபாய் வரை இன்றுவரை அந்த எதிர்ப்புரட்சிக் கூலிப்படைக்காக செலவிடுகிறது. சி.ஐ.ஏ மற்றும் பிற ஐரோப்பிய உளவு நிறுவனங்களும் நிதி - ஆயுத உதவிகள் தருகின்றன. இந்திய சீன எல்லையில் இருந்து 135 கி.மீ. தூரத்தில் உள்ள டேராடூன் நகருக்கு அருகே, சக்ராடா என்னும் மலைப்பகுதியில், "தாண்டல் அகாடமி" எனும் இராணுவப் பயிற்சி முகாம் கூட இன்னமும் உள்ளது (பார்க்க: புதிய ஜனநாயகம் '87 பிப். 1-15, பக்.10-11). இது தவிர கடந்த 30 ஆண்டுகளாக பலகோடி ரூபாய் நிதியும், பலநூறு ஏக்கர் மலைத் தோட்டங்கள், பழத்தோட்டங்கள், வசதியான குடியிருப்புகள் வழங்கி தலாய்லாமா கும்பலைப் பராமரித்து வருகிறது இந்திய அரசு.

ஆனால் சீன அரசு புகார் கூறிய போது மட்டும் மறுத்துப் பாய்ந்து சாடியது இந்திய அரசு.

அதே சமயம், வடகிழக்கே இந்தியா ஒருதலைப் பட்சமாகப் பிரகடனப் படுத்தியிருக்கும் எல்லையான மக்மகோன் கோடு வரையும் அதைத் தாண்டியும் கூட எல்லைச் சாவடிகளை இந்திய இராணுவம் நிறுவியது. இமயமலைத் தொடரில் மிக்கியிதுன் என்கிற கிராமம் ஒன்றுள்ளது. அதன் தெற்கே "த்சாரி" என்கிற ஆறு ஓடுகிறது. அதற்கு இரண்டு மைல் தெற்கே தான் மக்மகோன் கோடு வரையப்பட்டுள்ளது என்ற போதும் மிக்கியிதுன் கிராமத்தை அடுத்து பள்ளத்தாக்கின் எதிர்ப்புறம் த்சாரி ஆற்றங்கரையில் உள்ள லோங்ஜூ என்னுமிடத்தில் ஒரு எல்லைச் சாவடியை அமைத்தது. அதேபோல மக்மகோன் கோட்டைத் தாண்டி மேற்கே கின்ஜேமான் மற்றும் கிழக்கே தாமாடென் ஆகிய இடங்களிலும் எல்லைச் சாவடிகளைப் போட்டுக் கொண்டது.

"1959 ஆகஸ்ட் 25ந் தேதி மிக்கியிதுனுக்குத் தெற்கே இந்தியத் துருப்புகள் ஊடுருவிச் சுட்டனர்; திருப்பிச் சுடவேண்டியிருந்தது" என்று சீன அரசு ஒரு ஆட்சேபக் குறிப்பு அனுப்பியது. "சீனர்கள்தான் இந்தியப் பிராந்தியத்துக்குள் நுழைந்து துப்பாக்கிச் சூடு நடத்திலோங்ஜூவில் இருந்து இந்திய துருப்புகளைத் துரத்தினர். இது வேண்டுமென்றே சீனா செய்த ஆக்கிரமிப்பு நடவடிக்கை. அவசியமானால் அத்துமீறி நுழைபவர்களைச் சுடும்படி இந்திய எல்லைச் சாவடிகளுக்கு உத்திரவு போட்டுள்ளோம்" என்று சீனாவை எச்சரித்து இந்தியா குறிப்பு அனுப்பியது. உண்மையில் சர்வதேச விதிமுறைகளின்படி இந்திய எச்சரிக்கை தவறானதாகும். ஏனெனில் இருநாடுகளும் ஏற்றுக்கொண்ட, தெளிவான எல்லை வரையறுக்கப்படாத போது "அத்து மீறி நுழைந்தவர்கள்" யார் என்பதைத் தீர்மானிப்பதும், தற்காப்பு என்கிற பெயரில் சுடுவதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

லோங்ஜூ சம்பவம் பற்றி சீனாவில் விளக்கமோ வேறு விதமாக இருந்தது. "இந்தியத் துருப்புகள் சுட்டனர்; திருப்பிச் சுட்டதும் அவர்களாகவே லோங்ஜூவிலிருந்து பின்வாங்கி விட்டனர்" என்றனர். நடந்தது என்னவென்று தெரியாது. எல்லைச்சாவடிகளைத் தாக்குவது என்றால் மக்மகோன் கோட்டைத் தாண்டியுள்ள வேறு இரு சாவடிகளையும் கூட சீனா தாக்கி இருக்கும். அப்படிச் செய்யவில்லை. லோங்ஜூ சம்பவம் தற்செயலாக நடந்தது என்று வேறு நாட்டுப் பத்திரிக்கையாளர்கள், நடுவர்கள் கூறினர். அதே சமயம் "தாமரடென்" சாவடி சீனப் பிராந்தியத்துக்குள் இருப்பதாக ஒப்புக் கொண்டு இந்திய இராணுவம் பின்வாங்கியது. (சௌ-வுக்கு நேரு எழுதிய கடிதம் இந்திய அரசு அறிக்கை பக்.45, 26.9.59).

வடக்கே லடாக் - அக்சாய் சின் பிராந்தியத்திலும் எல்லைச் சாவடிகளை நிறுவுவது என்று தீர்மானித்து, "லே" என்னுமிடத்திற்கு வடகிழக்கே மூன்று இடங்களில் அமைத்தது இந்தியா. அவை சீன வரைபடத்தில் உள்ள எல்லையைத் தாண்ட வில்லை. எனினும் இந்தியா தனது எல்லையாகக் கருதிய சாங்சென்மோ பள்ளத்தாக்கைக் கடந்து லானாக் கணவாய்வரை இந்திய ரோந்துப் படை போகலாம்; அங்கும் எல்லைச் சாவடியை நிறுவலாம் என்று தீர்மானித்தது. அதற்காக எழுபது பேரை கொண்ட இந்திய எல்லைக் காவல்படை சாங்சென்மோ பள்ளத்தாக்கைக் கடந்த போது கோங்கா கணவாய் அரகே சீனர்களை எதிர்கொண்டு நடந்த சண்டையில் 9 இந்தியர் மாண்டனர்; ஏழு பேர் சிறை பிடிக்கப்பட்டனர். இந்த கோங்கா கணவாய் மோதல் பற்றியும் இந்திய சீனத் தரப்புகள் முரண்பட்ட அறிக்கைகள் தந்தனர். மலை முட்டிலிருந்து சீனர்கள் சுட்டதாக இந்தியாவும்; சீன ரோந்துக் குழுவை இந்தியர்கள் கைது செய்ய முயன்று சுடத் துவங்கியதாக சீனாவும் குற்றஞ்சாட்டினர். இந்திய ரோந்துப் படை ஆணையாளர் உட்பட பிடிபட்டவர் சீனக் குற்றச்சாட்டை உறுதி செய்தனர். ஆனால் விடுதலையாகி இந்தியா திரும்பிய போது அதையும் மறுத்துவிட்டனர்.

லோங்ஜூ மற்றும் கோங்கா கணவாய் சம்பவங்கள் குறித்து இந்தியப் பத்திரிகைகளும், எதிர்க்கட்சிகளும் சீனாவைக் கடுமையாகச் சாடினர். எல்லைப்புற மக்களை அச்சுறுத்தவும், அண்டை நாடுகள் மத்தியில் இந்தியாவின் இராணுவ பலவீனத்தையும், தனது பலத்தையும் காட்டுவதற்கான சீனமுயற்சி என்று பத்திரிக்கைகள் எழுதின. இந்தியாவுக்கு ஒரு புதிய சவால், ஆபத்து -சீனாவின் விரிவாக்க ஆக்கிரமிப்பு நோக்கங்கள் என்று எதிர்க்கட்சிகள் சாடின. நேருவின் போலி சோசலிசக் கொள்கைகளை எதிர்க்கத் திராணியற்றிருந்த எதிர்க்கட்சிகளுக்கு எல்லைத் தகராறு ஒரு வாய்ப்பாகக் கிடைத்தது. இந்தியாவின் நலன்களை விட்டுக் கொடுப்பதாகவும், ஆபத்தான சதிகார சீனர்களுடன் நேச உறவாடுவதாக நேருவைச் சாடினர்.

எல்லையில் சீனா இராணுவத்தைக் குவிப்பதாகவும், பூடான், சிக்கிம், லடாக் மற்றும் வடகிழக்கிந்தியப் பிராந்தியம் முழுவதையும் ஆக்கிரமிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் இன்னும் பலவாறு பத்திரிக்கைகள் வதந்திகளைப் பரப்பின. உடனே பூடானுக்கு உதவுவதில் தனது பொறுப்புபற்றி நேரு பிதற்றவே, அது அவசியமில்லை, பூடான் இந்தியாவின் பாதுகாப்பு நாடு அல்ல, இராணுவத் தலையீடு எதையும் ஏற்க முடியாது என்று

சக்ராடா மலைப் பகுதியில் உள்ள விசேச எல்லைப்புற படையின் "தாண்டல் அகாடமி" என்ற ரகசிய பயிற்சி முகாம்.



படிப்பகம்

www.padippakam.com

டான் பிரதமர் மறுத்துவிட்டார். இருந்தபோதும் இந்திய அரசியல்வாதிகளும் பத்திரிக்கைகளும் போட்டிபோட்டுக் கொண்டு வறான செய்திகளைப் பரப்பி மக்களிடையே தேசிய வெறியைத் தூண்டினர். அந்நச்சமயத்தில் கூட ''வடகிழக்கே ஏதோ சில சில்லரைச் சம்பவங்கள் நடந்துவிட்டன. அதையும் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். ஆனால் மக்மகோன் எல்லைக்கோடு பற்றிப் பேச்சுக்கே இடமில்லை. வடக்கே லடாக்-அக்சாய் சின் எல்லை பற்றித் தெளிவான வரையறுப்பு இல்லைதான்'' என்று நாடாளுமன்ற உரைகளின்போது நேரு குறிப்பிட்டு வந்தார் (12.9.59).

இப்படி வடகிழக்கு எல்லை பற்றி ஒருதலைபட்சமான, ஆனால் உறுதியான நிலைப்பாடும், வடக்கு எல்லைப்பற்றி தெளிவான எல்லை கிடையாது என்றும் கூறிவந்த நேரு 1959 நவம்பரில் திடீரென்று வடக்கு எல்லை பற்றியும் அடாவடித்தனமாகப் பேச ஆரம்பித்தார். 1959 நவம்பர் 4ந் தேதி இந்திய வெளிவிவகார அமைச்சகம் வெளியிட்ட குறிப்பில்தான் முதன்முதலாக விரிவான எல்லை வரையறுப்புகள் இருந்தன. ''காரகோரம் கணவாயிலிருந்து காராதாக் கணவாய் வழியாக வடகிழக்கே போகும் எல்லை, ஹாஜி லங்கார் என்னும் இடத்துக்கு 15 மைல் வடக்கே கியூன்லுன் மலைத் தொடரில் இருந்து 21250 எண்ணுடைய மலைமுகடுவரை போகிறது. அது நீளவாக்கில் 80 டிகிரி கிழக்கேயுள்ளது. இது இந்தியாவில் உள்ள இந்து ஆற்றுப்படுகைக்கும் சீனாவில் உள்ள கோடான் ஆற்றுப்படுகைக்கும் இடையேயான நீர்த்தாரையை எல்லையாகக் கொண்டது'' என்று இந்தியா வரையறுத்திருக்கிறது. ஆனால் காரகோரம் மலைத் தொடர்தான் அவ்விரு ஆற்றுப் படுகைகளுக்கும் இடையிலான நீர்த்தாரையாக உள்ளது என்று சுவீடன் ஆய்வாளர் சுவன்ஹெடின் ஓவன் லாட்மோர், இம்பீரியப் கெஸட்டர் தொகுதி 15 (1908) சேம்பர்ஸ் கெஸட்டர் (1962), கொலம்பியா என்சைக்குளோபீடியா (1963) ஆகியவை கூறுகின்றன. ஆக, இல்லாத நீர்த்தரையை எல்லையாக வரையறுத்து உரிமை கோரியது, இந்தியா.

இந்திய வெளிவிவகாரத்துறை சரித்திர பூர்வமான உரிமையும் கொண்டாடியது. ''இப்போதுள்ள இந்திய வடஎல்லை அங்கே 3000 ஆண்டுகளாக உள்ளது.. கியூலுன் மலைகளின் வடகோடியில் இருந்து பர்மாவின் கிழக்கு கோடி வரை போகும் 2500 மைல்கள் உள்ள இந்தப் பகுதி முழுவதும் இந்தியாவின் பகுதிகள் ஆகும். இந்தியாவின் வடஎல்லை இமயமலைத் தொடர்களின் முகடு நெடுகிலும் உள்ளது. இமயமலைகள் இந்தியாவின் பூகோள நிலையில் ஆதிக்கம் வகிப்பதைப் போலவே இந்தியாவின் வாழ்க்கையிலும் ஆதிக்கம் வகிப்பனவாகும்'' என்று மத ரீதியிலான உரிமை பாராட்டுகிறது.


இமயமலை இந்துக்களின் மத நம்பிக்கைகளோடு பிணைந்தது. இந்தியப் புராணங்கள், இந்திய முனிவர்கள், சம்பந்தப்பட்ட புனிதத் தலைவர்கள் நிரம்பியது என்கிற இந்தவாதம், சீனாவுக்கு எதிராக இந்திய தேசிய வெறியைத் தூண்டிவிடும் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டது. அதேசமயம், ''இப்போதைய தகராறில் சீனா பிராந்திய ஆதாயமே முக்கியமாகக் கருதுகிறது; மரபுவழியிலான எல்லை அடிப்படையில் தீர்வு காண்பதில் அதற்கு ஆர்வம் கிடையாது என்று நான் கருதுகிறேன். எனவே இந்தத் தகராறில் நியாயமான பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான வாய்ப்பை அதிகம் நான் காணவில்லை'' என்று வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களுக்கு நேரு இரகசியக் குறிப்பு அனுப்பினார் (இந்து 1959, நவ. 13)

இவ்வளவு வலுவாக இந்தியா வாதிட்டதற்குக் காரணம் இந்திய வெளிவிவகார அமைச்சகத்தின் வரலாற்றுத்துறை இயக்குநராக இருந்த சர்வபள்ளி கோபால். இவர் அப்போது அரசுத் துணைதலைவராய் இருந்த சர்வபள்ளி ராதாகிருஷ்ணனின் மகன். நேரு பரம்பரைக்கு விசுவாசமாகப் பின்னாளில் பல வரலாற்றுப் புரட்டுகளைச் செய்தவர். இந்தக் கோபால் இங்கிலாந்து ஆவணக் காப்பகத்தில் இருந்து இந்திய எல்லைகள் பற்றிய ஆதாரங்களைக் கண்டு ஆய்வு செய்து வரும்படி அனுப்பப்பட்டிருந்தார். அவர் திரும்பிவந்து அக்சாய்சின் பகுதி மீது சீனாவை விட இந்தியா பாராட்டும் உரிமைதான் வலுவானது என்று நேருவிடம் கூறினார். அப்படி என்ன ஆதாரங்களை அவர் லண்டனில் இருந்து கொண்டு வந்தார் என்பதை இந்தி அரசு அறிவிக்கவும் இல்லை. இந்திய ஆவணக் காப்பகங்களிலும் எவ்வித ஆதாரங்களும் கிடையாது.

நேரு, பந்த், மொரார்ஜி,. கிருஷ்ண மேனன் லால்பகதூர் சாஸ்திரி, ஏ.கே. சென் ஆகியோர் அடங்கிய மந்திரிசபை - வெளிவிவகாரக் கமிட்டிக்கு மட்டுமே எல்லைத் தகராறு பற்றிய இரகசியங்கள் அறிவிக்கப்பட்டன. இந்தக் கமிட்டியிடம் கோபால் தனது ஆய்வு முடிவுகளை வாய்வழி அறிக்கை மூலம் மட்டுமே தாக்கல் செய்தார். இம்மாதிரியான முடிவுகளை வரலாறு பூர்வமாக அணுகக்கூடாது; அரசியல் தீர்வு காண வேண்டும் என்றார் கோபாலிடம் கிருஷ்ணமேனன்.

பொழுதுபோக்கு சரித்திர ஆசிரியர் நேருவும், தொழில் முறை சரித்திர ஆசிரியர் கோபாலும் அரசாங்கத்தைத் தவறான திசையில் இட்டுச் செல்வதாகக் கருதிய மற்ற அமைச்சர்கள் அதை கோபாலிடமே தெரிவித்தனர். ஆனால் நேருவுக்கு எதிராக துணிந்து நிற்கும் முதுகெலும்பற்ற மந்திரிகள் அவரது முடிவை ஏற்றுக் கொண்டனர். இதைக் கோபாலே லண்டன் பத்திரிக்கையாளர் நிவில் மாக்ஸ் வெல்லிடம் ஒப்புக் கொண்டுள்ளார். (இந்தியாவின் சீனப் போர், பக்:120)

அதன்பிறகு இந்திய – சீன எல்லைத் தகராறு இந்தியாவின் கௌரவப் பிரச்சினையாகவும் தனது சொந்த மானப் பிரச்சனையாகவும் கருதிப் பேச ஆரம்பித்துவிட்டார், நேரு. ''இமயமலைகள் முழுவதையும் சீனா தனக்குப் பரிசாகத் தரும்படி கேட்கிறது என்றார். இந்தியாவின் கிரீடம்; அதன் கலாச்சாரத்திலும், இரத்தத்திலும் நரம்பிலும் ஒரு பகுதி இமயமலைகள் என்று சித்தரித்தார். இவ்வாறு சித்தரிப்பது இயல்பாகவே, 'எது வந்தாலும் இந்தியா தனது பங்கை விட்டுக்கொடுப்பதோ, எந்த இந்தியனும் அதை அனுமதிப்பதோ சாத்திமே இல்லை' என்பதாகிறது. சீனா தனது படைபலத்தின் அகங்காரம், தற்பெருமையினால் செயல்படுகிறது. சீனர்களின் சிந்தனைப்போக்கு



தலாய்லாமாவின் கூலிப்படைக்கு ராணுவக் கல்வி புகட்டும் பயிற்சிக்கூடம். மேனிலைப் பள்ளி என்ற மாற்றுப் பெயரில் இயங்கி வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com

எனக்குப் புதிராக இருக்கிறது. அவர்கள் மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப் பட்டிருக்கலாம்'' என்றார். (மேற்படி, பக்.121)

நேரு இவ்வளவு ஆத்திரமாகப் பிதற்றியதற்குக் காரணம் அவருடைய தன்மானத்தைப் பாதிக்கும் வகையில் சீனப் பிரதமர் சௌ-என்-லாய் எழுதிய கடிதம் இருந்ததாகக் கூறினார். 1959 செப். 8ந் தேதி சௌ எழுதிய அக்கடிதத்தில் எல்லை பற்றி இந்தியாவின் நிலைப்பாடுகள் அனைத்தையும் மறுத்திருந்தார். ஆங்கிலேய ஏகாதிபத்திய வாதிகளால் திணிக்கப்பட்ட எல்லை வரையறைகளை ஏற்க முடியாது; நட்பு முறையில் பேசித் தீர்த்துக் கொள்ளத்தயார் என்று எழுதியிருந்தார். சீனா உரிமை பாராட்டும் பகுதிகளை அதிகாரபூர்வமாக அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

''இந்திய - சீன எல்லை நெடுகிலும் அதிகாரபூர்வமாக வரையறுக்கப்படவில்லை என்பது உண்மையே. ஆனால் வரலாறு பூகோளம், பழக்க வழக்கம் மற்றும் மரபுகளால் எல்லையின் எல்லாப் பகுதிகளும் தீர்வு காணப்பட்டுள்ளது. மேலும் வடக்கே லடாக் - அக்சாய் சின் பகுதியில் பல இடங்களிலும் தரைப் பகுதிகளில் எல்லைக் குறியீடுகள் செய்ய இயலாதவையாக இருந்தன'' என்று நேரு பதில் எழுதினார்.


சௌ, நேரு இருவருடைய முந்திய நிலைப்பாடுகளிலும் இக்கடிதங்களில் ஒரு மாற்றம் இருந்தது. நிர்பந்தமான முறையில் இல்லாவிடில் மக்மோகன் கோட்டை எல்லையாக ஏற்பதாக நேரிலே பேசும் போது சௌ, நேருவிடம் ஒப்புக் கொண்டிருந்தார். இப்போது அதுவும் விவாதிக்க வேண்டியது; ஏனெனில் இராணுவ, அரசு தந்திர மற்றும் பிரச்சாரங்கள் ரீதியாக அதை ஏற்றுக்கொள்ளும்படி இந்தியா நிர்பந்திக்கிறது, என்றார் சௌ. லடாக் -அக்சாய் சின் பகுதி இன்னும் வரையறுக்கப் படவில்லை என்று ஒப்புக்கொண்டு வந்த நேரு, இப்போது எல்லாமே தீர்மானமாகி, வரையறுக்கப்பட்டு விட்டது; தரைக் குறியீடுகள் தான் வைக்கப்படவில்லை என்றார்.

வெளிநாடுகளில் உள்ள சில முக்கியத் தூதரகங்களுக்கு நேரு ஒரு இரகசிய சுற்றறிக்கை அனுப்பினார். அது 1969 நவம்பர் 12ந் தேதி நியூயார்க் டைம்ஸ் நாளேட்டில் வெளிவந்துவிட்டது. ''அந்த இரகசிய அறிக்கையின்படி ஆக்கிரமித்துக் கொண்டுள்ள இந்தியப் பிராந்தியத்தில் இருந்து சீனத் துருப்புக்களை வெளியேற்றுவதற்கு இராணுவத்தைப் பயன்படுத்த வேண்டி இருக்கும் என்று நேரு நம்புவதாக கருத்திருந்தது. சீனா அதன் வரலாற்றில் எந்த பிராந்தியத்தையும் விரும்பித் தானே சரணடைந்ததாகவோ, எந்த பிராந்திய உரிமை பாராட்டுதலையும் கைவிட்டதாகவோ தெரியவில்லை; இப்போதைய தகராறில் இந்தியாவிடமிருந்து சீனா பிராந்திய ஆதாயம் பெற விரும்புகிறதே தவிர மரபு வழியான எல்லைகள் அடிப்படையில் ஒரு தீர்வுகாண அல்ல. எனவே தகராறில் நியாயமான பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான வாய்ப்பு அதிகமில்லை.''

1959 நவம்பரில் இந்திய நாடாளுமன்றம் கூடியது. சீனாவின் யுத்தம் நடத்துவது பற்றி நேரு பேச ஆரம்பித்தார். யுத்தம் தொடுத்தே தீரவேண்டும் என்று வாதிட்டவர்களைக் கண்டித்த அதேசமயம் யுத்தம் சாத்தியமே இல்லை என்று கூறிவிட முடியாது என்றார். ''இந்தி சீனி பாய்பாய்'' என்று சொல்லி எல்லைப்புற ஆபத்தைக் கண்டு கொள்ளத் தவறிவிட்டார்; எல்லை விவகாரங்களை நாடாளுமன்றத்துக்கும் மக்களுக்கும் தெரிவிக்கத் தவறிவிட்டார் என்று எதிர்த்தரப்பினர் நேரு மீது குற்றஞ்சாட்டினர். ''அதிக விளம்பரமின்றி சீன அரசாங்கத்துடனான விவகாரங்களைத் தீர்த்துவிட முடியும் என்று நம்பியது தவறுதான்'' என்று ஒப்புக்கொண்டார் நேரு. அதேசமயம், ''யுத்தத்திற்கான சாத்தியப்பாடுகள் பற்றி அடிக்கடி சாடையாகக் குறிப்பிட்டார். எதற்கும் நமது ராணுவம் தயாராய் இருக்கிறது என்று தொடர்ந்து உறுதியளித்து வந்தார். அதாவது சீனாவுடன் போர் தவிர்க்க முடியாதது; அப்படிப்போர் வெடிக்குமானால் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம்'' என்று கூறிவந்தார் நேரு. (நிவில் மேக்ஸ்வெல், இந்தியாவின் சீனப்போர், பக்.133) அதன்பிறகு சீனாவுடனான சமரசம், பேச்சுவார்த்தை என்றாலே கோழைத்தனமானது,தேசிய நலன்களை விட்டுக் கொடுப்பது, தேசத் துரோகமானது என்கிற வகையிலே நாடு முழுவதும் தேசிய வெறியும், யுத்த வெறியும் தூண்டப்பட்டது. ஆளும்கட்சி - எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும், பத்திரிக்கைகளும் போட்டிபோட்டுக் கொண்டு இந்தக் கைங்கரியத்தைச் செய்து வந்தனர்.

(— தொடரும்)

## பெருகிவரும் பயங்கர வாதம்
## பிற்போக்குத் தலைவர்களின் பீதி!




அரச பயங்கரவாதம் உலக மக்களின் முழு முதல் எதிரி. எங்கெல்லாம் அரசு பயங்கரவாத அடக்குமுறை தலைவிரித்தாடுகிறதோ அங்கெல்லாம் தனிநபர் பயங்கரவாதமும் மக்கள்திரள் பயங்கரவாதமும் பெருகிக் கொண்டே வருகின்றன. உலகெங்கும் பயங்கரவாதத் தாக்குதல்கள் பெருகிவருவதையும், குறிப்பாக மேற்கு ஆசியாவிலும் லத்தீன் அமெரிக்க நாடுகளிலும்,ஐரோப்பிய நாடுகளிலும் பயங்கரவாதப் படுகொலைகள் பெருகிவதையும் அமெரிக்காவிலுள்ள பயங்கரவாத எதிர்ப்பு அரசுத் துறையினர் சமீபத்தில் மதிப்பீடு செய்து புள்ளி விபரங்களை வெளியிட்டுள்ளனர். 1987ல் சற்றே தணிந்திருந்த பயங்கரவாதத் தாக்குதல்கள் 1988 அதைப் போல இருமடங்கு உயர்ந்து இருக்கும் என்று அவர்கள் அறுதியிடுகின்றனர்.

வன்முறையை அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதாலேயே புரட்சிகர இயக்கங்களை பயங்கரவாதமென்று பிற்போக்கு ஆளும் கும்பல்கள் சித்தரிக்கின்றன. அதன்படியே அரச பயங்கரவாதிகளின் அடக்குமுறை சுரண்டலுக்கு எதிராகப் போராடும் புரட்சிகர இயக்கங்களையும், தேசிய விடுதலை இயக்கங்களையும், ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான சுதந்திரப் போராட்டங்களையும் பயங்கரவாதமென்று முத்திரை குத்துகின்றன. இந்த வகையிலே பெரு நாட்டு மார்க்சிய-லெனினிய இயக்கத்தையும், பாலஸ்தீனிய விடுதலைப் போராட்டத்தையும், ரஷிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போராடும் ஆப்கான் கொரில்லாப் போராட்டங்களையும் பயங்கரவாதமாகச் சித்தரிக்கின்றனர்.

அச்சுறுத்தும் அணு ஆயுதப் போரை விட பெருகிவரும் பயங்கரவாதப் போர்கள் தான் எல்லா பிற்போக்கு உலகத் தலைவர்களையும் ஆட்டிப் படைக்கிறது. குண்டு துளைக்காத கார்கள் - குட்டு கோட்டுகளுடன் ஆயுதந்தாங்கிய அதிரடிப்படைகள் புடைசூழத்தான் அவர்களால் வெளியே நடமாட முடிகிறது. அந்த அளவுக்கு சமீப காலங்களில் பீதியடைந்து போயுள்ளனர்.


அரச பயங்கரவாதமும் அடக்கு முறையும் சுரண்டலும் ஆக்கிரமிப்பும் அதிகமாவதைத் தொடர்ந்து அதற்கெதிராக உலகெங்கும் மக்கள்திரள் பயங்கரவாதம் பெருகவே செய்யும்; மக்கள் புரட்சி வெற்றி பெறும் என்பதையே நிகழ்ச்சிப் போக்குகள் நிரூபித்துக் காட்டுகின்றன.

படிப்பகம்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ் மதியழகன், 21, பாலாஜி சிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. அச்சிடுபவர்:

www.padippakam.com





இந்நிகழ்ச்சிக்கு சில நாட்கள் முன்பு தான் அதே பம்பாய் நகரத்தில் அப்னா உத்சவுக்கு 80 கோடி ரூபாயை வாரி இறைத்தது. மகாராஷ்டிர காங்கிரசு அரசு. அதையும் டில்லி மன்னர் ராஜீவ்தான் துவக்கி வைத்தார்.

இதோ. இவர்கள், பல ஆண்டுகள் தொடர்ந்து பஞ்சம் பட்டினியை அடுத்து பெய்த பெருமழையால், பல திடீர் நோய்களுக்கு ஆளாகியிருக்கும் நோயாளிகள். விவசாய கூலி வேலையையும், மீன்பிடித் தொழிலையும் மட்டுமே நம்பியிருக்கும் இக்கூலி ஏழைகள் குஜராத் மாநிலம் - அகமதாபாத் நகரத்தைச் சுற்றியிருக்கும் கிராமங்களைச் சேர்ந்தவர்கள். பவ் நகர், ராஜ்கோட் ஆகிய மாவட்டங்களுக்கும் பரவியிருக்கும் மலேரியா, வயிற்றுப்போக்கு போன்ற நோய்களால் இதுவரை 1700 பேர் இறந்துள்ளதாக அம்மாநிலத்தின் காங்கிரசு அரசாங்கம் கூறுகிறது. உண்மையில் சாவு பல மடங்கு இருக்கும் என பத்திரிக்கையாளர்கள் கூறுகிறார்கள்.

திடீர் வெள்ளத்தால் தண்ணீர் மூலம் பரவும் இந்நோய்களைத் தடுக்க, ''குளோரோகுயின்,'' ''டிரைமோ குயின்'' போன்ற மிக குறைந்த விலையில் கிடைக்கும் மாத்திரைகளை அரசு தாராளமாக விநியோகித்தாலே மக்களுக்கு இந்நோய்களிலிருந்து ஓரளவு பாதுகாப்பு கிடைக்கும். இந்திய மருத்துவக் கழகமும் இதைத் தான் கூறுகிறது. ஆனால், ஆளும் காங்கிரசு மந்திரிகளுக்கோ, அடுத்து யார் முதல் மந்திரி என்ற கோஷ்டி சண்டை போடுவதற்கே நேரம் இல்லை. மேலும், அவர்கள் சுருட்டுவதற்கே கஜானாவில் நிதியில்லை. மக்கள் வாழ்ந்தால் என்ன? செத்தால் என்ன?

**தேசவிரோத ஆடம்பர வக்கிர வாழ்விற்கு தேசமே சூறையாடல். அடிப்படைத் தேவைகளும் இல்லாமல் உழைக்கும் மக்கள் ஆயிரக்கணக்கில் உயிரிழப்பு. இதை எத்தனை நாள்தான் நாம் சகித்துக் கொண்டிருப்பது ?**

இந்திய - பிரெஞ்சு கலைவிழா என்ற பெயரில் பம்பாய் துறைமுகப் பகுதியில் ராஜீவ் அரசு பிரமாண்டமாக நடத்திய கேளிக்கை கொண்டாட்டம் இது. இக்கோலாகல கொண்டாட்ட ஆரம்ப நிகழ்ச்சிக்கு மட்டும் 6.7 கோடி ரூபாய் வாரி இறைக்கப்பட்டது. சுற்றுச்சூழல் விஞ்ஞானிகளின் எதிர்ப்பையும் மீறி, காற்று மண்டலத்தை நச்சுப்படுத்தும் சக்தி வாய்ந்த லேசர் ஒளிக்கதிர்கள் மூலம் கடற்கரையை ஜொலிக்க வைத்து மெய் மறந்து ரசித்தது ராஜீவ் கும்பல். மிக உயர்ந்த ஓபராய் டவர் கட்டிடத்தின் உச்சியில் அமைக்கப்பட்டிருந்த மின்னணுச் சாதனங்கள் மூலம் கண்ணைக் குருடாக்கும் லேசர் ஒளிக் கற்றைகளைப் பாயவிட்டு, அதன் ஒளியில் நான்கு வண்ண நடன அசைவுகள்; கடலில் மிதக்க விடப்பட்டிருந்த பிரம்மாண்டமான மேடைகளிலிருந்து பூப்பூவாய் வெடித்து சிதறிய வண்ண வெடி சரங்கள் என 6.7 கோடி ரூபாய் ஒரு மணி நேரத்தில் வெடித்துச் சிதறியது.




படிப்பகம்